In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# தெய்வ நியாயங்கள்

ஆருத்ராபாலன்

பூங்கொடி பதிப்பகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# தெய்வ நியாயங்கள்

## ஆருத்ராபாலன்

பூங்கொடி பதிப்பகம்

14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை - 4.
Phone : 4943074

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# நூல் விவரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தெய்வ நியாயங்கள் |
| நூலாசிரியர் | : | ஆருத்ராபாலன் |
| வெளியிடுவோர் | : | பூங்கொடி பதிப்பகம் மயிலாப்பூர், சென்னை - 600004. |
| விலை | : | ரூ. 40/- |
| நூல் உரிமை | : | ஆசிரியருக்கு |
| வெளியீடு | : | முதற்பதிப்பு : டிசம்பர் 1994<br>இரண்டாம் பதிப்பு : டிசம்பர் 2000 |
| நூல் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| பக்கங்கள் | : | 168 |
| மொழி | : | தமிழ் |
| எழுத்து | : | 10 புள்ளி |
| தாள் | : | 10.7 கி.கி. வெள்ளைத்தாள் |
| பைண்டிங் | : | சாதா அட்டை |
| ஒளி அச்சுக் கோர்ப்பு | : | வள்ளி லேசர் கிராஃபிக்ஸ், சென்னை-18. |
| அச்சிட்டோர் | : | ஜெய் கணேஷ் பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை 4. |

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# அணிந்துரை

ஆருத்ராபாலன் என்ற பெயரில் ஒரு நட்சத்திரம் எழுத்துலகில் சில காலமாக தோன்றி உள்ளது.

அழகான சொல் வீச்சுக்கள், ஆழ்ந்த கருத்துத் துளிகள், கதை நயம்கள் யாவும், அருமையாகக் கைவரப் பெற்ற இந்த எழுத்தாளர் யார்?

இவரது உண்மையான பெயர் ஸ்ரீநிவாஸ வேணுகோபால். என் பெயரே இவருக்கும் சூட்டப் பட்டிருப்பது ஆச்சர்யம்!

எங்கள் ஊரான கீழநத்தத்தில் (நெல்லை மாவட்டம்) எழுந்தருளியிருக்கும் பெருமாளின் திருநாமம் வேணுகோபாலன்.

எங்கள் கிராமத்தில் உறவு முறை கொண்ட அவருடைய பெற்றோர்கள், அவருக்கு வேணுகோபாலன் என பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

ஆருத்ராபாலன் எனக்கு மூத்தவர்.

நெல்லையிலிருந்த ம.தி.தா இந்துக் கல்லூரியில் படித்தவர்.

பம்பாயில் மத்திய ரயில்வேயில் வேலைக்குச் சேர்ந்து விட்டார். ரயில்வேயிலும், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனிலும் சுமார் நாற்பது ஆண்டுகள் பணிபுரிந்திருக்கிறார்.

அவர் மனம் ஓர் எழுத்தாளர் மனமாக எப்போதும் இருந்திருக்கிறது.

வருடங்கள் ஆக, ஆக, அது பக்குவம் பெற்றிருக்கிறது.

'ரிடையர்' ஆனதும், அந்த முதிர்ச்சி தாங்காமல் அவர் எழுத ஆரம்பித்து விட்டார்.

ஒரு சிறு வருத்தம்... என்னவென்றால் அவருக்கு சமீப காலத்தில் விழித்திரையில் குறைபாடுகள் தோன்றி பார்வை குறை பட்டிருக்கின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருந்தும் அவர் எழுதுகிறார் என்றால், அதைத் தெய்வ முடிவு என்பதன்றி வேறு என்ன சொல்வது!

வெளியே நோக்கிப் போக வேண்டிய பார்வையை அவர் உள்நோக்கித் திருப்பி விட்டார் என்றுதான் சொல்ல வேண்டும்.

அங்கே அது அருள் பார்வையாகி அவரை தெய்வங்களைப் பற்றி நிறைய எழுத வைத்துள்ளது.

எழுதுகிறார். ஏகமாக எழுதுகிறார்.

எப்படித்தான் செய்திகள் சேகரிக்கிறார் என்று தெரியாது.

ஒரு வேளை அத்தனையும் அவர் சிறு வயதிலிருந்தே சேகரித்திருப்பாரோ என்னவோ!

நாம் அறியாதது, மறந்தது இவைகளை எல்லாம் திரட்டி அற்புதமாக நமக்குத் தருகிறார்.

இந்த 'தெய்வ நியாயங்கள்' என்ற புத்தகமும் அப்படிப்பட்ட வரிசையில் ஒன்று.

நான் இவைகளைப் படிக்கும் பொழுது அதிசயப்பட்டுப் போனேன்.

அவரது சரளமான நடை பிரமிக்க வைத்தது. எங்கள் ஊர் தாமிரபரணி ஆறுபோல் சரசர நடை! அதே தெளிவு!

நல்ல பக்குவப்பட்டவர்களுக்குத்தான் இது வரும். மனதில் இவருக்கு இயல்பாகவே ஒரு பக்குவம் கூடி இருக்கிறது.

நடைக்குக் கதையும் கொஞ்சம் உதவும்.

கதையை சிக்கல் இல்லாமல் 'Instant புரிதல்' ஏற்படும்படி செய்தால்தான் நடையும் சேர்ந்து அதில் துள்ளும்.

நடைக்கு எளிமையான சொற்கள் தேவை.

இத்தகைய நடையழகுகள் அனைத்தும் அற்புதமாக அமைந்திருக்கிறது, ஆருத்ராபாலனுக்கு.

கதைப் பாணியும் நன்கு அமைய, சொல் அமைப்புகளும் கைகொடுக்க, ஒரு ஜதிமயமான அழகு நடை இவரிடம் மிளிர்ந்திருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இங்கே இந்தப் புராணக் கதைகளைப் பாருங்கள்!

குந்தியின் துயரமானாலும் சரி, வாலி வதமானாலும் சரி, அஸ்வத்தாமனின் ஆணவம் ஆனாலும் சரி. இவை போன்ற சில விஷயங்களில் தெய்வப் போக்கு நியாயமல்ல என்று அந்தக் கதாபாத்திரங்கள் மனம் நொந்து நினைக்கும் போது...

அவை அப்படி அல்ல, அவற்றை வேறு நோக்கிலும், கோணத்திலும் வேறு பல முந்தைய நிகழ்ச்சிகளிலும் வைத்துப் பார்த்தால் அவை முற்றிலும் நியாயமே என்று அழகாக நம் மனங்கள் ஒத்துக் கொள்ளும்படி விளக்குகிறார் ஆசிரியர்.

அடேயப்பா! ஆசிரியர் எவ்வளவு படித்திருக்கிறார்.

ஒவ்வொன்றிற்கும் உதாரணக் கதைகளை எங்கெங்கிருந்து எடுக்கிறார்.

சல்லியனின் உபதேசத்திற்கு, கர்ணன் என்ன மதிப்பு கொடுப்பான்?

சீதை எப்படி ஜனனம் ஆனாள்?

பீஷ்மர் வீழ்ச்சி அடைந்தது எப்படி?

யுத்தத்தில் ஜெயத்ரதன் விழுவதற்கு காற்று எப்படி உதவி செய்தது?

சகா தேவனுக்கும், சத்ருக்னனுக்கும் என்ன சம்பந்தம்?

ராதாவிற்கும், கீதத்திற்கும் தொடர்பு என்ன?

காந்தரீ செய்த தவறு என்ன?

மந்தரை ஏன் கைகேயிக்குத் தூபம் போட்டாள்?

நச்சுப் பொய்கையில் என்ன நடந்தது?

பகடைகளின் முடிவு என்ன?

சூர்ப்பனகை பூதகி உருவில் ஏன் ஜனனம் எடுத்தாள்?

குழந்தைகள் 'லவ - குசா'க்களை ராமர் ஏன் குலாவ முடியவில்லை?

ஜாம்பவதியும், சத்யபாமாவும் எப்படி கண்ணனுக்கு உறுதுணையானார்கள்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புலேந்திரன் எப்படி சதியை மதியால் வென்றான்?

தாமிரபரணி நீர் எப்படித் தெள்ளத் தெளிந்து ஓடுகிறது?

திரௌபதி ஐவரைத் திருமணம் செய்து கொண்டாலும், ஏழு பதிவிரதைகளில் ஒருத்தியாக ஏன் கருதப்படுகிறாள்?

'பாஞ்ச ஜன்யம்' சங்கின் பின்னணிஎன்ன?

ஏகலைவனுக்குக் கண்ணன் என்ன புது வித்தை போதித்தார்?

அத்தனை அரிய விஷயங்களையும் கதைகளில் மிகத் தெளிவாக விளக்கி இருக்கிறார் ஆசிரியர்.

இதைப் படித்த பிறகு தெய்வ நியதி எங்கும் எப்பொழுதும் ஏதோ ஒரு வகையில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை உணர முடிகிறது.

அந்த தெய்வ இயக்கத்தில் நாம் வெறும் பகடைக்காய்கள் என்றும் ஆட்டுவிக்கப்படும் பொம்மைகள்தான் என்றும் புரிந்து கொள்ள முடிகிறது.

ஆசிரியரின் உத்திகளும், பிரச்னையைத் தொகுக்கும் விதமும், அதை முடிக்கும் பதமும், அற்புதமாகவும் நேர்த்தியாகவும் அமைந்துள்ளன.

தமிழ்நாட்டில் 'பி.ஸ்ரீ'க்குப் பிறகு ஒரு நல்ல புராணக் கதை எழுத்தாளர் கிடைத்திருக்கிறார்.

ஓய்வு பெற்ற ஆருத்ராபாலன்வீட்டில் ஓய்வாக இருந்து விடாமல், தமது மன எழுச்சிகளை எழுத்து வடிவில் உருவாக்கி, வாசக உலகத்திற்கு அளிக்க முன் வந்திருக்கிறார்.

புராணக் கதைகள் மட்டுமல்ல, சமூகக் கதைகள் நாவல்கள் எழுதுவதிலும் இவர் வல்லவர்.

நாவல்கள் பலவும், சிறுகதைத் தொகுப்பு ஒன்றும் வெளிவந்துள்ளன.

'சசிகலா' என்ற நாவல், 1992-ம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு. தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த புதினத்திற்கான இரண்டாவது பரிசைப் பெற்றுள்ளது.

திறம் வாய்ந்த இந்த் ஆசிரியரின் பேசும் பேச்சிலேயே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உற்சாகமும், சுறுசுறுப்பும் கொந்தளிக்கும்.

எழுத்து உலகில் அவர் இன்னும் பல வித்தைகள் செய்வதற்குரிய திறன் பெற்றவர்.

அவரது படைப்புகளை ஆவலுடன் எதிர்பார்க்கும்படி இந்தப் படைப்பு அமைந்து இருக்கிறது.

'தெய்வ நியாயங்கள்' மூலம் தெய்வமே அவர் எழுத்தின் வழியே உலகுக்கு நியாயங்களை இங்கே கூறியுள்ளது.

ஸ்ரீ.வேணுகோபாலன்.

சென்னை
5.12.94

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# இவர்கள் சொன்னவை

1. சூதாடி இழந்ததை வாதாடிப் பெறுவதைவிடப் போராடி மீட்டதுதான் உன் பிள்ளைகள் ஐவருக்கும் கௌரவம்... கர்ணன்.

2. சூதில் வல்லவனான உனக்கும் மேல் ஒரு வல்லவன் இருக்கின்றான்... அவன்... அவன்... அவனாகத்தானிருப்பான் துரியோதனன்.

3. கண்ணன் கைபட்டால் வேம்பும் கரும்பாகும்........... பீஷ்மர்.

4. உன் மொழிகள் என் பேச்சு, உன் பாடங்கள்தான் என் செயல்பாடு, நீ காட்டும் வழிதான் என் பாதை, உன் சிரிப்பு என் உயிர்த்துடிப்பு... சகாதேவன்.

5. இப்பொழுது உன்னிடமிருப்பது ஒன்று வீரம். அதை என் அண்ணனிடம் ஈடுவைத்து விட்டாய். மற்றொன்று நீ தானம் செய்து சேகரித்த புண்ணியம் அதை புருஷோத்தமனைத் தவிர வேறு யாரும் பெற்றுக் கொள்ள முடியாது.

6. ஒருவன் பொய் சொல்லி லாபமடைந்தால் அவனைப் போலவே நாமும் பொய் கூறி வாழ்வது அழகல்ல......... யுதிட்டிரன்.

7. அடுத்த அவதாரத்தில் உன்னையே வளர்த்து உலகம் புகழும் வளர்ப்புத் தாயாக. வாழ வரம் தா..... கைகேயி.

8. கணவனின் மந்திரியாக மாறி அவனுக்கு தர்ம வழிகளைக் காட்டி, அவனை அதன்வழி நடக்க வைப்பவள்தான் தர்மபத்தினி... வியாசர்

9. பணிந்து போவது பண்பு, பதறுவது பண்பற்றது என்பர்....... கண்ணன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# கருத்துத் துளிகள்

ஊழ்வினை என்ற நூலில் தொங்கும் நாம் 'அவன்' இச்சைப்படி ஆடும் பொம்மைகள்.

நண்பன் நற்பதவிக்கு வந்தவுடன், அவன் உதவியை நாடுவது, நட்பை லஞ்சமாக்குவதற்கு ஒப்பாகும்.

கால்களில் விலங்குகளை மாட்டிக் கொண்டு ஓட முடியவில்லையே என்று சொன்னால்... அது தர்க்கமாகாது குதர்க்கமாகும்.

மானிட ஜனனம் மாயை என்ற வலையினுள் சிக்கிக் கொண்டு தன்னிஷ்டப்படி காரண காரியங்களை கற்பனை செய்து கொண்டு தன்னையே ஏமாற்றிக் கொண்டு பிறவிச் சூழலில் தத்தளிக்கின்றது.

உழைக்காமல் உண்பது கூடாது. சொகுசாய், சோம்பேறியாய் திரிந்து வாழ்வது உடலை வளர்க்கும், உள்ளத்தை அரித்து விடும்.

தன்னைப் பற்றிதானே பேசுவது எப்படி சரியான தீர்ப்பாகும்...? மற்றவர்கள் கூறுவதுதான் உத்தமமான விமர்சனம் தம்பட்ட மடித்துக் கொள்வது வெறும் அகங்காரம்.

கர்ம பலனை அனுபவித்துத்தான் ஆக வேண்டும். சர்ப்பம் தன் தோலை உரிப்பது போல், கர்ம பலனை உரித்து உதறி எறிந்துவிட முடியாது. பிறவியை ஒத்த ஜீவன் தன் கர்மங்களை கரைத்து விட்டுத்தான் முக்தி பெறமுடியும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# பதிப்புரை

புராண இதிகாசங்களை புதிய கோணத்தில் சொல்கிறது இந்தத் தெய்வ நியாயங்கள் என்ற கதைத் தொகுப்பு.

பெரும்பாலான கதைகள் ஆன்மீகம் சம்பந்தப்பட்ட வார, மாத இதழ்களில் வெளிவந்தவை.

ஆசிரியர் ஆருத்ராபாலன் அவர்கள் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர். ம.தி.தா இந்துக் கல்லூரியில் படித்தவர்.

பணி பம்பாய்.

ஓய்வு சென்னை.

பம்பாய் வாசத்தின்போது இடையிடையே நாடக அரங்கேற்றங்கள்.

எழுத்துலகில் திடீர் பிரவேசம். ஆனால் குறுகிய காலத்தில் பல புதினங்களையும் கதைகளையும் படைத்து சாதனை புரிந்தவர்.

இவரது ''சசிகலா'' என்ற நாவல் தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் இரண்டாவது பரிசைப் பெற்றுள்ளது.

சென்னை வானொலி ரசிகர்களுக்கு கதைகள் மூலமும் கட்டுரைகள் மூலமும் அறிமுகமானவர்.

விரைவில் சென்னை தொலைக்காட்சி ரசிகர்களுக்கும் இவர் அறிமுகமாகக் கூடும்.

தமிழ் இலக்கியங்களையும், புராண இதிகாசங்களையும் கற்றுத் தேர்ந்தவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசிரியரின் ஐம்பதாண்டுகால அனுபவங்கள் முதிர்ந்து புதினங்களாகவும் கட்டுரைகளாகவும் புதிய உத்தியோடு மலர்கின்றன.

இவரது தெளிவான கருத்தும் இன்றைய இளைய தலைமுறையினர்க்கே உரிய துள்ளல் நடையும் வாசகர்களைக் கவரும் அம்சங்களாகும்.

இவரது படைப்புகள் பல தொடர்ந்து வெளிவர இருக்கின்றன.

வே.சுப்பையா,
பூங்கொடி பதிப்பகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# பொருளடக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1. | தெய்வ நியாயங்கள் | (பொன்மலர்) | 13 |
| 2. | மீண்டும் இரண்டு வரங்கள் | (பொன்மலர்) | 22 |
| 3. | ஊழ்வினை | (குண்டூசி) | 26 |
| 4. | வாசுதேவன் வகுத்த வழி | (பொன்மலர்) | 34 |
| 5. | பேழையில் பொதிந்த ரகசியம் | (குண்டூசி) | 41 |
| 6. | பிதாமகர் பீஷ்மர் | (குண்டூசி) | 48 |
| 7. | காற்றின் கூற்று | (பொன்மலர்) | 63 |
| 8. | தொண்டர்க்கடியான் | (குண்டூசி) | 69 |
| 9. | ஒரு காதல் காவியமாகிறது | (குண்டூசி) | 73 |
| 10. | கர்ணனும், விகர்னனும் | (பொன்மலர்) | 82 |
| 11. | கண்கட்டு | (பொன்மலர்) | 89 |
| 12. | வசிட்டர் இயக்கிய நாடகம் | (குண்டூசி) | 96 |
| 13. | நச்சுப் பொய்கையில் | (பொன்மலர்) | 102 |
| 14. | பகடைகள் சிரித்தன | (பொன்மலர்) | 109 |
| 15. | தீராத தாபம் தீர்ந்தது | (காமகோடி) | 117 |
| 16. | ஆச்ரமத்தில் அக்னிக் குஞ்சுகள் | (குண்டூசி) | 122 |
| 17. | ஒரு கல் இரு கனி | (விழாமலர்) | 129 |
| 18. | வீரத்தை யாசித்தவன் | (பொன்மலர்) | 135 |
| 19. | கைலையில் ஓர் ஊடல் | (காமகோடி) | 142 |
| 20. | அக்னி தந்த அம்மன் | (குண்டூசி) | 147 |
| 21. | சங்கு ஒன்று கண்டேன் | (பொன்மலர்) | 154 |
| 22. | குருபக்தி | (பொன்மலர்) | 162 |

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# தெய்வ நியாயங்கள்

மயன் அமைத்துக் கொடுத்த இந்திரப்ரஸ்த மாளிகையின் மேல்மாடத்து நிலா முற்றத்தில் பாண்டவர்கள் ஐவரும், அவர்கள் பத்தினி திரௌபதியும் அமர்ந்திருந்தனர். குந்திதேவியும் அவர்களுடன் அங்கே வீற்றிருந்தாள்.

குருக்ஷேத்திரப் போர் முடிந்து, பாண்டவர்கள் வெற்றியின் பெருமையில் மகிழ்ந்தார்கள்... இல்லை... ஐவரில் ஒருவர் மட்டும் வெற்றிப் பெருமிதத்தில் குதூகலிக்காமல் சிறிதே கலங்கிய மனதுடன் மௌனமாக இருந்தார்.

தர்மனைத் தவிர மற்றவர்களும், பாஞ்சாலியும் அளவிலாத மகிழ்ச்சியில் உரையாடிக் கொண்டிருந்தார்கள். துயரம் என்ற தூரிகையால் தீட்டப்பட்ட ஓவியமாய் எதையோ பறிகொடுத்தவள் போல் சிலையாய் உட்கார்ந்திருந்தாள் குந்தி.

புத்திர சோகம் அவள் மனதை அரித்துக் கொண்டிருந்தது. ஆமாம் கர்ணனின் மரணம் குந்தியின் உள்ளத்தை உருக்குலைந்திருந்தது.

கன்னிப் பருவத்தின் அறியாமையால் ஈன்றெடுத்த சூர்யபுத்திரனை... பிறந்த வினாடியே பிரிந்துவிட்ட சோகம் நீறுபூத்த நெருப்பாய் நெஞ்சின் ஆழத்தில் உறங்கிக்கொண்டிருந்தது.

யாருமே அறியாத அவளுடைய அந்த அந்தரங்கத்தை அவள் மன ஆழத்தில் புதைக்கப்பட்டு மறைந்து விட்ட, மறந்துவிட்ட ரகசியத்தைத் தான் மறுபடியும் சந்திப்போம் என்று எண்ணாத ஒரு சூழ்நிலையில்...

பாண்டுவின் பத்தினி என்ற ஓர் அந்தஸ்தில், ஹஸ்தினா புரத்தில்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy.


விதுரனுடைய மாளிகையில்... தன்னுடைய பிள்ளைகள் மூவருக்கும், மாத்ரியின் பிள்ளைகள் இருவருக்கும் ஐவர்களுடைய புதுவாழ்வுக்கு பிரார்த்தனை செய்து கொண்டிருக்கும் நேரத்தில்... பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் யுத்தம் நடக்கத்தான் வேண்டும் என்ற காலகட்டத்தில்...

விதுரனின் இல்லத்தில் கண்ணன் குந்திதேவியைச் சந்திக்கிறான்.

அந்தரங்கமாக அவளுடன் பேசி அவளை அங்கதேச மன்னனான கர்ணனிடம் அனுப்பி வைக்கிறான்.

தாயும் மகனும் சந்தித்தார்கள். குந்தி எவ்வளவோ வாதாடிப் பார்க்கிறாள். கர்ணன் மசியவில்லை. அவன் கடைசியில் தன் தாயுடன் பேசிய வார்த்தைகள் இன்னும் அவள் காதில் ரீங்காரமிட்டுக் கொண்டே இருக்கின்றன. அவன் சொன்னான்...

''அம்மா! தர்மன் சூதாடித் தன் அந்தஸ்து, கௌரவம், ராஜ்ஜியம் எல்லாவற்றையும் இழந்து விட்டான். என் உயிர் தோழனான வணங்காமுடி துரியோதனனிடம், விதுரனும், வாசுதேவனும் எவ்வளவோ வாதாடிப் பார்த்தார்கள். மன்றாடியும் கேட்டார்கள். அவன் அசையவில்லை. அவன் உயிர் கொடுத்து வளர்த்த அவனுடைய நண்பன் நான்... அசைவது என்பது முடியாது... அசைந்து கொடுப்பது என்பதும் நடக்காது... அம்மா! சூதாடி இழந்ததை வாதாடிப் பெறுவதைவிடப் போராடி மீட்பதுதான் உன் பிள்ளைகள் ஐவருக்கும் கௌரவம்... போர் நிச்சயம்... போரின் முடிவில் விதி இருந்தால் மறுபடியும் சந்திப்போம்...''

போர் முடிந்து பாண்டவர்கள் வெற்றி வாகை சூடினர். மாவீரன் கர்ணன் யுத்த பூமியில் வீரமரண மெய்தினான்.

''அம்மா! கர்ணன் என் அண்ணன் என்று ஒரு வார்த்தை நீ சொல்லியிருந்தால்... உனக்கு இந்த புத்திர சோகம் ஏற்பட்டிருக்குமா?'' என்று உள்ளம் உருகப் பேசினான் கர்ணனை மாய்த்த காண்டீபன்.

''தாயே! கர்ணன் உன் மூத்தமகன் என்று சொல்லாமல் எங்களை ஏமாற்றி விட்டாயே? அவனைப் பலி கொடுத்துத் தான் நாங்கள் வெற்றி பெற வேண்டுமென்று, நினைத்த உன் மனம்... கல்லாலானதா — இல்லை இரும்பாலானதா? தவறு செய்து விட்டாய்... தாயே!''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


என்று யுதிட்டிரன் புலம்பினான்.

''தர்மா! பார்த்தா!... நான் பாவிதானடா! கண்ணனின் வார்த்தையைக் கேட்டேன்... என் மகன் கர்ணனின் கட்டளைக்கு அடிபணிந்தேன்... ஆமாம் அந்த மகனின் ஒரே ஆசை, அதையாவது துணிவுடன் நிறைவேற்ற வேண்டும் என்று என் மேல் ஆணையிட்டுக் கேட்டுக் கொண்டான்... பிறந்தவுடன் பிரிந்த பிள்ளையின் இறப்புக்குப் பின்தான் அவன் என் மகன் என்று பகிரங்கமாகக் கூறவேண்டுமென்ற அவன் வேண்டுகோள்... என்னைக் கட்டிப்போட்டு விட்டது... தர்மா! உன் தாய்க்கு மன்னிப்பே கிடையாது...''

தேம்பித் தேம்பி அழத்தொடங்கினாள்.

''அம்மா!'' அன்பான குரலில் ஆதுரத்துடன் அழைத்தான் சகாதேவன்.

அவன் பக்கம் திரும்பினாள் பாண்டுவின் பத்தினி. இளையவனின் இதமான குரல் அவளுடைய புண்பட்ட நெஞ்சத்தை தென்றலாய் வருடியது.

''அம்மா!... மாயவன், மாதவன், மதுசூதனன், ஆயர் குலத்து அண்ணல் உங்களைக் கட்டாயம் மன்னிப்பான்.''

''அவன் சொற்படி நடந்ததனால்தான் நான் என் அன்பு செல்வத்தை இழந்தேன். சூழ்ச்சிக்காரன்...''

''இல்லை தாயே! அவன் சூழ்ச்சிக்காரனில்லை... சூத்திரக்காரன்... அவன் ஆட்டுவித்த நாடகத்தில் நாம் எல்லோரும் ஆடுகின்றோம்... அதில் நீங்களும் அவன் நினைத்த மாதிரியே உங்கள் பாகத்தை ஆடினீர்கள்...''

''சகாதேவா! வாசுதேவனுக்கு வக்காலத்து வாங்கி அவனைப் புகழாதே... அவன் என்னை வஞ்சித்து விட்டான்.''

''இல்லை... ஒரு நாளுமில்லை... அவன் யாரையும் எப்பொழுதும் வஞ்சிக்க மாட்டான். அவன் பரந்தாமன்... அவன்தானே உங்கள் மகன் கர்ணனை அடையாளம் காட்டினான்...''

''அந்த உண்மையை அவன் சொல்லாமலே இருந்திருந்தால்...''

''நியாயங்கள் நிலை பெற்றிருக்காது. கடந்து போன யுகத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சத்தியவாக்கைக் காப்பாற்ற தர்மம் தடுமாறியது போல் ஒரு தோற்றம் ஏற்பட்டது... இந்திரன் அதிர்ந்து போய் நின்றான்... அப்பொழுது 'அரி'யான திருமால் மற்றுமொரு நாடகத்தை இயக்கி தர்ம நியாயத்தைச் சமனப்படுத்துவதாகத் திருவாய் மலர்ந்தருளினார்... அதுதான் இப்பொழுதும் நடந்தேறியது.''

''அன்புத் தம்பியே! நீ என்ன சொல்கிறாய்? எதுவுமே விளங்கவில்லையே!'' என்று வியப்புடன் கூறினான் யுதிட்டிரன்.

''மாத்ரி மைந்தனே! மாதவனின் மனசாட்சியே! நீ அறியாதது ஏதுமில்லை... விவரமாய் சொல்லக் கூடாதா?...'' என்ற குந்தி, தன் அழுகையை நிறுத்திவிட்டு, கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''ஆமாம் தம்பி! விவரமாய் நீ சொன்னால் நம்மைச் சூழ்ந்திருக்கும் விசன மேகங்கள் விலகி ஓடிவிடும்'' என்று கூறினான் வீட்டுவன்.

''கூறலாம்!... ஆனால்...''

''ஆர்யபுத்திரா! ஆனால் என்று ஏன் இழுக்கிறீர்கள்?'' என்று ஐவரின் பத்தினியும் தன் ஆர்வத்தை வெளியிட்டாள்.

''பாஞ்சாலி! பரமனின் லீலா வினோத நாடகங்களை அவனுடைய அனுமதியின்றி எப்படிக் கூறுவது? அது அபசாரமன்றோ'' என்று மிகவும் அமைதியாகக் கூறினான். ஆர்வத்தைத் தூண்டி விட்டான். ஆவலுடன் காத்திருப்பவர்களின் நாடியைச் சுண்டிப் பார்த்தான்.

மௌனம்.

மௌன மோனத்தில் அவர்களுடைய மனங்களில் முகுந்தன் தோன்றினான்.

புல்லாங்குழலின் இன்னிசை நிலாமுற்றத்தில் தென்றலுடன் தழுவிக்கொண்டே தவழ்ந்து வந்தது.

தாமோதரன் தோன்றினான்.

கரம் கூப்பி கண்ணனை வரவேற்றார்கள்.

''ராஜமாதா குந்திதேவியும் பிள்ளைகளுடன் நிலவை ரசித்துக் கொண்டிருந்தார்கள் போலிருக்கிறது!''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


''நந்தகுமாரா! நையாண்டி வேண்டாம்! உன் நியாயங்களைக் கேட்பதற்கு ஆவலாக நிற்கிறோம். நீ அனுமதி அளித்தால்தான், சகாதேவன் கூறுவானாம்!'' - குந்தி

''ஓ! அப்படியா!''

''ஆமாம்! பாஞ்சசன்யா! தங்கள் அனுக்ரஹம் இருந்தால் தானே நான் பேசமுடியும்'' அடக்கத்துடன் கூறினான் சகாதேவன்.

''சொல்! நானும் கேட்கின்றேன்'' என்றான் சக்ரதாரி.

சக்கரம் பின்நோக்கிச் சுழன்றது...

திரேதாயுகம்.

திருமால் ஸ்ரீராமனாக அவதரித்து வனவாசம் செய்கின்ற காலத்தில்... சீதாப்பிராட்டியைப் பிரிந்து சஞ்சலமடைந்திருந்த நேரத்தில்...

சூர்ய புத்திரனான சுக்ரீவனின் தோழமை அவரை நாடி வந்தது.

தாரத்தைப் பிரிந்த மானிடரூபியான மஹாவிஷ்ணுவும், தாரத்தைக் காண முடியாமல் தவிக்கும் வானர ரூபியான சூரிய புத்திரனும் ஒருவருக்கொருவர் உதவுவதாக சத்யம் செய்து கொண்டனர்.

முதலில், கிஷ்கிந்தையில் அரசாண்டு கொண்டிருந்த வாலியை வென்று, சுக்ரீவனுக்கு மகுடாபிஷேகம் செய்து வைப்பதாக இராமன் வாக்குறுதி அளித்தார்.

வாக்கு பரிபாலனம் செய்வதையே அவதார மகிமையாகக் கொண்ட கோசலை மைந்தன் சுக்ரீவனை வாலியுடன் யுத்தம் செய்யுமாறு கூறினார்.

அண்ணனும் தம்பியும் கடும் போர் புரிந்தனர். வாலியின் பராக்ரமத்திற்கு முன்னால் சுக்ரீவன் தாக்குப்பிடிக்க முடியவில்லை. தம்பி சுக்ரீவன் தளர்ந்து போனானன். வலிமைமிக்க வாலியால் தாக்கப்பட்டு வலுவிழந்து நின்ற இளையவன் ஏக்கமாய் இராமனைப் பார்த்தான். அந்தப் பார்வையே அவலமாய் இருந்தது.

பார்வையாலேயே, ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியான பரந்தாமனைச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


சரண் அடைந்தான் சுக்ரீவன். சரணாகதி எனத் தஞ்சமடைந்தவனைக் காப்பாற்றுவது சர்வோத்தமனின் கடமை.

சொல்லைக் காப்பாற்றுவதையே தன் கொள்கையாகக் கொண்டிருந்த தசரத ராமன் வில்லினை எடுத்தான்.

ராமாபாணம் வாலியை வீழ்த்தியது.

''ராமா!... ராமா!... ராமா!...'' என்று மும்முறை கதறினான் இந்திரனின் புதல்வன், வாலி.

''ஹே! ப்ரபோ! என் மகன் உங்களுக்கு என்ன துரோகம் இழைத்தான். அவனை நீங்கள் ஏன் மாய்க்க வேண்டும்?'' என்று வானவீதியிலிருந்து தேவேந்திரன் குரல் கொடுத்தான்.

ஆமாம்...

இராமபிரான் வானரராஜனான வாலியை மறைந்து நின்று ஏன் கொன்றார்?

தெய்வாம்சமான ஸ்ரீராமன் தன் அவதாரத்தில் முழுமையான மனிதனாகவேதான் வாழ்வார் என்ற கொள்கையுடன் பூலோகத்தில் தோன்றினார்.

ராமாவதாரத்தின் சிறப்பே, வாக்கிய பரிபாலனம் செய்வதும், சரணாகதி அடைந்தவனைக் காப்பாற்றுவதும்தான்.

சுக்ரீவனுக்கு வாக்குறுதி கொடுத்து விட்டார்... அவனும் அவரே கதி எனச் சரணடைந்து விட்டான்.

''ஹே! ராமா! நான் உனக்கு எதிரியா? உன்னிடம் எனக்கு விரோதமோ, என்னிடம் உனக்கு விரோதமோ கிடையாதே. உன் தந்தை தசரத சக்ரவர்த்தி என் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய நண்பர். அவருடைய புதல்வனான நீ என்னை இப்படி மறைந்து நின்று, கொல்ல வேண்டியது ஏன்? உன் துயரத்தை என்னிடம் கூறியிருந்தால்... உடனே உனக்கு உதவி இருப்பபேனே!... ஹே ராமா!...''

''கிஷ்கிந்தாபுரி ராஜனே! வாலியே! நீ தனிப்பட்ட முறையில் என் எதிரியுமில்லை. விரோதியுமில்லை. என் உற்ற நண்பனின் எதிரி எனக்கும் எதிரியே... மேலும்... சொல் ஒன்றினைக் கொடுத்து விட்ட தசரதமைந்தன், கொடுத்த வாக்கிலிருந்து தவறினான் என்று உலகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


பேசுவதை உன் உற்ற நண்பரான என் தந்தையே விரும்பமாட்டார்.''

''ஆனாலும்...''

''வாலியே! ஆனாலும், இருந்தாலும் என்றெல்லாம் வாதம் செய்வது சரியல்ல... தர்மம் தடுமாறியது போல் ஒரு தோற்றம் ஏற்படும்... அது ஒரு மாயத் தோற்றம்தான்...''

எல்லாவற்றையும் இழந்து விட்ட இந்திரகுமாரனான வாலி, தன் உயிரை இழப்பதற்கு முன் அவதார புருஷரான ஹரியை உள்ளமுருக வேண்டி, அவர் நின்ற திசையை நோக்கி கையெடுத்து வணங்கினான்.

வானத்திலிருந்த இந்திரனும் ஸ்ரீஹரியை கை கூப்பி வணங்கினான்.

விண் அதிர அசரீரி ஒலித்தது.

''தர்மம் தடுமாறுவதுமில்லை, தவறுவதுமில்லை. மாறுபட்ட நோக்கத்தில் பார்க்கும் பொழுது, மாறுபட்ட வாதங்களும் பிரதிவாதங்களும் தோன்றும். பொறுத்திரு காலம் வரும்... தெய்வத்தின் எந்தச் செய்கையும் நியாயமே என ஞானமுள்ளவர்கள் உணர்வார்கள்.''

மற்றொரு ஒலி, தேவேந்திரனுக்கும் வாலிக்கும் கேட்டது.

''சூர்ய புத்திரனுடன், நட்பு கொண்ட ரவிகுலதிலகன், காரண கார்யமாக இந்திர புத்திரனை வதம் புரிய வேண்டியிருந்தது. யுகம் மாறும்... இந்திர புத்திரனின் வெற்றிக்காக வழிவகுப்பான். அதுதான் தர்மத்தின் சமனம். செயலின் எதிர்ச் செயல். இறையின் மறை அதுதான்.''

யுகம் மாறியது...

த்வாபர யுகம்.

சூர்ய புத்திரனின் பிறப்பே கர்ணன். இந்திர புத்திரனாக பார்த்திபன்.

குந்திதேவியின் புதல்வர்களாகப் பிறந்த இருவருமே பரம விரோதிகள்.

விற்போரில் இருவருமே விற்பன்னர்கள். அஸ்திரசஸ்திர

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


வித்தைகளில் ஒருவருக்கொருவர் சளைத்தவரல்லர். பாசுபதாஸ்திரம் பார்த்தனிடம். நாகாஸ்திரம் கர்ணனிடம்.

அர்ஜுனனுக்கு அச்சுதன் துணை. கர்ணனுக்கு தர்மம் துணை. பல்குனனுக்கு கண்ணன் சாரதி. ராதேயனுக்கு சல்லியன் சாரதி.

பாரதப்போரில் குந்தியின் மூத்த புதல்வன் கர்ணனும், கனிஷ்ட குமாரனான விஜயனும் எதிர் எதிரான கட்சிகளில் ஆரோகணித்துப் போராடினார்கள்.

கர்ணனை விற்போரில் யாருமே வீழ்த்த முடியாதென நன்குணர்ந்த நாராயண ஸ்வரூபனான தேவகி மைந்தன் சூழ்ச்சிகள் சில செய்து கர்ணனை பலவீனப் படுத்தினார். ஸ்ரீமந்நாராயணனின் அத்யந்த நண்பனான நரஸ்வரூபியான சுபத்ராமணாளன் வெற்றி பெற ராஜதந்திரம் கையாளப் பட்டது.

நாகாஸ்திரத்தை ஒரு முறைக்கு மேல் ஏவக்கூடாதென வரம் வாங்கிக் கொண்டாள் தாய், தன் மகனான கர்ணனிடம். கர்ணனுடன் பிறந்த கவசகுண்டலத்தை இந்திரன் யாசித்துப் பெற்றுக் கொண்டான். பலவீனப்பட்டுப் போன கர்ணனை வில்விஜயனால் வீழ்த்தி மாய்த்துவிட முடியவில்லை.

அவனை தர்மம் காப்பாற்றிக் கொண்டிருந்தது.

'இல்லை' என்ற சொல்லே தன் வாழ்வில் இல்லை என்று சொல்லும்படியாக தானம் செய்த கொடை வள்ளலை, தானம் என்ற தர்மம் காத்தது. தர்மம் தலை காக்கும் என்ற வேதவாக்கு பொய்யாகுமா?

தேரை இழந்து தரையில் வீழ்ந்துவிட்ட தேரோட்டி மகன் கர்ணனை மரணதேவனுக்குப் பலியாக்கிவிட பார்த்தனால் இயலவில்லை. கர்ணனின் உயிரை 'கொடை' குடை போல் காப்பாற்றிக் கொண்டிருந்து.

ஈவதையே லட்சியமாகக் கொண்ட கர்ணனையும், அவன் சேமித்து வைத்த தர்மத்தையும் பிரித்தால்தான் அவன் உயிர் பிரியும்.

கர்ணன் மாண்டால்தான் துரியோதனனை வென்று வீழ்த்த முடியும்.

தர்மரக்ஷகனான தயாபரன், தர்மத்தை கர்ணனிடமிருந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாசகமாகப் பெற்று, கர்ணனின் முடிவுக்கு வழி வகுத்தார்.

அன்று சூர்யபுத்திரனான சுக்ரீவனுக்காக இந்திர புத்திரனான வாலியை மறைந்து நின்று வீழ்த்தின அதே பரந்தாமன், இன்று இந்திர புத்திரனான அர்ஜுனனுக்காக, சூர்ய புத்திரனான மாவீரன் கர்ணனின் வாழ்வுக்கு, மறைமுகமாக முடிவுரை எழுதினார்.

இரண்டிலும் தர்க்க நியாயங்களோ மானுடவர்க்கத்திற்குட்பட்ட தர்மநியாயங்களோ நம் அறிவுக்கு மாறுபட்டதாக இருக்கலாம். ஆனால் இவ்விரண்டிலும் தெய்வ நியாயங்கள் தெள்ளத் தெளிவாய் என் சிற்றறிவுக்குப் புலனாகிறது...

''தர்ம தேவனின் புத்திரனான என் பெரிய அண்ணன், யுதிட்டிரர் என் சொற்களை ஒப்புக்கொள்வார் என நம்புகிறேன்...''

சகாதேவன் கூறியதை ஆடாமல் அசையாமல் செவிமடுத்த நான்கு சகோதரர்களும் அவர்களின் தாய் குந்தியும், துருபதன் மகள் திரௌபதியும், கண்ணனை ஒரே சமயத்தில் நோக்கினார்கள்.

''சகாதேவன் கூறியது, வாசுதேவன் கூறியதாகவே ஆகட்டும்'' கண்ணன் மொழிந்தான்.

யமுனை நதியின் பிரவாகம் 'ஆம்' 'ஆம்' என ஒலித்துக் கொண்டே ஓடிக்கொண்டிருந்தது... காலமும்தான்...

□ □ □

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# மீண்டும் இரண்டு வரங்கள்

முப்பெரும் தேவிமார்கள், மந்திரி சுமந்திரர், வசிஷ்டர், பரதன், மக்கள், உற்றம், சுற்றம் யாவரும் ஆவலாக நந்திக் கிராமத்தில் அண்ணாந்தபடி நிற்கின்றனர்.

தீக்குழியில் அக்னி தேவனின் நாக்குகளும் ஆகாயத்தையே பார்க்கின்றன. ஆம், அண்ணல் ராமன் பதினான்கு வருட வனவாசம் முடித்து, வெற்றியுடன் விமானத்தில் வந்திறங்கும் நன்னாள் அன்று.

அமைதி. கீழ்வானம் வெளுத்து உதய சூரியனும் ஆவலுடன் எட்டிப் பார்க்க சூரிய திலகத்தைச் சுமந்து வந்த பஷ்பக விமானம் கீழே இறங்கியது.

பரதனை விழுங்கத் தயாராக நின்ற கனல் நாக்குகள் சுருண்டு கொண்டன. அண்ணலின் பாதகமலத்தில் ஒன்றிப் போனான் பரதன்.

மங்கல வாத்தியங்கள் முழங்கின. மக்களின் மகிழ்ச்சி ஆரவாரம். ''ரகுவரன் வாழ்க''. ''வெற்றி வீரன் வாழ்க.''

பரதனைத் தூக்கி அணைத்த ராமன், முப்பெரும் தேவி மார்களை நோக்கி நடந்தான். மகிழ்ச்சியும் மன நிறைவுமான எழுச்சியில், கண்ணீர் பொங்க யாவரும் உருகிப் போயினர். சட்டென, கைகேயியின் காலில் விழுந்து வணங்கினான் ராமன். ''தாயே! தங்கள் சொற்படி தந்தை சொல்லை காப்பாற்றி விட்டேன். ஆசி கூறுங்கள்.''

முகத்தில் சோகம். வார்த்தை எழாமல் நின்ற கைகேயியைப் பார்த்துத் துணுக்குற்றான் அவன்.

''தாயே! ஏன் கண்கள் கலங்குகின்றன. தாங்கள் நினைத்த காரியத்தை, தசமுகனை வென்று திரும்பியிருக்கிறேனே? எதற்காக வருத்தப் படுகிறீர்கள்?''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உதடு துடிக்க, தேகம் எல்லாம் நடுங்க,

''ராமா! என் மகனே! என் உயிரே!'' என அலறி மயங்கினாள் கைகேயி.

ஊர்மிளை ஓடோடி வந்து தாங்க, மாண்டவியும், சுதகீர்த்தியும், நீர் தெளித்து சாமரம் வீசி உபசரித்தனர். தன் மேலாடையால் அன்னையின் முகம் துடைத்தான் ராமன். ஆனால் கைகேயியின் கண்கள் வடித்த கண்ணீரைத் துடைத்து மாளவில்லை.

''எல்லாம் நீலிக் கண்ணீர்!'' சுமித்திரை பற்களைக் கடித்தாள்.

''வனவாசம் போயும் திரும்பி விட்டானே என முதலைக் கண்ணீர் விடுகிறாளோ! இவளா என்னைப் பெற்ற தாய்... இல்லை இவள் ஒரு பேய்.'' பரதன் கறுவினான்.

''அம்மா! எழுந்திருங்கள்'' ராமன், கைகேயியை தோள்பற்றி அன்புடன் அணைத்து, காத்திருந்த ரதம் நோக்கி நகர்ந்தான்.

''என்னை எல்லோரும் ஏசுகிறார்கள், நான் பெற்ற மகனே என்னை நா கூசாமல் ஏசுகிறான். ஆனால் நீயோ அன்பைப் பொழிகிறாய். ஒரு கூனியின் சொல்கேட்டு, பதினான்கு, ஆண்டுகளாக, பழிச் சொல்லம்புகள் என்னைக் கூனிக் குறுக்கி விட்டன. இப்போது நான் நடைப்பிணம் ராமா! போதுமப்பா எனக்கு. உனக்காக உயிர் வாழ்ந்தேன்.'' வேதனையுடன் விம்மினாள் கைகேயி.

''யார் சொன்னது? நீங்கள் கூனிக் குறுகியதாக? தரணி போற்றும் வெற்றியை எனக்கு அளித்தவளே நீங்கள் தானே அம்மா! வெற்றிக்கும், வீரத்திற்கும் மூலாதாரமே நீங்கள்தானே! தூற்றுபவர்களை மன்னித்து விடுங்கள்.''

துயர் மறைந்து, கைகேயியின் முகத்தில் புன்னகைக்கீற்று.

''தாயே! அரண்மனை செல்ல உத்திரவு இடுங்கள்.''

கைகேயி திகைப்புடன் ''நானா?'' என்றாள். பிறகு ''உன்னைப் பெற்ற உத்தமி கௌசல்யா, பட்டத்து ராணி, அவர்கள் கூறட்டும், ராமா'' என்றாள் அமைதியாக.

''நான் ராமனை ஈன்றவள் மட்டுமே. நீதான் மற்ற எல்லாப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


பெருமைகளையும், ராமனுக்குக் கொடுத்தவள், உனக்குத் தான் உரிமை உண்டு கைகேயி!'' கௌசல்யா சிரித்தாள்.

சுமந்திரர் முன் வந்தார். ''இளைய ராணி நீங்கள் துவங்கி வைத்தது வெற்றியுடன் முடிந்தது. இந்த ஜெயராமனை, பட்டாபி ராமனாக அரண்மனைக்கு அழைத்துச் செல்வது உங்கள் உரிமை.''

வசிஷ்டர் ஆமோதித்தார். ''ராமனும், சீதையும் அயோத்தி செல்லும்படி கூறுகிறேன். மங்கல வாத்தியங்கள் முழங்கட்டும்.'' கைகேயி களிப்புடன் உத்தரவிட்டாள்.

ரதத்தின் அருகில் வந்த கைகேயி நின்றாள்.

''ஏன் ரதத்தில் ஏறாமல் நின்று விட்டீர்கள் தாயே? ஏறுங்கள்'' துரிதப்படுத்தினான் காகுத்தன்.

ராமன் அன்னையின் முகத்தை நோக்கினான் ''தயக்கமா தாயே?''

''தயக்கமில்லை மகனே! ஒரு தீர்மானம்.''

''தீர்மானமா? சொல்லுங்கள். தயங்காமல் நிறைவேற்றுகிறேன்.''

''முன்பு ஒரு சமயம் உன் தந்தையுடன் தேரில் சென்ற பொழுது இரு வரங்கள் கேட்டு பெற்றேன். இப்போழுது இந்தத் தேரில் ஏறி அமரும்முன் எனக்கு இரண்டு வரங்கள் வேண்டும் மகனே!''

ஆதரவுடன் கைகேயியின் கரம் பற்றினான் ராமன்.

''மீண்டும் இரு வரங்களா! இவளாவது திருந்துவதாவது! சூழ்ச்சிக்காரி.'' சுற்றி நின்றோர் பதறினார்கள்.

''அண்ணா! தீவினையே உருவான...''

பரதன் பாய்ந்தோடி வந்தான் கோபத்துடன்.

''ஆத்திரம் வீரனுக்கு அழகல்ல'' அவனைக் கையமர்த்தி, கைகேயியை வாஞ்சையுடன் பார்த்தான் ராமன்.

''கேளுங்கள் அம்மா!''

''திருமாலின் அவதாரமே! இந்த அவதாரத்தின் போது சகல பழிச் சொற்களையும், பாவங்களையும் ஏற்றுக் கொள்ளும் படியான பிறவியை எனக்களித்தாய். இதற்கு நேர் மாறாக, உன் அடுத்த

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy 

அவதாரத்தில் உன்னையே வளர்த்து, உலகம் புகழும் வளர்ப்புத் தாயாக வாழ வரம் தா. இந்தப் பிறவியில், என் கணவரான தசரத மன்னனே, அடுத்த பிறவியிலும் எனக்கு மட்டுமே உரிய கணவராக வந்து, என் கடைசி மூச்சை அவர் மடியில் விடும் பாக்கியத்தைத் தா.'' உணர்ச்சி பொங்க குரல் தழுதழுக்க கூறி முடித்தாள் கைகேயி.

''கேகய நாட்டு மகளே! எப்படிப்பட்ட அற்புதமான வரங்கள்! இதை கேட்கும்படி உனக்கு எவ்வாறு தோன்றியது?'' வசிஷ்டர் வியந்தார்.

''பதினான்கு வருடங்களாக என் நொந்தமனதிற்கு மருந்தாக, இதோ, நிற்கிறாளே ஊர்மிளை, இவள்தான் காரணம்.''

சுற்றி நின்றோர் உணர்ச்சிப் பெருக்கால் கைகேயியைப் பார்த்துக் கரம் குவித்தனர். பரதன் ''அம்மா!'' என்றலறியபடி அவள் காலடியைப் பற்றி வணங்கினான்.

கைகேயி, ஊர்மிளையை அர்த்த புஷ்டியுடன் நோக்கி, தன்னோடு அணைத்துக் கொண்டாள்.

அவர்களிருவரின் விழித்திரைகளில் கிருஷ்ணாவதாரமும், கண்ணனும், யசோதையும், நந்தகோபனும் தோன்றினார்கள்.

□ □ □

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# ஊழ்வினை

'அஸ்வகிரி' மலைக் குன்றின் மேல், அஸ்வத்தாமா கடுந்தவம் செய்து கொண்டிருந்தான்.

அவனை வளர்த்து, அவனுக்கு யுத்த தந்திரங்களையும், வில் வித்தையையும் கற்றுக் கொடுத்து, அவனைக் கண்போல் தன் மகனாய்ப் போற்றி வந்த தந்தையும் குருவுமான துரோணர் ஏன் வஞ்சகமாக மாபெரும் மஹாபாரதப் போரில் கொல்லப்பட்டார், என்ற வினாவுக்கு விடை தேட ஞானதவம் புரிந்தான் அஸ்வத்தாமா.

துரோணர், குரு வம்ச ராஜகுமாரர்களின் ஆசான். அவருக்கு ராஜசபையில் சிறந்த மதிப்பு. கௌரவ குலகுரு க்ருபரின் சகோதரி க்ருபி அவருடைய தர்மபத்தினி. அஸ்தினாபுரத்து மூதறிஞர் பீஷ்மரின் ஆலோசகர். அத்யந்த நண்பர். மதியூகி விதுரனின் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உகந்த பெரியவர்.

அவர் பாரதப் போரில் நயவஞ்சகமாகக் கொல்லப்பட்டார். அதுவும் அவர் அன்புக்குப் பாத்திரமான த்ருஷ்டத்யும்னனால். தன் பிறவா மகனாகக் கருதி பேணி வித்தை கற்பித்து, அர்ஜுனனுக்கு இணையான வீரன் எனப் பெயர் பெற வைத்தவர். அவர் சோகத்தால் நிலைகுலைந்து, நிராயுதபாணியாக நிற்கின்ற நேரத்தில் குருவெனக் கூட யோசிக்காமல் அம்பு எய்தது யுத்த நியதிக்கோ, க்ஷத்திரிய தர்மத்துக்கோ உகந்ததாக எண்ண முடியாது.

ஏன் அப்படி ஓர் அநியாய மரணம் நேரிட்டது?

தந்தை இறந்தார், அதுவும் வஞ்சகமாக என்று அறிந்த அஸ்வத்தாமனின் வில் துடிப்பதற்கு முன் அவன் உடல் துடித்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நரம்புகள் துடித்தன. துடிப்பில், அறிவு மயங்கி ஆத்திரம்தான் குப்பெனப் பொங்கியது.

ஆத்திரம் அறிவை விழுங்கியது. சிந்திக்கத் திறனின்றி...

ப்ரம்மாஸ்திரத்தை நாணேற்றிய வில்லின் ஏவு கணையில் ஆவிர்பவித்து, பாண்டவ வம்ச பரம்பரையை அழிக்க மந்திரித்து ஆணையிட்டான்.

மின்னலின்றியே இடி பயங்கரமாக ஒலிப்பிரளயத்தையே எழுப்பியது. இமயம் நடுங்கியது. இந்திர லோகங்கள் அதிர்ச்சியால் நிலைதடுமாறின. கைலையில் நிஷ்டையிலிருந்த ருத்ரன், மோனம் கலைந்து திகைப்படைந்தார். பாற்கடல் பொங்கி திருமாலை திக்குமுக்கா்ட வைத்தது.

படைத்தவன், பதறினான். காப்பவன் வழிதெரியாமல் விழித்தான். அழிப்பவன் அதிர்ந்து போய் சிலையானான்.

ஆனால்.....

அவதரித்த தெய்வீகம், ஆடாமல் அசையாமல் வேடிக்கை பார்க்கும் குழந்தையைப் போல் சிரித்தது. வாசுதேவன், ப்ரம்மாஸ்திரத்திற்குப் பலியாக, பாஞ்சாலியின் ஐந்து சிசுக்களையும் அர்ப்பணித்தான். உத்திரையின் கருவைக் காப்பாற்றிவிட்டான்.

அஸ்திரம் திரும்பி அஸ்வத்தாமனின் காலடியில் வீழ்ந்து அழுதது. அழும் அஸ்திரத்தைக் கண்டான் அஸ்வத்தாமன், எங்கோ சிரிப்பொலி....

''அஸ்வத்தாமா! என்ன காரியம் செய்துவிட்டாய்?'' அசரீரி கேட்டது.

''தந்தையைத் தந்திரமாகக் கொன்ற பாவிகளைப் பழிவாங்கினேன்.''

''இல்லை... எதுவுமே தெரியாத இளஞ் சிசுக்களை அழித்து சிசுஹத்திப் பாபத்திற்குத்தான் உள்ளானாய்.''

''என்னையும் வஞ்சித்து விட்டான், அந்த வஞ்சக வாசுதேவன். அவனை...''

''குற்றம் சொல்லாதே! உன்னுள் சீறிய சினம், ஆத்திரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உன்னைக் குருடனாக்கின. யோசனை செய்யாமல் அஸ்திரத்தை ஏவியது நீ. அஞ்ஞானச் செயலைச் செய்துவிட்டு மெய்ஞானத்தைக் குறை கூறுகிறாய். இப்பொழுதாவது சிந்தித்துச் செயல்படு.''

''நீ யார்? எனக்கு புத்தி சொல்ல உனக்கு என்ன தகுதி?''

''நான்தான் உன் மனசாட்சி உன் அறிவின் ஆத்மா, ஞானக்கண்.''

''என் வினாவுக்கு என்ன விடை?''

''உன் வினா என்ன?''

''என் தந்தையின் மரணம்... அவர் உயிரை வஞ்சகமாய் பலிவாங்கியது ஏன்?''

''அதை இப்பொழுது உனக்குப் புரியவைக்க முடியாது.''

''ஏன்?''

''உன்னுள் கோபம் தணியவில்லை. ஆத்திரம் அடங்கவில்லை. பழிவாங்கும் ஈனச்செயல் உன் நரம்பில் மின் அணுவாய்ப் பரவி இருக்கிறது.''

''அப்படியானால்....''

''இந்த மூன்று முரடர்களின் பிடியிலிருந்து விடுதலை பெற்று, நீயே சிந்தித்தால்....''

''அதற்கு வழி?''

''கடுந்தவம். செய்கை, செய்ய வைப்பவன், செயலின் பயன் எல்லாவற்றிற்கும் மூலம் சர்வேசுவரன். அவனே அணுவாய், அணுவிற்குள் அணுவாய், அண்ட சராசரங்கள் எங்கும் வியாபித்து நிற்கும் பரந்தாமன். அவனை எண்ணி தவம் புரி. நீயோ தீவிரத்தின் எல்லை, பிரம்மச்சாரி. ஸ்திரப்பரக்ஞன். உன் தவம் வெற்றி அடைய வெகுகாலம் ஆகாது.''

அஸ்வத்தாமன் நாணேற்றத் தயாராக இருந்த வில்லை ஒடித்து எறிந்தான். ஆயுதங்களை அகற்றினான். சிகையில் ஒளிவீசும் சுடர்மணியை முடியுடன் அறுத்து வீசினான். அகம் ஒழித்தான்.

அசுவகிரி அடிவாரத்தில் குதிரை நின்று பெருமூச்சு விட்டது. பரிமேல் அமர்ந்த ஸஹாதேவனும், களைப்பில் இளைப்பாறினான்.

குதிரைமுக மலையில்....

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


சின்னக் குன்றுதான் என்ற அலட்சியத்தில் குதிரையைத் துரிதகதியில் விரட்ட.... மலையின் உச்சியிலிருந்து வேகமாய் காற்று புயலாய் வீசி, குதிரையை முன்னேற முடியாமல் தடுத்தது.

முயற்சி.... முயற்சி... முடிவில் தோல்விதான்.

களைத்துப் போன குதிரை தடாலெனச் சரிய, ஸஹாதேவன் திகைத்தான்....

''குன்றின் மேலே, முகட்டில் பிரசவிக்கும் காற்று புயலாக வீசுகிறதே... ஏ கண்ணபிரானே! இது என்ன சோதனை? ஏன் இந்தக் குன்றுக்கு என்னைப் போகச் சொல்லி உத்தரவிட்டாய்? யாரோ உன்னை அழைக்கிறான் எனக்கு பதில் நீயே போய் அவன் வினாக்களுக்குப் பதில் சொல் என்று என்னை இந்தச் சூறாவளியில் சிக்க வைக்கிறாயே! என் அகந்தைக்கு இது சவாலா? மதுராபுரி மதுசூதனா மண்டியிட்டு வேண்டுகிறேன். வஸ்திராபரணம் செய்யப்படும் பொழுது, வண்ண வண்ணச் சேலைகள் கொடுத்து, பாஞ்சாலியை ரட்சித்த பரம் பொருளே! என்னைக் காப்பாற்று. நீ இட்ட ஆணையை நிறைவேற்ற நீயே துணை.''

கதறினான் பாண்டவர்களின் இளையவன் ஸஹாதேவன், வாசுதேவனின் வாத்ஸல்யத்திற்குப் பாத்திரமானவன்.

த்வாரகையில், திரிவிக்ரமனான கண்ணன் லேசாகச் சிரித்தான்.

அஸ்வத்தாமனின் ப்ராணாயாம யோகம் தணிந்தது.

ஸஹாதேவன் குன்றின்மீது மெதுவாக ஏறி உச்சியில் வந்து நின்றான்.

நெடிய உருவத்தில் அசையாமல் நின்று தவம் புரியும் அஸ்வத்தாமனைக் கண்டான் ஸஹாதேவன். அச்சமும் அதிசயமும் தலைதூக்க, அதிர்ச்சியில் கைகூப்பி தவயோகியை வணங்கினான்.

'அச்சுதா' என்று மனதில் மனனம் செய்து கொண்டே, ஸஹாதேவன் காத்திருந்தான்.

சூழ்நிலையில் சலனம் ஏற்பட்டதை உணர்ந்த தவயோகி அஸ்வத்தாமன் கண் விழிக்க...

''கேசவனின் கட்டளைப்படி தங்களைத் தரிசிக்க வந்திருக்கிறேன்'' எனக் கூறிக்கொண்டே, பாதங்களில் சரணடைந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


ஸஹாதேவனைக் கண்ணுற்றான், அந்த க்ருபியின் மைந்தன்.

எழுந்து பவ்யமாக மறுப்படியும் கைகூப்பி, சிரஞ்சீவி அஸ்வத்தாமனை, வணங்கினான் இந்திரப் பிரஸ்த இளையவன்.

''வாரும் ஸஹாதேவா'' வரவேற்றான் தவசி.

''காளிங்க மர்த்தனின் ஆக்ஞைப் பிரகாரம் தங்களிடம் வந்துள்ளேன்'' மனதினுள் துளிரும் பயத்தைப் போக்கிக் கொள்ள கண்ணனின் காளிங்க வதத்தை நினைவு படுத்திக் கொண்டான் ஸஹாதேவன்.

''பரமாத்மாவை அழைத்தேன். அவன் உன்னை அனுப்பி விட்டானா?'' நகைத்தான் அஸ்வத்தாமன்.

''நகைப்பானேன்! நந்தகுமாரன் செயல் என்றும் நியாயமாகத்தானிருக்கும். ஏதோ தாங்கள் வினா விடுப்பீர்கள் என்றும், அதற்குத் தகுந்த விடை அளிக்குமாறும் எனக்கு...''

பலமான சிரிப்புடன், ''நீ, என் வினாவிற்கு விடை கூறப்போகிறாயா?... வேடிக்கை... ஞானிகளின் வினாவிற்கு அஞ்ஞானியான... மானிடனான நீயா பதில் அளிக்கப் போகிறாய்'' என்று எகத்தாளமாக எதிரொலித்தான்.

அஸ்வத்தாமனின் அகந்தை அவனை விட்டு அகலவில்லை.

''தவசிரேஷ்டரே! தங்கள் கணிப்பு தவறு. பரம ஞானியான கண்ணன், தங்கள் சந்தேகத்தைத் தெளிவிக்க என்னை ஏவினானென்றால், தங்கள் வினாவிற்குப் பதில் சொல்ல என்னைக் கருவியாகத்தான் ஆக்குகிறான், அவன் என் மூலம் உங்கள்....''

அஸ்வத்தாமனின் சிரசில் ஓர் ஒளிச்சிதறல்.... ஞானிகளுக்கெல்லாம் ஞானியான, பரமனின் சங்கல்பம் இதுவானால்....

அட்டைபோல் ஒட்டிக் கொண்டிருந்த அகந்தை, கர்வம், சினம் அத்தனையும், அறவே அழிந்தன... மனம் தெளிவாயிற்று...

யோக நிலையிலிருந்து இறங்கி ஸஹாதேவன் அருகில் வந்து, அவன் தோளில் கரம் வைத்து அரவணைத்து அருகிலுள்ள நதிக்கரைக்கு வந்தான் அஸ்வத்தாமன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


''ஸஹாதேவா! என்னுள் உதித்த பெரிய கேள்வி என்ன தெரியுமா?''

''சொல்லுங்கள், குருபுத்திரரே!''

''என் தந்தை, நம் குரு துரோணாச் சார்யார், பாரதப்போரில் ஏன் வஞ்சகமாகக் கொல்லப்பட்டார்?''

''அது வஞ்சகமில்லை. அவருடைய ஊழ்வினை.''

''ஊழ்வினையா?''

''ஆம் அஸ்வத்தாம்ரே! துரோணரின் வாழ்வை சிறிது பின்சென்று நோக்கினால் நன்றாகப் புரியும்.''

''ஸஹாதேவா! நீயே சொல். பரமஞானியான கண்ணனின் ஆத்மார்த்த தோழனான நீ ஆத்மஞானி. நீ சொன்னால் அதில் தவறேதும் இருக்க முடியாது.''

''ச்ரேஷ்டரே! தங்கள் தந்தையும், எங்கள் ஆச்சார்யருமான, பூஜ்யர் துரோணர் ஓர் அந்தணர். வேத ஞானத்துடன் யுத்த சாஸ்திரத்தையும் போர் தந்திரத்தையும் கற்ற மஹான்... ஆனால்... அவர் அந்தணருக்கே உரிய அரிய தர்மங்களைத் தன் வாழ்வில் கடைபிடிக்கவில்லை. அடக்கம், அஹிம்சை, கோபமின்மை, திருப்தி, மன்னிக்கும் குணம், பழிக்குப் பழிவாங்காத பக்குவநிலை இவைகள் எல்லாம் அந்தணரின் குணங்கள். அத்துடன் எளிய வாழ்வு வாழ வேண்டும். ஆனால்...

''ஆச்சாரியார் அப்படி வாழவில்லை. பொறுமை என்ற பெரும் பொக்கிஷத்தை இழந்து கர்வமும் அகந்தையும் தலைதூக்கி நின்றன அவர் வாழ்வில். அதற்கு முதற்காரணம் நீங்கள்தான்.''

''நானா? எப்படி?''

''தாங்கள் சிசுவாய் அவரிடம் வந்து சேர்ந்த சமயத்தில், நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாட, தங்கள் தாயும் தந்தையும் தங்களுக்குப் பாலூட்டக் கூட வழியின்றித் தவித்தார்கள். அச்சமயத்தில் துரோணர், தன் நண்பரான துருபத அரசனிடம் பசுவொன்றினை யாசகமாகக் கேட்டார். நட்பை மதிக்காத துருபதன் யாசகம் தர மறுத்தான். அதனால் அவனை வென்று அடிமையாக்கிட சபதமிட்டார். அதில் வேதியனின் குணாதிசயமில்லை. யாசகம் கொடுக்காதவனை குறை கூறக்கூடாது. யாசித்து நிற்பவன் பொறுமை இழக்கலாகாது.

''துருபதன் சிறு பிராயத்தில் நட்பில் சூளுரைத்துச் சொன்ன வாசகத்தைக் காரணம் காட்டி, அவனை மிரட்டி யாசகம் கேட்டதும், நண்பன் நற்பதவிக்கு வந்தவுடன் அவன் உதவியை நாடிப் போவதும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சான்றோர்களுக்கு அழகல்ல. நட்பை லஞ்சமாக்கி உதவி கேட்பதற்கு ஒப்பாகும்.''

''சரி! அப்புறம்.''

''துருபதனைப் பழிவாங்க வேண்டுமென்ற உத்வேகத்துடன், அஸ்தினாபுரத்துக்கு வந்து எங்களுக்கு ஆசானானார். எங்களில் ஒருவனான விஜயனுக்கு அல்லும் பகலும், அயராது தான் கற்ற அத்தனை அஸ்திர சாஸ்திரங்களையும் கற்பித்து, அவனைக் கொண்டே துருபதனை பழி தீர்த்துக் கொண்டார். அது க்ஷத்திரிய தர்மத்துக்கேற்றது, ஆனால் அந்தணனுக்கு ஏற்றதல்ல. தான் கற்றறிந்த வித்தையை துக்ஷ்பிரயோகம் செய்தது முதல் குற்றம். அதன் வினையே த்ருஷ்டத்யும்னன் பிறப்பு. ஆச்சார்யனிடமே அவருடைய வித்தையைக் கற்றுத் தேர்ந்து அவரையே அழிக்க வைத்தது.''

''ஒப்புக் கொள்கிறேன். அவரை, ஏன் நேருக்கு நேர் யுத்தம் செய்து உயிரைப் பறிக்காமல், வஞ்சகமாய்க் கொல்ல வேண்டும்?''

''அதுவும் அவர் விதைத்த வினைதான்.''

''எவ்வாறு சொல்கிறாய்?''

''ஏகலைவனை நினைவிருக்கிறதா?''

''நினைவிருக்கிறது.''

''அவன் ஆசார்யரைத் தேடி வந்து வித்தையை கற்றுக்கொள்ளக் கெஞ்சியபோது, மறுத்துவிட்டார் மஹான் துரோண...ர்...ஏன்...கௌரவ ராஜகுமாரர்களைத் தவிர பிறர் யாருக்காவது குருவாக விரும்பினால், ராஜகுரு என்ற பதவி பறிபோய்விடும். அது பீஷ்மரின் வாக்கு. பதவியை இழக்க மனமில்லாத தங்கள் தந்தை, இங்கும் அந்தணர் தர்மத்தையும், அறிஞரின் மரபையும், புறக்கணித்துவிட்டார்.''

''உண்மைதான், இதில்...''

''பொறுங்கள், ஏழை வேடுவனான ஏகலைவன் துரோணரையே மானசீக குருவாக பிரதிஷ்டை செய்து வில்வித்தையில் விற்பன்னன் ஆனான். அவனுடைய திறமை பார்த்திபனுக்குப் போட்டியாகத் திகழ்ந்தது. ஒருசமயம் வானில் வேகமாகப் பறந்த புள்ளினத்தை குறிபார்த்து அம்பு எய்தான் என் உடன் பிறந்த அர்ஜுனன். அவன் எய்த அம்பு அப்பட்சியைத் தாக்குவதற்குமுன் ஏகலைவன் அதனை வீழ்த்திவிட்டான். அத்துடன் இல்லாமல் அர்ஜுனனின் திறமையைக் குறைத்துக் கூறிவிட்டான் அந்த வில்லாளி...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


''அவனைப் பழிவாங்க குருவையே ஏவிவிட்டான் வில்விஜயன். நம் குருவும் ஏகலைவனிடம் குருதட்சணையாக அவன் கட்டை விரலையே வெட்டி வாங்கிக் கொண்டார். வில்லாளியின் உயிரான கட்டை விரலை, கொடூரமாக வஞ்சித்து தட்சணையாக வாங்கியது மிகப்பெரிய குற்றம். அதன் பிரதிபலிப்புதான் அவரையும் வஞ்சகமாக வீழ்த்தி விட்டது.''

''போரில் பொய்யுரைத்தது!''

''அஸ்வத்தாமா ஹத: குஞ்சர என்று யுதிட்டிரர் சொன்னது பொய் ஆகாது. அதன் கடைசி வார்த்தையின் போது கிருஷ்ணன் பாஞ்சசன்ய சங்கநாதம் எழுப்பினார். உண்மையை ஆராயாமல் கண்டதே கோலம், கேட்டதே நிஜம் என்று ஏமாந்தது துரோணரின் குற்றமே தவிர, மற்ற எவரின் குற்றமுமல்ல. அதுமட்டுமல்ல, ஆச்சார்யரின் உடலில் ஓடுவது வேதியனின் குருதி. அதனால்தான் பாசமிகுதியால் சோகமுற்று யுத்த களத்தில் நிலைதடுமாறினார். தடுமாறிய தளபதியை வீழ்த்தியது துருபத புத்திரனின் அஸ்திரம்.''

''ஸஹாதேவா! உன் வாக்குச் சாதுர்யத்தால் வஞ்சகச் செயலை நியாயப் படுத்திவிட்டாய்.''

''இல்லை அஸ்வத்தாமரே! என் வாதம் என்னுடையதல்ல. நம்மை ஆட்டிப்படைக்கும் தெய்வத்தின் குரல். ஒருவனின் மரணம் அவனின் ஊழ்வினையைப் பொறுத்தது. ஜீவாத்மாவான நாம், பரமாத்மாவின் பொம்மைகள். நம் எல்லோரையும் ஆட்டுவித்து லீலா விநோத நாடகமாடும் அவன் ஒரு பொம்மலாட்டக்காரன். ஊழ்வினை என்ற நூலில் தொங்கும் நாம் அவன் இச்சைப்படி ஆடும் பொம்மைகள்.''

''நன்றி, ஸஹாதேவா! என் ஆணவம் அழிந்தது. மனம் தெளிந்தது மகிழ்ச்சி.''

''நான் விடைபெற்றுக் கொள்ளட்டுமா. சிரஞ்சீவிப் பட்டம் பெற்ற சிரேஷ்டரே?''

''விடைகூற வந்தவனுக்கு, விடையளித்து வழியனுப்புகிறேன் ஆசிகள்.''

தூரத்தே கதன குதூகலத்தில். வேய்ங்குழல் நாதம் பிறந்து, குன்ற மெங்கும் எதிரொலித்தது.

□ □ □

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# வாசுதேவன் வகுத்த வழி

அத்தினாபுரத்துக்கு சமாதான பேச்சுவார்த்தை நடத்த, கிருஷ்ணன் சென்று திரும்பி விட்டான்.

கௌரவர்கள் சமாதானத்தை விரும்பாமல் போர் முனையில் பாண்டவர்களைச் சந்திக்க முடிவு தெரிவித்து விட்டனர்.

குருக்ஷேத்ரப் போருக்கு ஆயத்தம் இருதரப்பிலும் தொடங்கி விட்டது. ஒவ்வொரு தரப்பினரும் தங்கள் தங்கள் படைபலத்தைப் பெருக்க பற்பல தேசத்து மன்னர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தனர்.

உபப்பிலாவியம் என்ற நகரத்தில் பனிரெண்டு ஆண்டு வனவாசமும் - ஓராண்டு அஞ்ஞாத வாசமும் முடிந்தபின், பாண்டவர்கள் தங்கள் பந்துமித்ரர்களுடன் மந்த்ராலோசனையில் ஆழ்ந்து இருந்த காலகட்டத்தில்....

ஒரு மாலை வேளையில்....

''சகாதேவா! உன் மாமன் சல்லியனுக்கு ஆள் அனுப்பினீர்களா?'' என்று வாசுதேவன் திடீரெனக் கேள்வியொன்றைக் கேட்டான்.

''அவரை மறந்தே விட்டோம். மந்திராதிபதிக்கு மந்த்ராலோசனைக் கூட்டத்திற்கு அழைப்பளிக்காதது மிகப்பெரிய தவறுதான். இப்பொழுதே அண்ணனிடம் கூறி நகுலனை அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும்.''

''மாத்ரி புத்ரனே! காலம் கடந்து விட்டது! உங்கள் அழைப்பை எதிர்பார்க்காமல் உங்கள் பக்கம் துணையாக நிற்க, தன்னுடைய மிகப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


பிரும்மாண்ட நால்வகைச் சேனைகளுடன் புறப்பட்டு வந்து கொண்டிருக்கிறார்... ம்... ஆனால்... ஆனால்...'' என்று சொல்லிக் கொண்டே துவாரகாநாதன் தன் முகத்தை வேறு திசையில் திருப்பிக் கொண்டார்.

''கண்ணா! நீ சொல்வதைப் புரிந்து கொள்ள முடியவில்லையே... ஆனால் என்று மறுபடியும் மறுபடியும் கூறுவதின் அர்த்தம்...'' என்று பதைத்துப் போய் கேட்டான் பாண்டவர்களின் இளவல்.

''வேகமாக படைகள் வந்து கொண்டிருக்கும் வழியில்...'' அச்சுதன் அப்படியே தான் சொல்ல வந்ததை நிறுத்திக் கொண்டான்...

படைகள் வரும் வழியில்...

மந்திராதிபதி சல்லியனுக்கும் அவனுடைய படைகளுக்கும் ராஜோபசாரம் நடத்தப்பெற்றது.

சூழ்ச்சியில் வல்லவனான சகுனியின் சதித்திட்டத்தின்படி, துரியோதனனின் ஆட்கள் பலர் படைகளுக்குத் தேவையான ஆகாராதிகளையும், வீரர்களுக்கு வேண்டிய பானங்களையும் அபரிமிதமாக அளித்து உபசரித்தார்கள். வணக்கத்துடனும், பணிவுடனும் இன்சொல்லால் யாவரையும் கவனித்துக் கொண்டார்கள்.

இரவில் தங்குவதற்கு வசதியும், கேளிக்கைகளும் அமைத்திருந்தார்கள்.

கடலைப் போன்ற பெரிய படையை கச்சிதமாகக் கவனித்துக் கொள்வது யாரெனத் தெரிந்து கொள்ள சல்லியன் அவாவுற்றான்.

உபசரிக்கும் கும்பலினுள் ஒருவனிடம், ''வீரனே! உங்கள் விருந்தோம்பலில் என் மனம் மகிழ்கிறது. நன்றி கூற மனம் விழைகிறது... உங்கள் தலைவனை அழைத்து வா... அவனைக் காண விரும்புகிறேன்...'' என்று கூறினான் சல்லியன்.

விரைந்தான் வீரன்.

அடுத்த சில வினாடிகளிலேயே, மந்திராதிபதியின் முன், துரியோதனனும் சகுனியும் தோன்றினார்கள்.

அதிர்ச்சியடைந்தான் சல்லியன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



''என்ன நீயா?...''

''ஆமாம்! நானேதான்'' என்று அடக்கத்துடன் பணிவாகப் பதிலளித்தான் துரியோதனன்.

''யுதிட்டிரன் பக்கம் சேர்ந்து யுத்தம் புரியச் செல்லும் என் படைகளுக்கு, பாண்டவர்களின் ஜன்மப் பகைவனான, திருதராட்டிரன் மகனான துரியோதனன், வரவேற்பும், உபசரிப்பும் செய்கிறானென்றால் ஆச்சரியமில்லாமல் என்ன?''

''மந்திராதிபதி மன்னரே! பகைமை, சகோதரர்களாகிய எங்களுக்குத்தான், அவர்களுடைய உறவினர்கள் எங்கள் பகைவர்கள் அல்ல... ஏன் தருமனின் தாய் குந்தி தேவி, அத்தினாபுரத்தில் எங்களுடன் தானே தங்கி இருக்கிறாள்.''

''ஆமாம்! நீ சொல்வதிலும் உண்மை இருக்கிறது... இருந்தாலும்... போர் என்று முடிவு செய்துவிட்ட பின்...''

''சல்லிய ராஜனே! போர்வரப் போகிறது என்பது திண்ணம். நீங்கள் படைகளுடன் அழைக்கப்படாத விருந்தாளியாகப் புறப்பட்டு வந்து கொண்டிருக்கிறீர்கள்... மனிதாபிமானம் கொண்ட எங்கள் அரசன் துரியோதனன் தங்களுக்கு சகல உதவிகளும் செய்து தருமாறு ஏற்பாடு செய்தான்... இதில் பகையைப் பார்க்கவில்லை நாங்கள்...'' என்று காந்தார நாட்டுக் கயவனான சகுனி, சமயம் பார்த்து, சல்லியனைச் சலனப்படுத்த முயன்றான்.

''ஆமாம்! ஆமாம்!.... நான்தான் பாசத்தின் உந்துதலில் புறப்பட்டேன்... நகுல சகாதேவர்களின் தாய் மாமன் என்ற உரிமையில்தான் அழைப்பில்லாமலேயே...''

''அதனாலென்ன.... சமயா சமயங்களில் உறவுதானே உதவிக்கரம் நீட்ட வேண்டும்... அது உங்களின் பரந்த உள்ளத்தின் சிறப்பம்சம்...'' என்றான் சகுனி.

''எங்கள் சிற்றன்னை மாத்ரி தேவியின் சோதரரான நீங்களும் எங்கள் மாமன்தானே. நானும் உங்கள் உறவுதானே....'' துரியோதனன்.

''உண்மைதான்... துரியோதனா! நீ மாறுபட்ட கோணத்தில் இப்பொழுது தோன்றுகிறாய்?'' என்றான் சல்லியன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''மாமா! அது என்ன புதுக்கோணம்?'' ஆவலாய்க் கேட்டான் அரவக் கொடியோன்.

''துஷ்டன், துர்புத்தியுள்ளவன் என்றெல்லாம் உன்னைப் பற்றிக் கேள்விப்பட்டேன்... ஆனால்... காந்தாரி புத்திரனே! இன்று நான் காண்பது முற்றிலும் மாறானது...''

''மாபெரும் சேனையையுடைய மந்திரநாட்டு மாமன்னரே! கண்ணால் நீங்கள் நேரில் காண்பதே நிஜம்... காற்றில் பறந்து வந்து உங்கள் செவிகளில் விழுந்த செய்திகள் கோள் சொல்பவர்களின் கற்பனை... சுவேதனன் சுய நலமற்றவன், துரியோதனன் தூயவன், மனிதாபிமானம் உடையவன். மாமனை மதிக்கும் உறவினரின் தரம் தெரிந்திருக்கும் தயாளன்....'' என்றெல்லாம் சகுனி துரியோதனனின் புகழ்பாடி, சல்லியனைக் குழப்பத்திலாழ்த்தினான். மேலும் தொடர்ந்தான்:

''சொந்த தாய் மாமனை மந்த்ராலோசனைக்குக் கூப்பிட மறந்துவிட்டார்கள் குந்தி புத்திரர்கள். தங்களைக் கலந்து ஆலோசியாமல் துருபதன் மகனைப் படைகளுக்குத் தலைமை தாங்க, சேனாதிபதி பட்டம் சூட்டிவிட்டார்கள்.... எங்கள் ஆசார்யரான துரோணரிடம் தோல்வியுற்றவனின் மகன் சேனாதிபதியாம்... சிரிப்பதா.... அழுவதா?... அதிரதர், மாரதர், தோல்வியே காணாத மாமன்னர், பரதகண்டத்திலேயே மிகப்பெரிய படைகொண்ட பராக்கிரமசாலியான மந்திராதிபதியை மதித்துத் தலைமை தாங்க வேண்டிக் கொள்ளாமல் உதாசீனப்படுத்தி விட்டார்களே பாண்டவர்கள்...'' என்று கூறினான் சகுனி. அவனுடைய ஒவ்வொரு சொல்லுக்கும் நடுவே விஷம் தோய்ந்திருந்ததை, சஞ்சலமடைந்த சல்லியன் புரிந்துகொள்ள இயலாமற் போக... நச்சு கலந்த நயவஞ்சக வார்த்தைகளால் மனம் தளர்ந்தான்.

பாண்டவர்களின் உதாசீனம்....

கௌரவர்களின் உபசாரம்...

தராசு தடுமாறியது...

உபசரிப்பினால் உள்ளம் மகிழ, நன்றியுணர்ச்சியால் நெஞ்சம் நெகிழ... சல்லியன் துரியோதனனின் கைகளைப் பற்றியவாறே கூறினான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''திருதராட்டிரன் புத்திரனே! உன் உபசரிப்பில் மகிழ்ந்தேன்.... உனக்கு வேண்டியதைக் கேள்...''

''கேட்கலாம்... ஆனால் உங்களால் தரமுடியுமா என்பது சந்தேகம்...'' என்று பீடிகை போட்டான்.

''துரியோதனா! உன் நண்பன் கொடைவள்ளல் கர்ணனுக்கு இந்த சல்லியன் சளைத்தவனில்லை. கேள் தரப்படும்...''

கேட்டான் துரியோதனன்...

மந்திர நாட்டு மாபெரும் படை, தன் கட்சிக்காகப் போரிட வேண்டும்.... சல்லியனும் கௌரவர்களுக்குப் பக்கபலமாக இருக்க வேண்டும் என்று கேட்டான் அத்தினாபுரத்து வணங்காமுடி.

விவேகமற்று, வாக்களித்தபின் சல்லியனால் என்ன செய்யமுடியும்?

''துரியோதனா! நீ விரும்பியபடி என் படைகள் இனி உனது... நான் மட்டும் வில்லெடுத்துப் பாண்டவர்களுக் கெதிராகப் போரிட மாட்டேன்...''

''உங்களிஷ்டம்... அங்கே பார்த்தனுக்கு கண்ணன் சாரதியாகப் போகிறான்... இங்கே நீங்கள் அங்கதேச அரசன் கர்ணனுக்குச் சாரதியாக வேண்டும். சம்மதம்தானே சல்லிய ராஜனே...'' என்று கூறினான் காந்தாரி மைந்தன்.

தேரோட்டி மகனுக்கு, சக்ரவர்த்திக்குரிய அந்தஸ்துடைய தான், தேரோட்டியாக வேண்டியதான தன் விதியை நொந்து கொண்டே தலையை ஆட்டினான் சல்லியன்.

பின்னர் தன் சகோதரியின் மைந்தர்களைக் கண்குளிரப் பார்த்து விட்டு, வரும் வழியில் தான் வஞ்சக வலையில் சிக்கியதையும் கூறிவிட எண்ணிய சல்லியன், உபப்பிலாவியம் வந்து சேர்ந்தான்...

நடந்தவற்றைக் கூறினான் சல்லியன். மந்திராதிபதியைக் குறைகூற தர்மன் மனம் இடம் தரவில்லை. வேகமாக வந்து கொண்டிருந்த தான், விவேகத்தை இழந்ததற்கு வருந்தினான் சல்லியன். தங்களுடைய மெத்தனமும், அஜாக்ரதையும் தங்களுக்கு நஷ்டமுண்டாக்கியது என்று மனவேதனைப்பட்டான் யுதிட்டிரன்.

நஷ்டத்தையும் சகாயமாக்கிக் கொள்ள நந்தகுமாரன்

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy 

வழிவகுத்தான். சகாதேவனிடம் அந்தரங்கமாக ஏதோ கூறினான்.

கண்ணன் கூறும் அல்லது செய்யச் சொல்லும் காரியங்களுக்கு, காரணம் கேட்டுக் கொண்டிராமல் அவன் சொல்வதைச் செயலாக்குவதே மாத்ரி மைந்தனின் முதல் வேலை.

தர்மனிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்படத் தயாரான தாய்மாமனிடம் சகாதேவன், ''மாமா! எங்கள் இழப்பிற்கு தாங்கள் வருந்த வேண்டியதில்லை... ஆனாலும்...''

''...ஆனாலும் என்று எதையோ சொல்ல முடியாமல் தயங்குகிறாயே! சகாதேவா!... என் பலம்தான் கைமாறியதே தவிர என் மனம் உங்களோடுதான்...'' என்று தழுதழுக்க சல்லியன் கூறினான். அதில் அவன் பாசம் தென்பட்டது.

''அப்படியானால்.... ஒரு வேண்டுகோள். நீங்கள் கர்ணனின் சாரதியாக யுத்த பூமியில் அவனுடைய தேரை ஓட்டும் பொழுது, கொடை வள்ளலுக்கு உங்கள் அற்புதமான யோசனைகளை அடிக்கடி கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும்... அது போதும்....''

சகாதேவனின் வேண்டுகோளைக் கேட்ட சல்லியன் ஆச்சரியப்பட்டு, சிரித்தே விட்டான்.

''அப்படியே செய்கிறேன்'' என்று கூறிய சல்லியன் போய் விட்டான்.

தன் வேண்டுகோளின் சூக்ஷமத்தை தானும் அறிந்திருக்கவில்லையே என்று எண்ணிய சகாதேவனும் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

கர்ணன் அர்ச்சுனனை அழித்துவிட நாகாஸ்திரத்தை உபயோகிப்பான்... அப்பொழுது சல்லியன் கர்ணனிடம், காண்டீபனின் கழுத்துக்குக் குறி வைக்கும்படி யோசனை கூறுவான். சல்லியனிடம் வெறுப்பும் அவநம்பிக்கையும் உடைய கர்ணன் அவன் யோசனையை நிராகரித்து விட்டு விஜயனின் நெற்றிக்குக் குறி வைத்து நாகபாணத்தை எய்வான்...

அதுதான் கண்ணனுக்கு வேண்டிய அரங்க அமைப்பு... பார்த்தனுக்கு ஸாரதியாகத் தான் அமர்ந்து ஓட்டும் தேரை, தன் கால்கட்டை விரலால் அழுத்தி, தேர் பூமியில் பதிய, நாகாஸ்திரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருச்சுனனின் கிரீடத்தைத் தட்டிவிட்டுப் போக, குந்தி புத்திரன் உயிர் பிழைப்பான்.

கர்வமும் அகங்காரமுமுடைய கர்ணன் சல்லியனின் பேச்சுக்குச் செவிசாய்க்க மாட்டானென்ற மனோதத்துவ அடிப்படையில், கண்ணன், சுண்டி ஆடிய சூத்திரக் கயிறுகளில் சல்லியனும் ஒருவன்.

போருக்கு முன்....

நாகாஸ்திரத்தை கர்ணன் அருச்சுனன் மேல்தான் ஏவவேண்டும்... அதுவும் ஒரே ஒரு முறைதான் என்று, குந்தியைக் கொண்டு கர்ணனிடம் வாக்குறுதி வாங்கிக் கொள்ள வைத்தான் மாதவன்.

போர் நடக்கும் வேளையில்...

கொடிய நாகாஸ்திரத்திலிருந்து அருச்சுனன் தப்பித்துக் கொள்ள வழிவகுத்தான் வாசுதேவன்.

□ □ □

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# பேழையில் பொதிந்த ரகசியம்

அந்தி மயங்கும் வேளை.

சீதாப்பிராட்டியின் அந்தப்புரம். அகிற்புகை நெளிந்து எங்கும் பரவியது. சந்தன மணம் கமழ்ந்தது. கவிந்து வரும் இருளை பாவை விளக்குகளும், பளிங்கு தீபங்களும் விரட்டிக் கொண்டிருந்தன.

காகுத்தனின் மனம் கவர்ந்த மடந்தை, வானத்து நிலவுபோல் பிரகாசித்துக் கொண்டு சர்வாலங்கார பூஷிதையாக ராமனின் வருகைக்காகக் காத்திருந்தாள்.... வைரமும், மரகதமும், கெம்பும் இழைத்த பொன்னகைகள் அவள் மேனியில் புரண்டு புளகாங்கிதமடைந்தன. அந்தி நேரத்து மலர்கள் கொடிகளில் அரும்பாக ஜனித்து, ஜானகியின் கூந்தலில் மல்லிகையாகவும், முல்லையாகவும் மலர்ந்து மணந்தன.

அரசாங்கப் பொறுப்புகளைக் கவனித்து விட்டு ஸ்ரீ ராமன் அந்தப் புரத்துக்கு வந்து கொண்டிருந்தான்... வரும் வழியில், நுழை வாசலில் படர்ந்திருந்த முல்லைச் செடியில் பூத்துச்சிரித்த ஒரு மலரைக் கொய்து கொண்டு, மைதிலியின் முன் வந்து நின்றான்.

அவள் அழகைக் கண்கொட்டாமல் பார்த்து, பரவசமாக மனம் மகிழ்ந்து, சிலையாகி நின்றான் சீதாராமன்.

முன்னொரு நாள் முதன் முதலில் மிதிலாபுர ராஜவீதியில் நின்று உப்பரிகையை அண்ணாந்து பார்த்துத் திகைத்தானே... அதே நிலையில் இன்றும்....

சீதை சற்றே திரும்பினாள்.... அண்ணலை நோக்கினாள்.... அண்ணலும் அவளை நோக்கினான்... அன்று மனதில் காதல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மலர்ந்தது... இன்றும் காதல் பரிணமித்தது....

அன்று கீழிருந்த அண்ணல் நிமிர்ந்து உயரே வெண்ணிலவை நோக்கினான்... அவளோ குனிந்து செந்தாமரையை நோக்கினாள்.

இன்று....

அவள் சமநிலையில் அண்ணலை நிமிர்ந்து பார்த்தாள்... அண்ணலும் கண்ணெதிரே கைக்கெட்டும் நிலையில் நிற்கும் நிலவைப் பார்க்கச் சற்றே வெட்கினான். ஆயிரம் ஆயிரமாக பெருகிய பரிமாணத்தில் அன்பெனும் அற்புத ஆரணங்கைக் கண்ட ராமச்சந்திரன் உவகையில் சற்றே வெட்கினானோ!... இருக்கலாம்... பள்ளி அறையின் ரகசியம் அது.

''ஆர்ய புத்திரா! என்ன அதிசயத்தைக் கண்டு அப்படியே நின்று விட்டீர்கள்?''

அயோத்தி ராமனின் செவிகளில் அந்தத் தேமதுரக் குரல் இனிதாய்ப் பாய்ந்தது.

ஒரு விநாடி... ராமனின் மனதில் ஓர் எண்ணம் அலைபோல் எழும்பியது.

மைதிலியின் முன்னே நின்று, மையலில் மூழ்கியவன் மனதிலே, அழகுக்கு அழகாய் நின்றவளின் அளகாபரத்தில் தன் கையிலுள்ள முல்லையைச் சூட்டிவிடத் துடித்தான். அவளின் பின்புறம் வந்து நின்றான்... பின்னழகு, முன்னழகுக்கு இணையாகக் காட்சியளித்தது.

வலக்கரத்தைத் தூக்கி, விரல்களிடையே மலர்ந்திருந்த முல்லையை பூங்கொடியாளின் கேசத்தில், மலர்ந்தும், மலராததுமாக இருந்த அரும்புச் சரங்களிடையே மெதுவாகச் சூட நினைத்தவனின் மனம் சட்டெனச் சஞ்சலமடைந்தது.

பூம்பாவையின் கொடியிடையைக் கண்டவன் சற்றே விலகி நின்று யோசித்தான்... சிரசிலே தேன் சிந்தும் மலர்களின் பாரம்... உடலிலோ நவரத்தினங்களிழைத்த பொன்னகைகளின் பாரம். அந்த பாரங்களின் கனத்திலே நெளிந்து கொண்டிருந்த மின்னலிடை, அந்த ஒரு முல்லை மலரின் கனத்தைத் தாங்குமா? பூவின் பாரம் தாங்காமல் இடை வலியால் துடிக்குமே என்ற சிந்தனை சீதாபதியை வருத்தியது...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வலப்புறமாக அரை வட்டத்தில் கோதையின் பின்புறம் நெருங்கிய கோதண்டராமன், இடதுபுறமாக மிகுதி அரை வட்டத்தில் நகர்ந்து முன்புறம் வந்து ஜானகியின் பாதங்களில் முல்லையை வைத்தான்.

பெருமிதத்தில் மனம் பூரித்தாலும், சீதை திகைத்துப் போய் விலக முயன்றாள்....

அப்பொழுது.....

அந்திகாலை பூஜை முடிந்து, ஆலய மணிகளின் நாதம் நகர மெங்கும் ஒலித்தது.

''மைதிலி! ஏன் பதறுகிறாய்?.... பதி, சதியின் பாதங்களை மலர் கொண்டு அழகுபடுத்தியது அதிசயமா?... இல்லை அபசாரமா?.... நீ யார்?''

''புருஷோத்தமா! நான்... யார்?... யார்... நான்?'' என்று இரு முறை கேட்டவள் முன்....

முன்னொரு காலத்து நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது... அவளுடைய நினைவுச் சுழலில் தசரதராமனும் கலந்து கொண்டான்....

பாற்கடலலைகள் சீராகப் பண் இசைக்க பரந்தாமன் பள்ளி கொண்டிருந்தான்...

''ஹே! நாராயணா... காப்பாற்று! நாராயணா என்னைக் காப்பாற்று'' என்று அபயக் குரல் திருமாலைக் கலக்கியது.

சுருதிலயமாக யாழில் இசை ஜனித்துக் கொண்டிருந்த பொழுது, ஸ்வரங்களைப் பிரசவித்துக்கொண்டிருந்த கம்பி உடைந்து தெறித்தது போலிருந்தது அந்த குரல்...

ஒலிவந்த திக்கில் திருஷ்டியைத் திருப்பினான் திருமால்... அங்கே....

உடல் பதற ஓடிக்கொண்டிருந்தான் உமாபதி. அவன் பின்னே அரக்கனொருவன் பிறைமதி சூடிய பெருமானைப் பிடித்துவிட முயன்று கொண்டிருந்தான்..... அச்சுதனை அந்த காட்சி அதிர வைத்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உமாகாந்தன் கண்மண் தெரியாமல் கனவேகமாக ஏன் ஓடிக்கொண்டே இருக்கிறார்! என லக்ஷ்மீகாந்தன் யோசித்தார்....

''ஹே! நாராயணா! ஆபத்பாந்தவா!''

அரவ மஞ்சத்திலிருந்து மனோ வேகத்தில் மஹாதேவன் அருகே நெருங்கினான் மாதவன். வேக கதியில் ஓடிக்கொண்டிருக்கும் கௌரிபதி நடந்ததை விரிவாக எடுத்துரைத்தான்.

''நாராயணா! நீயன்றி யார் என்னை ரட்சிக்க முடியும்?'' என்று அபயக் குரலெழுப்பினான் ஆதி சிவன்.

அக்கணத்தில்....

''மீனாட்சி சுந்தரேசா! சற்றே அந்தப் புன்னை மரத்தின் பின்னே போய் நின்று, நடப்பதைப் பாரும்...'' என்று அருளிய ஸ்ரீ வத்ஸன் புன்னகைத்தான்.

காமப் புன்னகை கண்களிலும் இதழோரங்களிலும் கவர்ச்சியால் நர்த்தனமாட, மோகினியாய் அவதார மெடுத்தான் மதுசூதனன்.

ஓடியே வந்த அரக்கன், மோகனமே அசைந்தாடித் தன் முன் வருவதைக் கண்ணுற்றான். ஓட்டத்தை நடையாக்கி, நடையையும் நிறுத்தி மோகித்து நின்றான்.

''பெண்ணே! கனிரசமே! மலரே! உன்னெழில் என்னை நிலைகுலையச் செய்கிறது. உன்மேனியின் கவர்ச்சி என் மதியை மயக்குகிறது. அழகுப் பெட்டகமே! உன்னை நான் ஆராதிக்கிறேன்..... ஆரணங்கே! என் அன்பை ஏற்றுக்கொள்வாயா?.... ஏந்திழையாளே! என்னை நீ ஏற்றுக் கொள்வாயானால் ஈரேழு லோகங்களை உன் காலடியில் அர்ப்பணிப்பேன். கைலையையே சிம்மாசனமாக்கி அதில் உன்னை அமர்த்துவேன்... மனதில் புகுந்த மோகினியே! சரியென்று சொல்...'' என்று அவளை அணைக்க கரங்கள் நீட்டினான்.

அகந்தையின் உச்சநிலையில் அரக்கன் பேசுவதைக் கேட்ட மோகினி, நெளிந்து வளைந்து சற்றே அவனிடமிருந்து விலகி நின்றாள்....

''ஆணழகா! உன்னிடம் மையல் கொள்வது என் பாக்கியம். ஆனால்....'' என்று சிறிதே துயரம் தோய்ந்த குரலில் முணுமுணுத்தாள் மோகன சுந்தரி...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


''ஆனால்... என்ன?... சொல்...''

''என்னை மணம் புணர விரும்பினால், என்னுடன் நடனமாடி என்னை மகிழ்விக்க வேண்டும்.''

''ப்பூ.... இவ்வளவுதானா? இதோ தயார்.....ம்.... ஆட்டத்தை தொடங்கு...''

மோகினி குலுங்கக் குலுங்க சிரித்தாள்...

''ஏன் சிரிக்கிறாய், மோஹினி?''

''பெருத்த உடலுடன் நீ ஆடமுடியுமா என்று நினைத்தேன்... சிரிப்பு வந்தது...''

''நளின காந்தியே! நீ ஆடிக் காண்பிக்கிற ஒவ்வொரு நிருத்ய நிலையையும் நான் அப்படியே ஆடிக்காட்டுகிறேன்.''

''நான் தயார்.''

மோஹினி ஆட்டம் தொடங்கியது.

அண்டமதிர சராசரங்கள் சல சலக்க நர்த்தனம் ஆடினாள் நாராயண ஸ்வரூபியான மோஹினி. அரக்கனும் அவள் ஆட்டத்திற்கு ஈடுகொடுத்து சளைக்காமல் ஆடினான்.

நடனக் கலையின் நூற்றெட்டு நிலைகளில் ஒன்றான ஒரு நிலையில் நின்று, அப்ஸர சுந்தரியாய் மந்தஹாசம் புரிந்தாள் மோஹினி...

இடக்காலை சிறிதே வளைத்துத் தரையில் ஊன்றி, வலது காலை நிறுத்தி, இடது கரத்தை இடையினூடே தொங்கவிட்டு வலது கரத்தை சிரசின் மேல் வைத்து ஆடாமல் அசையாமல் நின்றாள் மோஹினி...

அரக்கனும் அதே நிலையில் நின்று வலக்கரத்தை சிரசின் மேல் வைக்க...

அவன் எரிந்து சாம்பலானான்.

அந்த அற்புதத்தைக் காண முப்பத்து முக்கோடி தேவர்களும் வானத்தில் கூடினர்... பூக்கள் மழைபோல் சொரிந்தன.

பஸ்மமாகிவிட்ட அசுரனின் பயம் நீங்கி மோஹினியை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


நெருங்கினான், நீலகண்டன்.

சாம்பல் குவியலைப் பார்த்து ''பஸ்மாசுரா! வரம் கேட்பதிலும் ஒரு வரம்பு உண்டு. அழிக்கும் செயல்புரியும் ஈசனிடம் நீ கேட்டு பெற்ற வரம் அதி அற்புதமானது. உன் தவ வலியால் எவரையும் அழிக்க சக்தி பெற்றாய்... உனக்கு கிடைத்த வரம் உன் கெடுமதியால் உன்னையே அழித்து விட்டது... எவன் சிரசில் நீ கை வைத்தாலும் அவன் பஸ்மமாகப் போக வேண்டுமென வரம் பெற்ற நீ, உனக்கு வரம் தந்தவனையே உன் வரத்துக்கு முதல் பலியாக்கத் துணிந்தாய்... துர்புத்தி துர்நாசம்...'' என்று மோஹினி மொழிந்தாள்.

மோஹினியின் நயனங்களை சோமசுந்தரன் பார்த்தான்.

அன்றொரு நாள் கைலையில் மோன நிலையிலிருந்த முக்கண்ணன் மீது மோகனாஸ்திரத்தை எய்து எரிந்து போன காமன், இன்று மலரம்பை மோனமிழந்து மோகித்து நிற்கும் மஹாதேவனை நோக்கி எய்தான்.

மோகனாஸ்திரம் மோத, சோமநாதன் மோஹினி மணாளனானான். ஹரியும், ஹரனும் கலந்தனர்... நீலமேக ச்யாமளனும் நீலகண்டனும் புணர்ந்து மகிழ்ந்தார்கள்...

மணிகண்டன் அவதரித்தான்.

''ருத்ரபதியே! உன் மோகம் தீர்ந்தது... ஆனால்...''

''ஆனால் என்ன?''

''புருஷோத்தமனான நான் ஸ்திரீயாக மாறினேன்... சங்கரனான நீ என்னோடு சங்கமித்தாய்... நீயும் நானும் மாறிட மற்றொரு சந்தர்ப்பம் சம்பவிக்க வேண்டும்...''

''நாராயணா! அதுவும் நடக்கும். என் பக்தனான இலங்கேசுவரன், சாம கானத்தில் என்னை மகிழ்விக்க தன் உடலையே யாழாக்கி, தன் உயிரையே ஸ்வரங்களாக்கிப் பண் இசைத்தான்... மனம்மகிழ்ந்த நான் அவனுக்கே மகளாகப் பிறக்கிறேன் என உறுதி அளித்து விட்டேன்...'' என்று சாம்பசிவன் கூறினான்.

''சங்கரா! நீ இப்படித்தான் வகை தெரியாது வரம் கொடுக்கிறாய்... ராவணன் தேவர்களையும் பஞ்ச பூதங்களையும் அடக்கி ஆளப்போகிறான்... ரிஷிகளையும் முனிவர்களையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


துன்புறுத்தப் போகிறான். அவனோ உன் பக்தன். அவனை அழிக்க யாரால் முடியும்?''

''நான் நெருப்பு... என் விந்து இலங்கேசுவரனின் பெண்ணாய் ஜனிக்கும் பொழுது... ராவணன் என்னையும் ருத்ர வில்லையும் ஒரு பேழையில் ஜனகாபுரி விளை நிலத்தில் புதைத்து விடுவான்... மிதிலை மன்னன் ஜனகரின் அன்பு மகளாய் நான் வளர்ந்து கன்னியாகப் பரிணமிக்கும் போது, நீ காகுத்தனாக வந்து என்னை, கடிமணம் செய்து கொள்... இன்றைய உன் விருப்பம் நிறைவேறிவிடும்...''

சங்கர நாராயணர்களின் சங்கல்பம் மனத்திரையில் காட்சியாக விரிந்து மறைந்தது.

''ரகுகுல திலகா! ருத்ரனைப் பூஜிக்காமல் நீ யாரையும் அழிக்க முடியாது... நீயோ ரட்சிப்பவன்... ஆனால் ராவணனை அழிக்க ராமனாக அவதரித்தாய்... நாளை நடக்கப் போகும் வதத்திற்கு இன்று ருத்ர ஸ்வரூபியான என்னை மலர் கொண்டு ஆராதித்தாய்...'' என்று கொஞ்சும் கிள்ளை மொழியில் மைதிலி உரைத்தாள்.

மைதிலி மணாளன் மனம் மகிழ்ந்தான்.

□ □ □

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# பிதாமகர் பீஷ்மர்

வானம் செம்பருத்தியாகப் பூத்து, பின், பூபாளத்தில் பொழுது புலர்ந்தது. அஸ்தினாபுரத்தின் சாலைகளில் மரச்சோலைகளில் குயில்கள் இன்னிசைக் குரலில் கீதமிசைத்து காலைக் கதிரவனை வரவேற்றன.

விதுரரின் மாளிகை முன், ரதம் ஒன்று அந்த அதிகாலை நேரத்தில் வந்து நின்றது. கங்கை மைந்தன், ஹஸ்தினாபுரத்து ஆணிவேர் பீஷ்மர் ரதத்திலிருந்து இறங்குவதா... இல்லை திரும்பிப் போய்விடலாமா என்று அரை வினாடி சஞ்சலமடைந்தார்.

மூதறிஞர், மாளிகை முகப்பில் வந்திருக்கிறார் எனக் கேள்வியுற்ற விதுரர் வாசலுக்கு விரைந்தோடி பீஷ்மரை வரவேற்றார்.

''ஆச்சார்யப் பெருமகன் ஆக்ஞை இட்டால் அடியேன் தங்களைக் காண ஓடிவந்திருப்பேனே! தாங்கள்...'' பணிவாக விதுரர் கூற,

''வாசுதேவன் இருக்கிறானா?'' என்ற வினாவை உதிர்த்துவிட்டு, உத்தரீயத்தைக் கையில் லாவகமாகத் தாங்கிக் கொண்டே ரதத்திலிருந்து இறங்கினார் பீஷ்மர்.

தன் மாளிகைக்கு முதன் முதலாக வருகை தரும் பிதாமகரை எப்படி வரவேற்பது என வகை தெரியாமல் திகைத்தார் விதுரர்.

''இருக்கிறார், எம்பிரான்.''

விதுரர் பின்தொடர, பீஷ்மர் மாளிகைக்குள் விரைந்தார். மாளிகையினுள் புல்லாங்குழல் ஊதி உயிரினங்களை மயக்கிய புருஷோத்தமன், பீஷ்மரின் எதிரில் தோன்றி அவரைப் பரவசமாக்கினான்.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy 

கண்ணனின் கால்களில் விழ இருந்த மூத்தவரை, ஆலிங்கனம் செய்து கொண்டான், ஆயர்பாடி அண்ணல்.

''கங்கா புத்திரர் இங்கு அதிகாலையில் வருகை தருவது அபூர்வமா! இல்லை அதிசயமா?... என் கண்கள் நம்ப மறுக்கின்றன'' மந்தஹாஸப் புன்முறுவலுடன் மதுசூதனன் அமுத்தலாகக் கூறினான்.

''தாமரையை நாடித்தான் சூரியன் வருகிறான். கடலை நாடித்தான் நதி ஓடுகிறது. அதே போலத்தான் நான் இங்கே வந்ததும்...''

''அப்படியா!''

''ஆமாம் கண்ணா! நேற்று ராஜ சபையில் தங்களுடைய விச்வரூபம் கண்டேன். மனம் பூரணமாக மகிழ்ச்சி அடையவில்லை. அதனால்தான்...''

''மறுபடியும் விஸ்வரூபியாக மாறச் சொல்கிறீர்களா?''

''இல்லை... இல்லை... ஐம்புலன்களும் திருப்தியடைந்தன. ஆனால்... என் உள் மனம் விச்வரூப காட்சியில் ஈடுபடாமல் எதையோ கற்பனை செய்து கொண்டு சஞ்சலமடைகிறது.''

''அதற்கு நான் என்ன செய்ய முடியும். இனிப்பை நாவில் வைக்கலாம். அதை சுவைப்பது இனிப்பை ருசிப்பது நாவின் வேலை. அது மறுத்தால்...''

''கண்ணா! நீயே இப்படிச் சொன்னால் நாங்கள் எங்கே போய் யாரிடம் கேட்பது?''

''உங்களிடமேதான்!''

''புரியவில்லையே... பிரபு!''

''கால்களில் விலங்குகளை மாட்டிக் கொண்டு ஓட முடியவில்லையே என்று சொன்னால், அது தர்க்கமாகாது, குதர்க்கமாகும், பீஷ்மரே!''

பீஷ்மர் மௌனமானார். அவர் கண்கள் அரவிந்தாக்ஷனின் நயனங்களையே ஊடுருவி நோக்கின. கருணை பொங்கும் கார்மேக வண்ணனின் கருவிழிகளில், தன் வினாவிற்கு விடையைத் தேடினார்.

மாயாவியான மாதவன் அத்தனை எளிதாக விடையைக் காட்டிவிடுவானா!

''விதுரரே! மஹாரதர் மௌனமாகி மோன தவத்தில் மூழ்கிவிட்டார்... எனக்குப் பசி... பாலும் பழமும் தருகிறீரா?''

வில்லிலிருந்து விடுபட்ட அம்பு போல் விதுரர், கண்ணன் பசியாற, கனியமுதமும் கற்கண்டு கலந்த பாலும் கொண்டு வந்து உபசரித்தார்.

கங்காபுத்திரரின் கவனத்தையும் திசை திருப்பி, அவரையும் பசியாற்றிக் கொள்ளத் தூண்டினான் த்வாரகா பதி.

கனித் துண்டொன்றைக் கையிலெடுத்த கண்ணபிரான், கனிவுடன் அளிக்க, பீஷ்மர் அதனைச் சுவைத்து உண்டார்.

''கனி இனிக்கிறதா?'' குறும்புத்தனமாகக் கேட்டான் கோகுலகிருஷ்ணன்.

''கண்ணன் கை பட்டால், வேம்பும் கரும்பாகுமே!''

''இது அப்படியல்ல... விதுரனின் அன்பு, தேனினும் மதுரமானது, பக்தியில் பழுத்து, அன்பில் தோய்ந்து அவர் அளித்த கனி இயல்பாகவே இனிக்கும்'' அதரங்களிடையே சிரிப்புத் தவழக் கூறினான் ஸ்ரீதரன்.

''மதுராபுரி மன்னா! இந்த ஏழையை ஏன் வீணாகப் புகழ்கிறீர்கள்? வம்பில் என்னை மாட்டிவிடாதீர்!'' அடக்கமாக பதிலுரைத்தார் விதுரர்.

''விதுரரே! நீரா ஏழை! ஸ்ரீவத்ஸனான கண்ணனை விருந்தாளியாக அடையும் பாக்கியம் பெற்ற நீரா ஏழை?'' என்ற பீஷ்மர், நீண்ட பெருமூச்சுவிட்டார்.

அரண்மனையில் அரச போகத்துடன் வாழும் தன்னை நாடி யாதவகுலச் செம்மல் வரவில்லை. அஸ்தினாபுரத்து அமைச்சர் வீட்டுக்கு வலியச் சென்றிருக்கிறாரே என்ற அங்கலாய்ப்பு மனத்தாங்கலாகக் கிளம்பி பெருமூச்சாக வெளிவந்தது.

அண்ட சராசரங்களைப் படைத்து ஆள்கின்ற மஹாசக்தி அன்புக்குத் தான் கட்டுப்படும். அகந்தைக்கு அல்ல என்ற முதற்பாடம் அந்த முதியவருக்கு அன்றுதான் புலனாகியது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''ஏழை என்றும் செல்வந்தன் என்றும் ஏன் விவாதம்? தேவவ்ரதர் ஏதோ காரியமாக வந்திருக்கின்றார். அதனை அறிந்து கொள்வதை விட்டு விட்டு அனாவசியமான...''

''ஆமாம்!... ஆமாம். நான் கண்ணனைத் தேடி வந்தது மிக மிக முக்கியமான விஷயம். அதை மறந்து... ஏதோ நினைவில் எதையோ பேச முற்பட்டேனே... என்ன மடமை..'' வீணான வாக்குவாதத்திற்கு வித்திடப் போனதை எண்ணி மனம் வருந்தினார் பீஷ்மர்.

''தேவவ்ரதரே! ஏன் வருந்துகிறீர்கள்? மனம் சஞ்சலமடையும் பொழுது, வந்த காரியத்தை மறப்பது இயல்பு தான்... ஆனால் நீங்களோ அசாதாரணமான வைராக்கிய சித்தர்...'' கண்ணன் கூற்றில் கலந்திருப்பது ஹாஸ்யமா அல்லது கேலியா!

''தேவகி மைந்தா! என் மனம் உண்மையாகவே கலங்கித்தான் இருக்கிறது...''

''அதுதான் தெரிகிறதே!... ஏன் அப்படி ஒரு கலக்கம்?'' குறுக்கிட்டான் கேசவன்.

''நேற்றைய தங்கள் தூது — பாண்டவர்களின் சார்பில் தூது வந்தது — வந்த நோக்கம் வெற்றி அடையாமல் போனதில் என் மனம் துயர்பட்டுக் கலங்குகிறது.''

''தூதனாக வந்த எனக்கு வெற்றி தோல்வி என்பது கிடையாது. வந்த நோக்கம் தோல்வி அடைந்ததே தவிர... நான் வெற்றி பெற்றுவிட்டேன். எனக்கு என்றுமே தோல்வி கிடையாது'' ஈஸ்வராம்சமான புண்டரீகனின் வாக்கியங்களில் புதைந்து இருக்கும் ரகசியத்தைத் தெரிந்து கொள்ள, அஸ்தினாபுரத்து ராஜதந்திரியால் முடியவில்லை. திகைத்தார்.

''புரியவில்லையே'' என்று கூறிக் கொண்டே புருஷோத்தமனின் இரு கரங்களையும் தன் இரு கைகளால் பற்றி, தன் கண்களில் ஒற்றிக் கொண்டார், சாந்தனவன் என்ற பீஷ்மர்.

நாராயண ஸ்வரூபனான நந்த குமாரனின் ஸ்பரிசம் ஏற்பட்டவுடன், பீஷ்மரின் ஞானக்கண் திறக்கப்பட்டது. புல்லரிப்பில் புளகாங்கிதமானார், வெண்தாடிக்காரர்.

''யுத்தம் நடக்கத்தான் வேண்டுமா?... அதைத் தடுக்க வழியே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


இல்லையா?'' தழதழத்த குரலில் தயங்கித் தயங்கிக் கேட்டார், அஸ்தினாபுரத்து அரசு பட்டத்தைத் துறந்த மஹான்.

''பகைமை முற்றி வேரூன்றிப் போன நிலையில், பகைவர்கள் இருவரும் போர் முனையில் மோதிவிடாமல், கை கோர்த்துக் கொண்டு போஜன சாலைக்கா போவார்கள்? பகைமை முளைவிட்ட காலத்தில் அதைக் கிள்ளி அழித்திருக்க வேண்டும். அப்பொழுது கண்கள் உடையவர்களும், கண் பார்வையில்லாதவருடன் சேர்ந்து கொண்டு, தங்கள் கண்களையும் குருடாக்கிக் கொண்டார்கள்.''

''கண்ணா! உண்மைதான். தவறுகள் அநேகம் நடந்துவிட்டன. எல்லாவற்றையும் அறிந்த நான்...''

''அன்று வாய் பொத்தி நின்று விட்டீர். இன்று... வாய் திறந்து என்னிடம், வரப்போகும் போரை நிறுத்த முடியாதா என்று கேட்கிறீர். பாண்டவர்கள் ஐவரும் உங்கள் பேரக் குழந்தைகள்தானே!'' கண்ணன்.

''ஆமாம்''

''அவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசத்தில் அவதியுற்ற போது நீர் கண் கலங்கினீரா? இல்லை உங்கள் மனம் புண்பட்டதா?''

''நடந்ததை நினைத்து நான் கலங்காத நாட்களே இல்லை. புண்பட்ட என் மனம் துயரத்தால் வருந்தாத நேரமே இல்லை.''

''நீர் கழிவிரக்கத்தால் துயரப்பட்டிருந்தால் யாருக்கு என்ன பயன்?''

ஆஜானுபாகுவான ஆறடி உயரமுள்ள பீஷ்மர் தலை குனிந்து மௌனமானார். அது நாள் வரை கூன்விழாத அவர் முதுகில் கூன் தோன்றியது.

''தேவவ்ரதரே! போனது போகட்டும். நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கட்டுமா?''

நிமிர்ந்தார் பிதாமகர்.

''தங்கள் தாய் கங்கை. கங்கையின் மைந்தனாகிய நீர் உங்கள் தாயாரைப் புரிந்து கொண்டிருக்கிறீரா?''

விழித்தார் கங்கை மைந்தன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''கங்கை பரிசுத்தமானவள்; பாரபட்சமற்றவள்; அவளுடைய பிரவாகத்தில், நல்லவர்களும், தீயவர்களும் பலனடைகிறார்கள். ஒருவருக்கு நீர் அளித்து, மற்றவருக்கு நீர் அளிக்காமல் இருந்ததில்லை... ஆனால் அந்தத் தாயின் மகனாகிய நீங்களோ...''

''நான்...''

''பிறவியிலிருந்தே, மாறுபட்டே நின்று அரசியலையும் அரசாங்கத்தையும் குழப்பிவிட்டீர்.''

''நானா... எவ்வாறு?''

''சொல்கிறேன்... பொறுமையாகக் கேளும்.''

''கேட்கிறேன், பிரபுவே!''

''முதல் குற்றம்... நீர் பிரதிக்ஞை செய்தீரே... அன்றுதான் நாளை வரப் போகும் போருக்கு அடிக்கல் நட்டீர்.''

''என்ன! நானா... நானா யுத்தத்திற்கு காரணம்!''

''ஆமாம்... சாந்தனவரே! அன்று நீர் ஹஸ்தினாபுரத்து இளவரசர்... உமது பொறுப்பில் ஹஸ்தினாபுரம், வளர்ச்சியுற்றுப் புகழ்பெற வேண்டுமென, நாட்டு மக்களும், அரசவை அமைச்சர்களும் உங்களுக்கு இளவரசுப் பட்டம் சூட்டினார்கள்... ஆனால் நீர் அவர்களுடைய எதிர்பார்ப்பை மதியாமல், அமைச்சர்களை கலந்து ஆலோசியாமல் க்ஷண நேரத்தில் அந்தப் பெரிய பொறுப்பை உதறிவிட்டீர். ஜனநாயக மரபை உதாசீனப்படுத்திவிட்டீர்.''

''அப்படியில்லை கண்ணா! என் தந்தையின் அபிலாஷையின் பொருட்டு...''

பலமாகச் சிரித்தார் பலராமனின் இளவல்.

''வானப்பிரஸ்தம் போகவேண்டிய வயதில் காம இச்சையில் சிக்கியவர் தந்தையே ஆனாலும், அந்த தனிப்பட்ட ஒரு மனிதனின் ஆசைகளை நிறைவேற்ற, மக்களின் விருப்பத்தை மறந்து, இளவரசுப் பட்டத்தைத் துறந்து என்ன என்னவோ சபதங்கள் செய்தீர். உமது தாய்கூட உமக்கு புத்தி சொன்னாள்... அன்று இயற்கை சீறியது ஆனால் நீர்...''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''நான்... நான் அன்று செய்தது...''

''பீஷ்மர் என்ற உன்னதமான நற்பெயரைப் பெற்றீர்... ஆனால் உண்மையில் பொறுப்புகளைத் தட்டிக் கழிப்பதில் பெயர் பெற்றுவிட்டீர்...'' கண்களில் நீர் முத்துக்கள் தோன்ற கண்ணனை பார்த்தார், கங்கை மைந்தன்.

''இளவரசர் பட்டத்தைத் துறந்துவிட்ட நீர், துறவியாகித் தேசாந்திரம் போயிருக்கலாமே... உரிமையை உதறிவிட்ட நீர் ஏன் உறவை வைத்துக் கொண்டீர்? சத்யவதியின் வாரிசுகளையும் ஹஸ்தினாபுரத்தையும் காப்பாற்றுவேன் என்று பிரதிக்ஞை செய்தீரே... ஏன்?... சத்யவதி உம்மைக் கேட்டுக் கொண்டாளா?... இல்லை உங்கள் தந்தை சந்தனுதான் ஆணையிட்டாரா?''

மலை போல் நின்ற பீஷ்மர் என்ற நெடிய உருவம் குறுகிக் குன்றுபோல் ஆகியது.

''மஹாதேவனின் அன்பிற்குரியவளான கங்கா தேவியின் புத்திரனாக ஜனித்தவர் மீனவ பேரழகியான பரிமளகந்தி என்ற சத்யவதியின் வார்த்தைகளை சிரமேற்கொண்டு காப்பாற்ற நினைத்து வாழும் சிரேஷ்டரான நீர், சக்தி ஸ்வரூபமான ஒரு பெண்ணை அவமானப்படுத்தினீர். அவமானப் படுத்தப்பட்ட மற்றொரு பெண்ணுக்கு அடைக்கலம் கொடுக்க அல்லது அவள்பால் வாதிட மறந்துவிட்டீர்.''

''கண்ணபிரானே! என் தலை சுற்றுகிறது...''

''தலை சுற்றுகிறது. மனம் கலங்குகிறது. உள்ளம் குமுறுகிறது... இப்படி இன்று நீர் சொல்வது உமக்கு அழகல்ல... அன்று சாந்தனவனாக இருந்த இளம் வயதிலேயே அரண்மனையிலிருந்து வெளியேறியிருந்தால்... அரண்மனை வாசமும் சுக போகமும், மற்றவர்கள் துதிபாடி புகழ்வதில் மனம் மகிழ்வதும்... ஆகியவைகளில் உங்களுக்கு நாட்டம் இருந்தது. பொறுப்பில்லாத சுகவாழ்வு, அதன் மயக்கம்... உம்மை இரண்டு பெரிய தவறுகளைச் செய்யவைத்து விட்டது. அந்த மகாபெரிய தவறுகள் இன்று பாரதப் போராகப் பரிணமித்து விட்டன.''

''எப்படி?'' இந்த ஒரு சொல் மஹாரதரின் வாயில் ஜனிக்க பல வினாடிகள் ஆகின.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


கண்ணன் விதுரரை நோக்கினான். தாமரையைப் போன்ற தாமோதரனின் வதனத்தையே தன் கண்களால், பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான் தாதியின் மகன், விதுரன்.

''எப்படியோ? அதையும் உமக்கு நினைவூட்டுகிறேன்... சத்யவதியின் இருபுத்திரர்களுக்கும் திருமணம் செய்து வைக்க மூன்று அரசிளங் குமரிகளைச் சிறைப்படுத்தி வந்தீரே. நினைவிருக்கிறதா?''

தலையை ஆட்டினார் பீஷ்மர்.

''உமக்கு இருசகோதரர்கள் தானே. அந்த இருவருக்கு திருமணம் செய்விப்பதற்கு மூன்று பெண்கள் ஏன்? போகட்டும்... அந்த மூன்று பெண்களில் மூத்தவளானவள் தான் மற்றொருவனைக் காதலிப்பதாகவும்; அவனையே தன் மனதில் ஏற்றுக் கொண்டு விட்டதாகவும் அவனுக்கே தன் வாழ்வில் இடமுண்டு என்றும் எவ்வளவோ மன்றாடியும் நீங்கள் உங்கள் முரட்டுப் பிடிவாதத்தால், அவளையும் அவளுடைய இரு சகோதரிகளுடன் இழுத்து வந்தீர்...

''அவளுடைய காதலனான அரசகுமாரன் அவளை மீட்பதற்கு வந்த பொழுது அவனைப் போரில் முறியடித்து விரட்டினீர். தோல்வி கண்ட ஏக்கத்திலும் ஆயுதங்களை இழந்த ஆற்றாமையிலும் அவன் பரதேசியாய்க் காட்டிற்குள் ஓடிப்போனான். அதைக் கண்ணுற்ற அந்தக் காதலி கதறிக் கண்ணீர் விட்டாள். கெஞ்சினாள். இரக்கமற்ற நீர் ஒரு பெண்ணின் உள்ளுணர்வை அறிந்து கொள்ளாமல் நடந்து கொண்டீர். இளைய சகோதரிகளுக்கு மணமுடித்த பின், அந்த ஒருத்தியை அவள் காதலனிடமே போய்விடு என்று துரத்திவிட்டீர்...

''அவள் அவனிடம் எந்த முகத்துடன் போவாள்? ஆலோசித்தீரா?... இல்லை... சிறைப்பிடித்த உம்மையே தஞ்சமென அடிபணிந்து, உம்மையே ஏற்றுக்கொள்ள அனுமதிக்கக் கேட்டுக் கொண்ட பொழுது, அவளை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்ட நீர் அவளை திக்குத் தெரியாத காட்டில் கொண்டு போய் விட்டுவிட்டுத் திரும்பிவிட்டீர்.''

''ப்ரம்மச்சர்ய விரதத்தைக் கடைப்பிடிக்கும் நான் அவளை எப்படி மணப்பது? அப்படி நான் செய்வது சத்தியத்தை மீறியதாகுமே.''

''முதலில் இதைச் சிந்தித்து இருந்தால், இப்படி ஒரு தவற்றைச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


செய்யாமல் தவிர்த்து இருக்கலாமே.''

''உண்மைதான். ஆனாலும், அவளுடைய காதலனிடம் சேர்த்து விட முயன்றேனே, அவன் அவளை நிராகரித்துவிட்டால் அதற்கு நானா பொறுப்பு?''

''ஆஹா! உங்கள் பொறுப்பற்ற வாதம் எனக்குச் சிரிப்பைத்தான் உண்டு பண்ணுகிறது. தவறுக்குத் தங்க முலாம் பூசிவிட்டால், தவறு சரியாகிவிடுமா?... மூதறிஞரே!''

விழித்தார், மூதறிஞர்.

''அந்தப் பெண் அவமானப்பட்டாள். அவள் வாழ்வை இழந்தாள். எதிர்காலமே சூன்யமயமாகிவிட்ட அந்த ஏந்திழையாள், பித்துப் பிடித்து அலைந்தாள்... அந்தத் தருணத்தில்தான், அவள் மனதில் ஆத்திரம் பொங்கிப் பெருகியது... அவளை அழித்த உம்மை அழிக்க விரதம் பூண்டாள். அவள் சிகண்டியாக மாறி உம்மைப் பழி வாங்கக் காத்திருக்கிறாள். நீர் வித்திட்ட அந்த வினை இதோ இன்று மரமாய் வளர்ந்து நிற்கிறது. உமது மரணத்திற்கு நாள் குறிக்கத் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறது!''

''பாசத்தின் பற்றுதலில் நான் செய்த காரியம் இப்படிப் பூதாகரமாக வடிவெடுக்கும் என்று அறியாமல் போனேன்.''

''அறியாமை பாவத்திற்கு மன்னிப்பு ஆகாது. ஆராய்ந்து அறிந்து செயல்பட வேண்டும் என்பதற்காகத்தான் மனித இனத்திற்கு ஆறறிவு வைத்தான் பிரம்மன்.''

''அவள் என்னைப் பழி வாங்கிக் கொன்று விடட்டும்... அஸ்தினாபுரத்து அரச குலம் வாழ என்னைப் பலி கொடுத்து விடுகிறேன். அரசையும் கௌரவ குலத்தையும் ரக்ஷித்து விடு கண்ணா! அதுதானே என் லட்சியம்...''

''உங்கள் கோரிக்கையை நிறைவேற்றி விடலாம்... ஆனால் மற்றொரு பெண் தனக்கு இழைத்த தீங்கிற்கு, உங்கள் வம்சத்தையே பழி வாங்கக் காத்திருக்கிறாளே! அவளுடைய சபதம் நிறைவேறுவது எப்படி?''

''கேசவா! உனக்குத் தெரியாதா?... நீர் மனம் வைத்தால் நடக்காத ஒன்றும் உண்டோ இவ்வுலகில்!''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


''ஆசார்யரே! ஒரு கன்னிப் பெண்ணின் காதலைக் கருக்கி அழித்த நீர், மற்றொரு பெண்ணின் அவமானத்திற்கு உடந்தையாக நின்று அவள் கௌரவ சபையில் சீரழியும் பொழுது கைகட்டி வாய்புதைத்து வாளாவிருந்தீர்... அதுதான் வீரனுக்கு அழகா? ஒரு தாயின் வயிற்றில் ஜனித்தவர், ஒரு தாயின் வேண்டுகோளை மதித்து வாழ்பவர், தாய்குலத்தின் பிரதிநிதியான ஒருத்தியை துஷ்டர்கள் அலங்கோலப் படுத்தும்பொழுது உம் கை வில் எங்கே போயிருந்தது? உமது வீரம் உறங்கி விட்டதா?... அழுது புலம்பி உங்களிடம் நியாயம் கேட்டாளே அவள்... அப்பொழுது என்ன செய்தீர்? அபலைப் பெண் ஒருத்தி அவலக் குரலில் கேட்கிறாள்... பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன், நீர் போற்றிப் பாதுகாக்கும் கௌரவ சபையில் நடந்ததை நினைத்துப் பாருங்கள். நிர்க்கதியாய் நிற்கும் நங்கை நீதி கேட்டுக் கதறியதை மறுபடியும் நினைவுபடுத்திப் பாருங்கள்....''

அன்றைய நிகழ்ச்சி நிழலாடுகிறது...

தலை முடி பற்றித் தரதரவென்று இழுத்து வரப்பட்ட திரௌபதியைச் சபையின் முன் தரையில் எறிகிறான் துச்சாதன்.

தடாகத்திலிருந்து பறிக்கப்பட்ட அல்லித் தண்டை தரையில் எறிந்து விட்டது போல சபையில் வீழ்ந்து கிடந்த துருபதன் மகள் துள்ளி எழுந்தாள். அவள் அவையை நோக்கிக் கேட்கிறாள்...

''நாயகர் தாம் தம்மைத் தோற்றபின் என்னைப் பணயம் வைக்கும் உரிமை அவர்களுக்கு இல்லை. புலைத் தாயத்திலே விலைப் பட்டபின், என்ன சாத்திரத்தால் என்னைத் தோற்றிட்டார்? அவர் தாயத்திலே விலை பட்டவர். புவி தாங்கும் துருபதன் கன்னி நான் நிலை சாயப் புலைத் தொண்டு சார்ந்திட்டால், பின்பு தாரம் உடமை அவருக்கு உண்டோ? கௌரவ வேந்தர் சபை தன்னில் அறங் கண்டவர் யாருமில்லையோ? மன்னர் சௌரியம் வீழ்ந்திடும் முன்னரே, அங்கு சாத்திரம் செத்துக் கிடக்குமோ?'' என்று அவள் நியாயம் கேட்டாள்.

அப்பொழுது, 'தாதியடி தாதி' என வெறி கொண்ட துச்சாதனன் தீதுரைகள் கூறினான். அவளைப் பிடித்து இழுத்து ஏச்சுக்கள் சொல்கிறான்...

''இவனைக் கண்டித்து 'நிறுத்தடா' என்று சொல்ல

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாருமில்லையே இந்த அவையில்'' என்று அவள் கேட்டுக் கெஞ்சிய பொழுது...

கர்ணன் சிரித்திட்டான், சகுனி புகழ்ந்தான். ஏனையோர் விழிக்கின்றனர். குல குருவும், ஆசான் துரோணரும் தலை கவிழ்ந்து அமர்ந்திருக்கின்றனர். தகுதியில் உயர்ந்த பீஷ்மர்....

'தையலே! சூதாடி உன்னை யுதிட்டிரனே தோற்றுவிட்டான். வாதாடி அவன் செய்கையை மறுக்கின்றாய்... உன்னையே ஒரு பந்தயமாக வைத்தது குற்றமென்கிறாய். பண்டைய காலவிதிப்படி நீ சொல்வது நியாயமாகலாம். ஆணோடு பெண் முற்றும் நிகரெனப் பேணிவந்தனர்... ஆனால் இன்று... ஆடவர்க்கு ஒப்பில்லை மாதர். ஒருவன் தன் தாரத்தை விற்றிடலாம். தானம் என வேற்றுவருக்குத் தந்திடலாம். முற்றும் விலங்கு முறைமை அன்றி வேறில்லை. தன்னை அடிமையென விற்றபின் உன் தருமன் உன்னை அடிமையெனக் கொள்வதற்கு நீதி உண்டு. தீங்கு தடுக்கும் திறன் இலேன்...'' என்று கூறி முடிப்பதற்குள்... விகர்ணன் குதித்து எழுந்தான்...

''பெண்ணரசி கேட்ட கேள்விக்கு பாட்டன் சொன்ன வாதத்தை ஏற்க இயலாது. பெண்டிரை விலங்கு என கணவர் எண்ணி ஏதனிலும் செய்திடலாம் என்றான் பாட்டன். உயர் வேதநெறி மாறி வழக்கத்தில் கொள்வதை நெறி என்றான். இதுகாறும் அரசியலைச் சூதில் தோற்ற விந்தை உண்டோ? எந்தையர் தம் மனைவியை விற்றதாகக் கேட்டதுண்டோ, விலை மாதருக்கு விதித்ததையே பிற்கால நீதிக்காரர் சொந்தமெனச் சாத்திரத்தில் புகுத்திவிட்டார். சூதர் வீட்டில் ஏவற்பெண் பணயமில்லை. மனு நீதி துறந்து இங்கே வலிய பாவம் தன்னை இரு விழி பார்க்க வாய் பேசுகிறோம்... தாத்தனே நீதி இது தகுமோ?'' என்று நியாய தர்மங்களை எடுத்துரைத்தான். அவன் பேச்சு எடுபடவில்லை.

நீதியும், நியாயமும் மறுக்கப்பட்டு நிர்க்கதியாகி விட்டவளை அலங்கோலப்படுத்தி அவமானமுறச் செய்ய முயன்றனர்.

ஆடை குலைந்து நிற்கிறாள். 'ஆ'வென அழுது புலம்புகிறாள். துருபதன் மகள் கௌரவ குலத்து மருமகள்.

செயலற்று நின்றனர் பாண்டவர்கள். மஹாரதர் பீஷ்மர், அஸ்திர சஸ்திர விற்பன்னர் துரோணர், குலகுரு க்ருபர் ஆகியவர்களும்

மற்றவர்களும் மௌனமாய் கற்சிலைகளாய் நிற்கின்றனர்.

மனிதாபிமானமே செத்துவிட்ட அந்த (அ) கௌரவ சபையில் துணை ஏதும் இல்லை எனப் புரிந்து கொண்ட திரௌபதி...

'கண்ணா' என்று முறையிட்டாள்.

ஜகத்ரக்ஷகன் அவளை பெருத்த அவமானத்திலிருந்து ரட்சித்தான்.

முடியவிழ்ந்து, ஆடை சீர்குலைந்து நின்ற பெண் சபதம் செய்கிறாள்.

''பாவி துச்சாதனன் செந்நீர், அந்தப் பாழ் துரியோதனன் ஆக்கை இரத்தம், மேவி இரண்டும் கலந்து குழல் மீதினிற் பூசி நறுநெய் குளித்தே சீவிக் குழல் முடிப்பேன் யான். இது செய்யும் முன்னே முடியேன். தேவி பராசக்தி ஆணை.''

நினைவுக்குத் திரும்பிய பீஷ்மர் பேச வழியின்றி அன்றைய காட்சியின் தீவிரத்தை எண்ணித் தலை கவிழ்ந்து விம்மினார்.

'தேவவ்ரதரே! அன்றே தர்மங்களையும் நியாயங்களையும் நிலைநாட்டியிருந்தால், இன்று தர்ம யுத்தமே வராமற் தடுத்திருக்கலாம். தர்மத்தைச் சூது கவ்வின போது, அதர்மக்காரர்களைத் தட்டிக் கேட்க திறனில்லை என்று சபையில் கூற ஒரு மஹாரதருக்கு வெட்கமில்லையா? வீராதி வீரரான நீர் அபலைப் பெண்ணைக் காப்பாற்ற முடியாமற் போனது எவ்வாறு? நீரா ஹஸ்தினாபுரத்தைக் காப்பாற்றப் போகிறீர்!?''

''அன்று என் கைகள் கட்டுண்டு கிடந்தன.''

''கைகள் கட்டுண்டு கிடக்கவில்லை. பாசமற்ற உறவுகளையும் உரிமையற்ற பதவியையும் சங்கிலிகளாகப் பிணைத்துக் கொண்டு கடமை என்ற போர்வையால் போர்த்திக் கொண்டீர். அந்த உரிமையில்லாத அதிகாரமில்லாத பதவியை அன்றே உதறிவிட்டு சபையிலிருந்து வெளிநடப்பு செய்திருக்க வேண்டும்... போகட்டும்... சூதில் தோற்ற பாண்டவர்கள் இன்று தண்டனை அனுபவித்து விட்டுத் திரும்பிய காலத்தில், அவர்களுக்கு இந்திரபிரஸ்த ராஜ்யத்தை மீட்டுத் தந்திருக்க வேண்டும். அதையும் உம்மால் செய்ய முடியவில்லை... அதிகாரம் இல்லாத பதவியைத் துறந்துவிட்டு, உரிமைகளில்லாத உறவுகளைத் துண்டித்து விட்டு வரமுடியாத தர்மசங்கடம்தான் பீஷ்மர் என்ற உங்களின் மறுபக்கம்...''

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy 

''கண்ணா! என்னை வதைக்காதே. நிலைமை உமக்கு நன்றாகத் தெரிகிறது... இருந்தும்...'' என்ன சொல்வதென்று அறியாமல் கலங்கினார் கங்கையின் மைந்தன்.

''ஏன் நிறுத்திவிட்டீர்?... இருந்... து.. ம் என்று எதற்காக எதை எண்ணி இழுபறியாக மனதை ஓட விடுகிறீர்'' கொஞ்சம் கடுமையாகவே கேட்டான், கம்ஸனை வதம் செய்த கண்ணன்.

''எனக்கே புரியவில்லை. புலனறியாது புதை மணலில் சிக்குண்ட என்னை ரட்சித்து அருள வேண்டும். ஜகத்ரட்சகனான நீதான் கருணை காட்ட வேண்டும்.''

''ஓஹோ! அப்படியா!'' வேய்ங்குழலோன் வேடிக்கையாகக் கேட்டான்.

''ஆமாம்! ஆபத்பாந்தவா! அனாதரட்சகா! நீ இன்றி யார் துணை? உன் சரணகமலங்களில் பற்று வைத்திருந்தால் எனக்குத் தர்மசங்கடங்கள் எதுவும் ஏற்பட்டிருக்காது. அதை விட்டு உறவுகளிலும் பிறந்த மண்ணிலும் பற்றுதல் வைத்து என் காலத்தை வீணடித்து விட்டேனே!'' கண்கலங்க மனம் தெளிவுறலானார் கங்கா புத்திரர்.

''தேவவ்ரதரே! கர்ம பலனை அனுபவித்துத்தான் ஆக வேண்டும். சர்ப்பம் தன் தோலை உரிப்பது போல், கர்மபலனை உரித்து உதறி எறிந்துவிட முடியாது. பிறவி எடுத்த ஜீவன் தன் கர்மங்களைக் கரைத்து விட்டுத்தான் முக்தி பெற முடியும். அது தெய்வ சங்கல்பம். இயற்கையின் நியதி. ஜனனம் ஆகின்ற பொழுதே, அதுவும் ஜீவனுடன் ஒட்டிக்கொள்கிறது. ஒட்டிக் கொண்ட கர்மம்தான், வாழ்க்கைப் பயணத்தை நடைபோட வைக்கின்றது.

''அதற்கு முடிவு மரணம்தான். மரணம் அடையும் பொழுது கர்மம் கணக்கெடுக்கிறது. கர்ம பலன்கள், குறைந்து தேய்ந்து போயிருந்தால் புனர்ஜனனமில்லாமல் முக்தி அடைகின்றது ஜீவன் குறையாமல் தேய்ந்து போகாமல் மேலும் கர்ம பலன்களைச் சேகரித்திருந்தால், மறுபடியும் மறுபடியும் இறப்பும் பிறப்பும்தான். ஜனன மரணச் சூழலிலிருந்து வெளியேற...''

பாரதப் போரிலே, குருக்ஷேத்திரத்தில் உபதேசிக்கப் போகின்ற கீதைக்கு முன்னுரை மொழிந்தான் முகுந்தன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


''முகுந்தா! ப்ரேம ஸ்வரூபா! கதி என்ன? இதோ இத்தருணமே யாவற்றையும் மறந்து, துறந்து, உன் பாதங்களே கதியெனச் சரணடைகிறேன். போதும் இந்த வாழ்வு...'' எட்டு அங்கங்களும் தரையினைத் தழுவ பரந்தாமனின் பாதங்களைப் பற்றிக் கொண்டார் பிதாமகர் பீஷ்மர்.

விண்ணுக்கும் மண்ணுக்குமாய் வ்யாபித்து நிற்கும் விஷ்ணுஸ்வரூபியான கண்ணபிரான் பீஷ்மரைத் தோள்பற்றித் தூக்கி நிறுத்தி...

'கங்கா புத்திரரே! காலம் கடந்தது உங்கள் ஞானம். நீங்கள் செயல்பட வேண்டிய சில முக்கிய பொறுப்புகள் உள்ளன. அதில் மிக மிக முக்கியமானது, நரநாராயணர்களுக்கு எதிராக போர்க்கொடி தூக்கி கௌரவ சேனைகளின் தளபதியாகப் போரிடுவது...''

''என்ன! உனக்கு எதிராகவா?... முடியாது... முடியவே முடியாது. அதை விட உயிரைத் தியாகம் செய்து கொள்கிறேன்.''

''பீஷ்மரே! பேடித்தனமாக ஏன் வார்த்தைகளைக் கொட்டுகிறீர்? அதர்மத்தின் பக்கம் நின்று கொண்டே காலத்தைக் கழித்துவிட்ட நீர் அதற்காகவே போரிட வேண்டுமென்பது என் சங்கல்பம்... அந்தப் பாரதப் போரிலே... உம்முடன் ஒட்டிக் கொண்டிருக்கும் வீரம், சாதுர்யம், அஞ்ஞானம், அகந்தை, ஆணவம் எல்லாம் ஒவ்வொன்றாக அழிந்து விடும்... நீர் எந்தப் பற்றுமின்றி திக்கற்ற நிலையில் நிற்கின்றீரோ... அந்த நேரத்தில்...''

''அது எந்த நேரம்?''

''போர் முனையில் சிகண்டியை நேருக்க நேர் சந்திக்கும் நேரத்தில் மரணம் கவ்வும்.''

''ஒரு பேடியா என்னை... என் வீழ்ச்சிக்கு காரணமாய்... இது என்ன சோதனை?''

''வீரனாய், தீரனாய், தர்மவீரனாய், எழுந்து நின்று தர்மத்தைக் காப்பாற்ற வேண்டிய தருணங்களில் பேடியாய் நீர் நின்றுவிட்டதின் பலாபலன், சிகண்டி என்ற உருவில் உன்னை வீழ்த்திவிடும். விதியின் தீர்ப்பு இது...''

''தங்கள் சித்தம்... அப்புறமாவது எனக்கு முக்தி கிட்டுமா? தேவகி பாலா!''

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy 

''காத்திருக்க வேண்டும், பீஷ்மரே! போரில் நீர் வீழ்ந்து விட்டாலும், உமது உயிர் உடலை விட்டுப் பிரியாமல், பேச்சற்ற மௌன நிலையில், சரமஞ்சத்தில் பல நாள்கள் சயனித்து இருக்க வேண்டும். அந்தக் குறுகிய காலத்தில் மீதம் மிச்சமிருக்கும் மண் மேல் உண்டான பற்றுதல் வறண்டு போய் உதிர்ந்துவிடும்... அதன் பிறகு உத்தராயண புண்ணிய காலத்தில் உமது உயிர் உடல் என்ற கூண்டிலிருந்து விடுபடும்... ஜீவன் முக்தி பெறும்...''

அதிர்ந்து, அயர்ந்து போய், அசைவற்று நின்றுவிட்டார் ஹஸ்தினாபுரத்து தலைமகனான பீஷ்மர்.

காருண்யமே வடிவாகி நிற்கும் வேத புருஷனான வேணுகோபாலன், அவரைத் தழுவி மறுபடியும் ஆலிங்கனம் செய்து கொண்டான்.

''விதுரரே! பெரிய தந்தையை ரதத்தில் ஏற்றி அனுப்பிவிட்டு வாரும்'' என்று வாசுதேவன் கூற, விதுரன் பீஷ்மரை அணைத்துக் கொண்டே வாசற்புறம் ஏகினார்.

அடுத்து நடத்தப்பட வேண்டிய நாடகத்தை மனதில் ஒத்திகை பார்த்த கண்ணன் மந்தஹாஸம் புரிந்தான்.

□ □ □

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# காற்றின் கூற்று

குருக்ஷேத்திரத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தர்மயுத்தத்தின் பதிமூன்றாம் நாள். பின் மாலைப் பொழுது மறைந்து முன்னிரவின் இருள் பரவத் தொடங்கியது.

பாண்டவர்களின் பாசறையில் ஐந்து சோதரர்களும் சோகமே உருவாய் மனம் வாடிய நிலையில் அமர்ந்திருந்தனர்.

முன் தினத்தில்தான் அபிமன்யுவைப் பறி கொடுத்திருந்தார்கள். அர்ச்சுனனின் அருமந்தப் புதல்வன், சுபத்திரையின் ஒப்பற்ற செல்வன், உத்திரையின் உயிரானவன், கண்ணனின் ஆசை மருகன் அபிமன்யு வீரமரணமடைந்திருந்தான்.

ஆயுதமின்றி, தேர்ச் சக்கரத்தையே கவசமாக ஏந்தி நின்ற இளைய வீரனை மஹாவீரர்களென்று மார்தட்டிக் கொள்ளும் மாரதர்கள் சுற்றி வளைத்துக் கொண்டு, ஈவிரக்கமில்லாமல் தர்ம நியாயமற்ற முறையில் வீழ்த்தினார்கள். ஜயத்ரதன் அபிமன்யுவின் உயிரையே வாங்கிவிட்டான்.

போர் மரபுகளைப் புறக்கணித்து விட்டு க்ஷத்திரிய தர்மத்தை நிராகரித்து விட்டு, ஜயத்ரதன் அபிமன்யுவை அக்ரமமாய்க் கொன்றதைக் கேட்ட பார்த்தன் சூளுரைத்தான்.

''வஞ்சகமாகத் தன் வாரிசைக் கொன்ற ஜயத்ரதனை, மறுநாள் போரில் அஸ்தமனத்திற்குள், – அவன் தலையைக் கொய்து பழிவாங்குவேன்'' என்று வீரப் பிரதிக்ஞை செய்தான் வில் விஜயன்.

அப்படி, தான் செய்ய முடியாமல் தோல்வியுற்றால், அக்னி வளர்த்து, தன்னையே அர்ப்பணித்துக் கொள்வதாகவும் கூறிவிட்டான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பார்த்தன் போட்ட சபதம் வெற்றி அடைந்தது. மேற்கு வாயிலில் கதிரவன் மறைவதற்குள் ஜயத்ரதனின் தலையைக் கொய்து, அந்தத் தலையைத் தரையில் விழாமல் அஸ்தரத்திலேயே தூக்கிச் சென்று, ஜயத்ரதனின் தந்தையின் இரு கரங்களிலும் விழச் செய்தான் விஜயன். ஸந்த்யாவேளை அர்க்கியம் செய்து கொண்டிருந்த ஜயத்திரதனின் தந்தை திடுக்கிட்டு அறுபட்டுத் தன் கைகளில் வீழ்ந்த தன் மகனின் தலையைத் தரையில் போட, அவர் கபாலம் சுக்கல் சுக்கலாக வெடிக்க, உடன் உயிர் நீத்தார்.

பாசறையில், பல்குனன் அடைந்த வெற்றியைக் கொண்டாடாமல் ஏன் வருத்தமாக வீற்றிருக்கிறார்கள் பாண்டவர்கள்!

''கண்ணன் செய்த சூழ்ச்சி கபடத்தனமானது. என்னால் அதை ஜீரணிக்கத்தான் முடியவில்லை. முன் யோசனை இல்லாமல் என் தம்பி சூளுரைத்துச் சபதமிட்டான். அபிமன்யுவை இழந்த துயரம் தாங்க முடியாத ஒன்றுதான்... அதற்காக அறிவை இழப்பது அர்த்தமற்றது. அஸ்தமனத்திற்குள் ஜயத்ரதனைக் கண்டு பிடிக்க முடியாத அர்ச்சுனனின் சபதத்தைக் காப்பாற்ற கண்ணன் கபட நாடகமாடித் தன் உயிர்த் தோழனைக் காப்பாற்றியது அதர்மச் செயல். அர்ச்சுனன் வீரத்திற்கு அது ஓர் அவப்பெயர்...'' என்று தர்மமே உருவான யுதிட்டிரன் சொன்னான்.

''அண்ணா! அபிமன்யுவைக் கௌரவர்கள் அதர்மமாகத் தானே கொன்றார்கள். பழிக்குப்பழி. அதர்மத்திற்கு அதர்மம். இதில் என்ன தவறு?'' மல்லர்களுக்கு மல்லனான பீமன் கூற... மற்றவர்களும் அவன் வாதத்தை ஏற்க முனைந்தார்கள்.

''தம்பிகளா! நீங்கள் கூறுவது சரி அல்ல. ஒருவன் பொய் சொல்லி லாபமடைந்தால், அவனைப் போலவே நாமும் பொய்கூறி வாழ்வது அழகல்ல. கௌரவர்கள் அதர்மப் பாதையில் சென்று வெற்றி அடைந்து களிப்புறலாம். ஆனால்... ஆனால்... பாண்டுவின் மைந்தர்களாகிய நாமும் அதே வழியைத்தான் பின்பற்ற வேண்டுமாகில், அதைவிட நாம் தோல்வியைத் தழுவிக் கொண்டு மறுபடியும் கானகம் செல்வோம்...' தர்மனின் பேச்சில் கொஞ்சம் கடுமை தென்பட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



''அண்ணா! எதை நீங்கள் அதர்மம் என்று சொல்கிறீர்கள்?'' ஸஹாதேவன் கேட்டான்.

''ஆயுதம் எடுக்க மாட்டேனென்று கூறிய த்வாரகா நாதன், சக்கராயுதத்தை ஏவியது அதர்மமில்லையா? பரந்தாமனின் ஸத்ய வாக்குத் தவறி விடவில்லையா?'' என்று குந்தி புத்ரன் தர்மன் தன் தம்பியைக் கேட்டான்.

அப்பொழுது... தேவகிநந்தன் பாசறையினுள் நுழைந்தான்.

''பாரதப் போரில் பார்த்தனுக்குச் சாரதியாக இருப்பேனே தவிர மற்றபடி ஆயுதம் எடுக்கமாட்டேன் என்று நான் கூறிய மெய்யுரை பொய்யாக வில்லையே! என் மொழி பொய்யாமொழி. என்னிடமே உங்களுக்குச் சந்தேகமா? என்ன!...'' மந்தஹாஸத்துடன் மதுசூதனன் தர்மனைப் பார்த்துக் கேட்டார்.

''கண்ணா! உன் கபட நாடகமும் போதும்... உன் சாகஸ வாதமும் போதும்... சூரியனை மறைக்க சக்ராயுதத்தை விண்ணில் விடவில்லையா? சக்ராயுதம் ஆதவனை பூரணமாக மறைத்து அஸ்தமனத் தோற்றத்தை ஏற்படுத்தவில்லையா? அந்தப் பொய்த் தோற்றத்தைக் கண்டு ஜயத்ரதன், தன் ஒளிப்பிடத்திலிருந்து வெளியே வர... அவனை அர்ச்சுனன் கொல்ல... அச்சுதா! இது நீ புரிந்த கபடமில்லையா?... கேசவா! என் கேள்விக்கு என்ன பதில்?''

மயிற்தோகை அரைவட்டமாக விரிந்து அற்புதமாக நடனமாடும் கபால மயிலின் குதூகலத்தைப் பிரதிபலிப்பது போல் கண்ணன் கலகலவெனச் சிரித்தான். அவன் சிரிப்பினில் பல வண்ணங்கள் பளிச்சிட்டன.

''சிரித்து மழுப்பினால் செய்த சூழ்ச்சி மறைந்து விடுமா, கண்ணா?'' தர்மன்.

''இன்றைய மாலை நடந்ததை நினைவு படுத்திக் கொள்வதுடன், நேற்றைய அந்திமாலையில் நடந்தவற்றையும் நன்றாக யோசித்துப் பார், யுதிட்டிரா!''

கண்ணனின் திருவாய் மொழியில் வரப் போவதைக் கேட்க எல்லோரும் தயாரானார்கள்.

''குந்திபுத்ரா! நான் சொல்வதைக் கவனமாகக் கேள். நேற்றையப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


போரில் அபிமன்யுவை, கௌரவ கட்சி மாரதர்கள் ஒன்று கூடி மரணதேவனுக்குப் பலியாக்கி விட்டார்கள். அதை அறிந்த அர்ச்சுனன், புத்திர சோகத்தால் புத்தி பேதலித்து முன்பின் யோசிக்காமல் 'சபதம் செய்தான்... சபதத்தின் முன் பகுதி அவன் வீரத்திற்கு அழகுதான்... ஆனால் பின் பகுதி அவனுடைய மடத்தனத்திற்குச் சாட்சி...''

''புரியவில்லையே'' பீமன்.

''மகனைக் கொன்றவன் தலையைத் தரையில் வீழ்த்துவேன் என்ற சொல் வீரனுக்கு அழகு. அதை குறிப்பிட்டுள்ள காலகட்டத்திற்குள்... அதாவது மறுநாள் அஸ்தமனத்திற்குள் செய்வேன் என்பது அவசரப்பட்டுக் கூறிய சொல் எதிரியின் பலம் தெரியாமல் ஆவேசத்தில் சபதம் செய்தது மாவீரனின் அவிவேகத்தைக் காட்டுகிறது... சரி போகட்டும்... பின் அர்ச்சுனன் கூறியது ஒரு கோழையின் கையாலாகாத்தனம். ஜயத்ரதனை மாய்க்க முடியாமற் போனால் அக்னிப்ரவேசம் செய்து தற்கொலை புரிந்து கொள்வேன் என்ற சொல்... வில் விஜயனின் வீரத்திற்கு அப்பழுக்கு...

''ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்ற முதுமொழி எத்தனை சரியாகிவிட்டது!... மறுநாள் யுத்தத்தில் அர்ச்சுனன் ஜயத்ரதனை அழிக்காவிட்டால்... என் ஜீவாத்மாவாக இருக்கும் அவன் ஆத்மத் தியாகமல்லவா செய்து கொள்ள வேண்டும்!...

''அந்த வினாடியே, அன்றைய அர்த்த ராத்திரியே, சூழ்ச்சியில் வல்லவனான சகுனிக்கு ஓர் உண்மையைத் தெரியப்படுத்தினேன்.''

''அது என்ன எம்பிரானே?''

''எவன் ஜயத்ரதன் தலையைத் தரையில் விழச் செய்கிறானோ, அவனும் தன் தலை வெடித்து மரணமடைவான்.''

''யார் அந்தச் செய்தியை சகுனியிடம் போய்ச் சொன்னது?''... மாத்ரியின் மூத்த புதல்வன் மறுபடியும் கேட்டான்.

''அது அத்தனை முக்கியமல்ல... அதற்குப் பின் நடந்ததைக் கேளுங்கள்... செய்தியைக் கேட்ட சகுனி மகிழ்ந்தான். பாண்டவர்களின் அச்சாணி அர்ச்சுனனைக் கொல்ல இதுதான் சரியான தருணம். ஜயத்ரதன் துரியவனின் அத்யந்த தோழன்... அவனுடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



கவசம்... ஜயத்ரதனைப் பலிகொடுத்துப் பார்த்தனையும் அழித்து விட வேண்டும்... அற்புதமான வாய்ப்பு... மறுநாள் சூரியாஸ்தமனம் வரை எங்கேயோ அமைக்கப்பட்டுள்ள பாதாள அறையில் ஜயத்ரதனை மறைத்து வைக்க உத்திரவிட்டான் சகுனி... ஜயத்ரதனைக் காப்பாற்றி அர்ச்சுனின் அக்னிப் பிரவேசத்தை எதிர்பார்த்தான் காந்தாரி மைந்தன்.

''ஆனால்... வணங்காமுடியோனின் நண்பனையும் பலி கொடுத்து, விற்போரில் வல்லவனான விஜயனையும் அழிக்க யோசனை செய்தான் காந்தாரி சகோதரன். வழி ஏற்படும் என்ற நம்பிக்கை சகுனிக்கு... மாயக் கண்ணன் தன் ஆத்ம நண்பனைக் காப்பாற்ற ஏதாவது சூழ்ச்சி புரிவான். அதையே தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளக் காத்திருந்தான் சகுனி...

''மறுநாள் போர் தொடர்ந்தது... அதி பயங்கரமான யுத்தம்... தேர்களின் ஓட்டமும், குதிரைகளின் பாய்ச்சலும் யுத்த பூமியை உழுது கொண்டிருந்தன... நேரம் தன் கதியில் முன்னேற... அந்தி வேளை நெருங்கத் தொடங்கியது... இதோ, அடுத்த அரை ஜாமத்தில் பரிதியின் கிரணங்கள் மறைந்துவிடும்... பின்...''

சிறிது நேரம் தான் சொல்லிக் கொண்டிருப்பதை நிறுத்தி, யுதிட்டிரனைப் பார்த்தான் கண்ணன்.

''அர்ச்சுனனைக் காப்பாற்ற சக்ராயுதத்தைச் சுழற்றிச் சூழ்ச்சி புரிந்தாய்...'' தர்மனின் குற்றச் சாட்டு.

''அதுதான்... இல்லை... பஞ்ச பூதங்களில் ஒன்றான காற்றுதான் இயற்கையாகவே ஒரு காட்சியை உருவாக்கியது. சுழன்று சுழன்று வீசிய காற்று போர்க்களத்தின் புழுதியை எல்லாம் மேலே எழுப்பி வட்டச் சுழலில் சுற்றவைத்து மேற்றிசையில் மறையக் காத்திருந்த கதிரவனை மறைத்தது. சூரிய கிரணங்களை புழுதிப் படலம் மறைக்க, அந்தகாரம் சூழ்ந்தது... சந்தர்ப்ப வாதியான சகுனி மறைவிடத்திலிருந்த ஜயத்ரதனை விரைவில் வெளிக் கொணர்ந்தான்...

''அந்த வினாடி... பலமாக வீசிய காற்று, சக்ரம் போல் சூரியனை மறைத்து நின்ற புழுதி மண்டலத்தை, சிதறடிக்க ஒளிக்கிரணங்கள் மீண்டும் பிரகாசித்தன... அத்தருணத்தில் பார்த்தன் அஸ்திரத்தை விட,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


அது ஜயத்ரதனின் சிரசைக் கொய்தது...''

''ஆனால் அந்த அறுபட்ட தலை எப்படித் தரையில் விழாமல் விண்ணில் விரைந்தது?'' நகுலன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

''அதுதான் என் பங்கு. ஜயத்ரதனைப் பற்றி உண்மையின் முதற்பகுதியை சகுனிக்குத் தெரியப்படுத்தின நான் அர்ச்சுனனுக்கும் அதைக் கூறி, ஜயத்ரதனின் சிரசை அவனுடைய தந்தையின் கைகளில் விழுமாறு அஸ்திரத்தை ஏவச் சொன்னேன்... இதில் என் சூழ்ச்சி ஏதுமில்லை... பாவம் சகுனி... எவனோ எறியப் போகிற கல்லில் இரண்டு மாங்காய்கள் விழுமென்று நினைத்து ஏமாந்து போனான்...'' என்றான் மாயக் கண்ணன்.

பஞ்சபூதங்களின் அதிபதியான பரந்தாமன் இயற்கையின் செயலை வைத்து நடத்திய காட்சியைக் கேட்ட பஞ்ச பாண்டர்கள், மாதவன் பாதங்களை வணங்கினார்கள்.

□ □ □

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# தொண்டர்க்கடியான்

பாரதப் போர் முடிந்துவிட்டது.

பாண்டவர்கள் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்கள். ஆனால்...

பாண்டவர்களின் இளையவனான சகாதேவன் மட்டும் பூரண மகிழ்ச்சியுடனில்லை. இதை அவனுடைய சோதரர்களோ மற்றவர்களோ இனம் கண்டு கொள்ளவில்லை.

துடிதுடிப்புடன் இருக்கும் சகாதேவனுக்கு அடிமனதில் ஒரு சோகம் நிழலாடிக் கொண்டே இருந்தது. அடங்கிக் கிடந்த தன்னுடைய சோகம், தன் முகத்தில் பிரதிபலிக்காதவாறு அவன் சுற்றி வந்து கொண்டிருந்தான்.

ஒரு நாள்...

பொலிவாகத் தோன்றும் அவனுடைய பொய் முகத்தை வாசுதேவன் புரிந்து கொண்டான்.

சகாதேவனைத் தனியே அழைத்துக் கொண்டு, குருசேஷத்திர புண்ணியு பூமிக்கு வந்தான் கீதாச்சார்யன்.

''சகாதேவா!'' குழலூதும் கண்ணனின் குரலில் எத்தனை குழைவு!

''என்ன?'' சகாதேவன்.

''உன் மனதில் சஞ்சலமிருக்கிறது. அதன் சாயல் முகத்திலும் பாசிபோல், படர்ந்திருக்கிறது,'' கண்ணன்.

''கண்ணனின் கண்களுக்கு என் மனக்குழப்பம் புலனானது போல், அதன் காரணங்களும் புரிந்திருக்குமே!''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''புரிந்து கொள்வதற்கும், பிறர் அதைச் சொல்லிக் கேட்பதற்கும் வித்தியாசமில்லையா? புரிந்து கொள்வது என்பது ஒரு தலைப்பக்ஷம். கேட்டறிவதில் உண்மையும் புலப்படும்... உள்ளத்து வேட்கையும் வெளிப்படும். இதையெல்லாம் நான் சொல்லித்தான் உனக்குத் தெரிய வேண்டுமா?''

''கண்ணா! உன் மொழிகள் தான் என் பேச்சு. உன் பாடங்கள்தான் என் செயல்பாடு. நீ காட்டும் வழிதான் என் பாதை. உன் சிரிப்பு என் உயிர்த் துடிப்பு...''

''அப்படியானால் என் மனம் சஞ்சலமடையாதபோது உன் மனம் ஏன் சஞ்சலப்படுகிறது?''

''அது ஒன்றுதான் வாசுதேவனான உனக்கும் சகாதேவனான எனக்கும் அடிப்படையில் உண்டான வித்தியாசம்.''

''அது என்ன அடிப்படை?''

''நீயோ பரமாத்மா. நானோ ஒரு சாதாரண ஜீவாத்மா. நீயோ சஞ்சலமற்ற சர்வேச்வரன்... நானோ சஞ்சலத்தில் உழலும் மனிதன்.''

''சரி... உன் மனதை உறுத்திக் கொண்டிருக்கும் சஞ்சலம்தான் என்ன?''

''நீயே அதை மறந்துவிட்டாயா? அல்லது... மறந்து விட்டதுபோல் நாடகமாடுகிறாயா?... கபட வேடதாரி தானே நீ...''

''சகாதேவா! நான் மறந்துவிட்டேனா! மறப்பது, மறைப்பது எல்லாம் மானுடர்களின் குணாதிசயங்கள். நீயோ என்னை மானிடன் இல்லை என்கிறாய். அப்படியிருக்க அந்த குணங்கள் என்னிடம் ஏது?''

''கண்ணா! உன்னைத் திருடன், எத்தன், ஏமாற்றுக்காரன், பொய்யன், மாயாஜாலக்காரன் என்றெல்லாம் கோகுலத்தில் பேசுவார்களாம், ஏசுவார்களாம்...''

''அதெல்லாம் பழைய கதை. சிறு பிராயத்து விளையாட்டுக்கள்.''

''தொட்டிற் பழக்கம்...''

''சகாதேவா! நானோ உன் நண்பன். எதை நான் மறந்துவிட்டேன்

In Public.domain. Digitization Muthulakshmi Research Academy


என்று ஒரு துப்புக்கூட கொடுக்கக்கூடாதா?''

''விவரம் வேண்டியவன் நான்தானே... சொல்லிவிடுகிறேன்...''

''தாமதிக்காதே! உடனே கூறிவிடு''

''...நான் யார்?... என் அடி மனதில் புதைந்து கிடக்கும் ஆசை என்ன? என்று ஒரு நாள் உன்னைக் கேட்டதற்கு...''

''ஓ!... அதைச் சொல்கிறாயா!... அதற்குத்தான் நான் பதிலளித்துவிட்டேனே...''

''இல்லை, கண்ணா! நான் யார் என்று சொல்லி விடுவதாகச் சொன்னாயே தவிர, அதை இன்றுவரை சொல்லவில்லை...''

''உன் அடி மனதின் ஆசை விஸ்வரூப தரிசனத்திற்குப் பின், அடங்கிப் போயிருக்குமே!''

''மாறாக அதிகப் பரிமாணத்தில் வளர்ந்துவிட்டது. அந்த வளர்ச்சி வேகத்தில் நானே வெடித்துவிடுவேனோ...''

''என்ற பயம் தேவையற்றது... சத்ருக்கனா!. நான் இருக்க பயமேன்?''

''க..ண்..ணா! எ..ன்..ன சொல்கிறாய்?... சத்ருக்கனனா... அவன் யார்? நான் சகாதேவன்...''

''இன்று நீ சகாதேவன்... அன்று நீ சத்ருக்கனன். இன்று நீ என் தோழன். அன்று நீ என் தம்பி... இன்று நீ என் பக்தன்... அன்று என் தொண்டனுக்கு தொண்டன்...''

சகாதேவனின் எண்ணம், கண்ணனை விட்டுத் காகுத்தனிடம் சென்றுவிட்டது...

...அண்ணல் ஸ்ரீராமனைக் கண்குளிரப் பார்க்காமலேயே காலம் கடத்திவிட்ட சத்ருக்கனன் ஒரு நாள் வருத்தத்துடன் சரயூ நதிக்கரையில் அமர்ந்திருந்தான்.

அவன் முன் ரகுநந்தன் வந்து நின்றான். ஆஜானுபாகுவாக நிற்கும் அயோத்தி மன்னனை நிமிர்ந்து பார்க்காமல், அவன் தாள்களில் தலை வணங்கினான், சத்ருக்கனன்.

தாள்களில் அணிந்திருந்த பாதுகை, சத்ருக்கனனின் சிரசில்பட்டது.

 Public domain. Digitization Muthulakshmi Research Academy 

நிமிர்ந்தான்... நோக்கினான்...

அங்கே ராமனைக் காணவில்லை... தான் பூஜிக்கும் பரதனையே கண்டான். அதிலும் முழுமையாக இல்லை. பரதாழ்வாரின் ஆயிரத்தில் ஒரு பாகமாகவே கோசல ராமனைக் கண்டான்... 'ஆயிரம் ராமன் பரதனுக்கு ஈடாகுமா' என்ற கௌஸல்யா தேவியின் புகழ்ச்சி, சத்ருக்கனனின் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்ததால்... அவன் மனம் ஸ்ரீராமனை ஏற்றுக்கொள்ளவில்லை.

''தம்பி சத்ருக்கனா! பரதன் என் தொண்டன்... நீயோ தொண்டருக்கு அடியவனாகி விட்டவன்... அதனால் நீ என்னைப் பரிபூரணமாகக் காண முடியாமல் தத்தளிக்கிறாய்... அடுத்த யுகத்தில் என் தோழனாய், பக்தனாய், என் மன சாட்சியாய் பிறப்பாய்... அப்பொழுது, நான் உன் மனதிலுண்டான ஆசையை நிறைவேற்றி வைக்கிறேன். தவித்துக் கொண்டிருக்கும் உன் மனம் அமைதி அடையும்'' என்று ராமன் வாக்களித்தான்.

மாத்ரி மைந்தனின் மனத்திரையிலிருந்து ரகுநந்தன் மறைய மந்தகாசப் புன்னகையுடன் யது நந்தன் நிற்பதைக் கண்டான்.

பரந்தாமனின் பாதாரவிந்தங்களில் சரணடைந்தான் சகாதேவன். சரண் அடைந்தவனின் சிரசில் கோதண்டத்தின் அடிப்பாகம் பொறி தட்டியது.

நிமிர்ந்தான்...

கண்ணபிரானுக்குப் பதிலாக ராமபிரான் காட்சியளித்தார்.

உடன் பிறந்த அண்ணனை கண்குளிரப் பார்த்திராத சத்ருக்கனனின் ஏக்கம், சகாதேவனின் சஞ்சலமாகி...

இன்று மறைந்து போயிற்று.

கோகுலபாலனின் உருவத்தில் கோசலை மைந்தனைத் தரிசித்த தர்மனின் தம்பி, கண்ணனை ஆவிசேரக் கட்டிக்கொண்டான்.

தொண்டர்க்கடியான் ஆண்டவனுடன் ஐக்கியமானான்.

□ □ □

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# ஒரு காதல் காவியமாகிறது

கோகுலத்தின் ஜீவநாடி - ஜீவநதி - யமுனை. அதன் கரையில் ஒரு பூங்காவனம்.

யசோதையின் செல்லப்பிள்ளை, நந்தகோபனின் அருமைக்குமாரன், நந்தலாலா நடந்து, நடனமாடி, நின்று, இருந்து, ஓடி, ஆடி விளையாடும் பிருந்தாவனம் அது.

மரங்களில் கனிகள்... செடிகளில் பூக்கள்... கொடிகளில் தேன் சிந்தும் மலர்கள் கூடிய பூஞ்சோலை. அதில் இரண்டு அழகிய தடாகங்கள்... தாமரை மலரவும், அல்லி மலரவும் அமைக்கப்பட்ட நீர் நிலைகள்... அவ்விரு குளங்களின் இடையே மலரிதழ்கள் தூவிய பாதை...

ஒரு நாள்...

மாலைப் பொழுதினிலே, மங்கையொருத்தி அந்த பூக்கள் படர்ந்த பாதையிலே அன்னம் நடந்து வந்தது போல், நடந்து வந்து அல்லிக் குளத்தருகில் அமைந்திருந்த பளிங்கு மேடையில் அமர்ந்தாள்.

அச்சமயம் வானம் பொன்னால் தன்னை சூடிக்கொண்டிருந்தது... மேற்கு வானத்தில் ஆதவன் மறைந்து கொண்டிருந்தான்... கீழ்த்திசையில், முழுமதி வெளிப்பட்டாள்... அவள், வெள்ளியாய் பிரகாசித்து, பொன்னுடன் கலந்து கொண்டிருந்தாள்...

மெல்ல தென்றல் தவழ்ந்தது... கொல்லெனப் பூத்த மலர்களின் மணம் எங்கும் பரவியது...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அழகை உருக்கிப் படைத்த ஆரணங்காய் அமர்ந்திருந்த அவள் கன்னத்தை முத்தமிட்டுச் சென்றது பூங்காற்று.

சிலிர்த்துக் கொண்டாள்...

தடாகத்தின் மேலே நீண்டிருந்த புன்னை மரக்கிளையில் வீற்றிருந்த ஆண்மயில் ஜிவ்வெனத் தாவி தரையில் குதித்து, தன் தோகையை விரித்து அவள் முன் நடனமாடியது...

கிளையிலிருந்து மயில் குதித்த போது மரக்கிளையிலிருந்து சில இலைகள் உதிர்ந்து நீரில் விழுந்து தடாகத்தில் சிறு அலைகளை எழுப்பின...

பளிங்கு மேடையிலமர்ந்து கொண்டு மயிலின் அசைவையும், தடாகத்தின் அலைகளையும் மாறிமாறி பார்த்துக் கொண்டிருந்த பாவை தன் இமைகளை மிருதுவாக மூடிக்கொண்டாள்.

இமைப் பொழுதும் நெஞ்சை விட்டு நீங்காத நீலவண்ணச் சிறுவன் அவள் அகத்தில் தோன்றினான்... பழைய நினைவு...

மனதில் மயிலைப் போல் அசைந்தது...

அவள் சிறுமியாக இருந்த காலம், கண்ணனுடன் ஓடிப் பிடித்து ஆடி விளையாடிய காலம்...

வெண்ணெயில் தன் மனதைப் பறிகொடுத்திருந்த யதுகுலச் சிறுவனான கண்ணன் அவளிடம்,

''சகியே! இன்று மாலை கிண்ணம் நிறைந்து வழிய, வெண்ணெய் கொண்டுவா... நாமிருவரும் உண்டு மகிழலாம்'' என்றான்.

அவளும் வெண்ணெய்த் தாழியுடன் புன்னை மரத்தடியில் காத்திருந்தாள்.

கண்ணன் வந்தான்...

''கண்ணா!''

''ப்ரியே! வெண்ணெய் எடுத்து வந்தாயா?''

''இதோ! கிண்ணம் முழுவதுமே கண்ணனுக்காகவே வெண்ணெய் காத்திருக்கிறது...''

புன்னை மரத்தடியில் அவளை அமரவைத்து, அவள் மடியில்

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy 

தலைவைத்து நிமிர்ந்து சயனித்துக் கொண்டான், தீராத விளையாட்டுப் பிள்ளை... அவள் மதி முகத்தை நிமிர்ந்து நோக்கி, அச்சிறுமியின் கருவிழிகளுடன் தன் பார்வையைக் கலந்தான்... அவள் மெய்மலர்ந்தாள்... அவள் உடலில் புல்லரிப்பு... உலகை மறந்தாள்...

கண்ணனின் கண்ணொளியுடன் அவள் மடியில் படுத்திருந்த மதிமுகத்தையே இமைகள் கொட்டாமல் நோக்கினாள்... மனதை மயக்கும் மதிவதனன், மதுசூதனன் அவள் மனதில் ஓவியமாகி விட்டான்...

''சகியே! எனக்குப் பசிக்கிறது... கையில் வெண்ணெய் வைத்துக் கொண்டிருந்தால் என் பசி அடங்கிவிடுமா? என்ன?'' அன்புக் குரலில் அந்தப் பேதைப் பெண்ணை நினைவிற்கு இழுத்தான்...

முகுந்தனின் முகலாவண்யத்திலிருந்து பார்வையை அகற்றாமல்...

''தாழியிலுண்டு வெண்ணெய்... தாராளமாய் எடுத்துக் கொள்ளேன்... திருடித் தின்பவனுக்கு உபசாரம் எதற்காம்?'' என்று கூறினாள்.

''அதெப்படி! உன் கையால் சின்னச் சின்ன உருண்டைகளாய், நீ என் வாயில் ஊட்ட வேண்டுமென்றுதானே உன்னை இங்கே வரச் சொன்னேன்'' என்றான் சௌந்தர்ய ஸ்வரூபன்.

அவளும் கண்ணனின் திருவாயில் வெண்ணெயை உருட்டி உருட்டி ஊட்டினாள். அவள் அமுதூட்ட ஆராவமுதன் உண்டு மகிழ்ந்தான்.

''மீதமிருப்பதை ஒரு பெரிய உருண்டையாக உருட்டிக் கொடுத்துவிடு'' என்றான் குறும்புக்காரச் சிறுவன்.

பெரிய நெல்லிக்கனியளவு திரட்டி உருட்டிய வெண்ணெயை ஊட்டி விட வந்த பொழுது, சட்டென வாயை மூடிக் கொண்டான்.

அவளுடைய விரல்களிடையே இருந்த வெண்ணெய் கண்ணனின் உதடுகளிலும் கன்னங்களிலும் ஒட்டிக் கொண்டது.

''முகத்தில் பூசிவிட்ட வெண்ணெயைத் துடைத்து விடு'' என்று கூறினான் கண்ணன்.

''துடைப்பதற்கு வஸ்திரமேதுமில்லையே'' என வருத்தமாகப் பதிலளித்தாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''வஸ்திரமில்லாவிட்டால் என்ன? உன் வாய்தானிருக்கின்றதே! என் உதட்டிலும் கன்னத்திலும், ஒட்டிக் கொண்டிருப்பதை நாவினால் முழுங்கி மென்று விடு...''

கண்ணனின் கட்டளையை அவள் நிறைவேற்றினாள்.

கண்ணனின் உதடுகளிலிருந்து அவளுண்டது வெண்ணெயாக இல்லாமல் நெய்யாக இருந்தது. நெய்யை உண்டாள்.

வெண்ணெய் நெய்யாக எப்படி மாறியது?

'அன்பு' என்ற வெண்ணெய் கண்ணனின் கருணையென்ற வெப்பத்தில் 'நெய்' யென்ற பக்தியாய் மாறியது. அவள் நெய்யையுண்ட பின் மெய்ஞானம் பெற்றாள்.

பழைய நினைவிலிருந்து மீண்டாள் மடந்தை... தன் உதடுகளை நாவினால் வருடிக் கொண்டாள்.

காற்றினிலே மோகனம் மிதந்து வந்தது. கண்ணன் வந்தான்.

''ப்ரியே! என்னைக் காணாமல் வாடிவிட்டதோ உன் வதனம்...''

''இல்லையே! உன்னைக் காணாமல், உன்னை நினைக்காமல் என்னால் எப்படி இருக்க முடியும்? என் அகத்தில் உன் ஜகன்மோகன ரூபம்தானே இருக்கின்றது... என் நாவில் உன் திரு நாமங்கள்தானே உச்சரிக்கப்படுகின்றன.''

''ஓ... அப்படியா!''

''சொல்லச் சொல்ல தித்திக்கும் உன் திருநாமம். நினைக்க நினைக்க இனிக்கும் உன் மோஹன பிம்பம்... என்னை விட்டு அகலாதபோது எனக்கு விரகமேது... விரகமில்லாதபோது வதனம் வாடுவதேது... என்னைச் சோதிக்க எதையாவது கூறி வம்புக்கு இழுக்காதே...''

''ப்ரியே! உனக்கு ராதா எனப் பெயர் சூடி அழைக்க விரும்புகிறேன்...''

''கோவிந்தனின் விருப்பம் கோபியின் பாக்கியம்...''

''ராதா!''

**''கண்ணா!''**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


''ராதா! உனக்கு ஏன் இப்படி ஒரு பெயர் வைத்தேன் தெரியுமா?''

''கண்ணா! உன்னையே என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை... உன் எண்ணத்தையா என்னாலறிய முடியும்... நீயே சொல்...''

மந்தஹாசத்துடன் மாதவன் கூறலானான்.

''ராதா! உன் ஆத்மார்த்த அன்பனான கண்ணனுக்கு எது மிகவும் பிடிக்கும்.''

''வெண்ணெய்''

''அப்புறம்...''

''நாவற் பழம்''

''அதெல்லாம் சிறு பிராயத்தில்... இப்பொழுது என் கவனத்தைக் கவர்வது எது?''

''வேய்ங்குழல்''

''மிகவும் சரியாகக் கூறினாய்!''

''அதெற்கென்ன?''

''வேய்குழலில் ஜனிப்பது.''

''கீதம்.. உள்ளத்தை உருக வைக்கும் இசை.''

''கீதத்திற்கு ராகம், தாளம் இரண்டும் இன்றியமையாத முக்கியத்தேவை. அதுதான் நீ''

''எப்படி?''

''ராதா என்ற உன் பெயரின் முதல் எழுத்து ராகத்தின் முதல் எழுத்து... தா என்ற இரண்டாமெழுத்து தாளம் என்பதின் முதலெழுத்தாகும்; ராகமும் தாளமும் கலப்பதுதான் கீதம்... ராதா என்ற நீ என் மனதிற்கிசைந்த கீதம்.''

''தன்யனானேன்.''

''ராதா!''

''கண்ணா!'' என்று கூறிய ராதா சுற்றுமுற்றும் பார்த்தாள். கண்ணனைக் காணவில்லை... மாயமாய் மறைந்து விட்டானே மாயக்கண்ணன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


சட்டெனப் பின்னலைப் பின்னின்று யாரோ இழுக்கின்றானே என்று திரும்பிப் பார்க்காமலே, ''நான் திரும்பிப் பார்க்கப் போவதில்லை... என் முன் வர மனமிருந்தால், வா... திரும்பினால் மறுபடியும் மறைந்துவிடுவாய்...'' என்றாள். அவள் குரலில் கோபத்தின் சாயை இருந்ததே தவிர கோபம் இல்லை.

கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

''ராதா! கண்ணைத் திறந்துதான் பாரேன்'' என்று தேவகி மைந்தன் கூற, ராதா கைகளைத் துழாவி அவனைச் சிக்கெனப் பிடித்தாள்.

கண்களைத் திறந்தாள்.

''ராதா! உனக்குத் திருமணம் நடத்த ஏற்பாடுகள் நடக்கின்றதாகக் கேள்வியுற்றேனே... நிஜமா...?''

''யார் கூறினார்கள்?''

''உன் பெற்றோர்கள்.''

''அவர்கள் விரும்புகிறார்கள்... யாரோ குவளைக்குமரன் என்ற யாதவ வாலிபனுக்கு என்னைத் திருமணம் செய்து கொடுத்துவிட வேண்டுமென துடிக்கின்றார்கள் என்னைப் பெற்றவர்கள்.''

''அது இயற்கைதானே... நீ என்ன சொன்னாய்?''

''அதை அவர்கள் கூறாமல் விட்டுவிட்டார்களா?''

''அவர்கள் வேறு எதுவும் கூறவில்லை'' என்றான் வாசுதேவன்.

அவன் உதடுகளைச் சுழற்றிக் கொண்டே கூறியதில் அவனுடைய கள்ளத்தனம் தெரிந்துவிட்டது.

''களவுக் கழகு செய்யும் கள்வா! கள்ளழகா! கண்ணபிரானே! என் வாய் மொழியால் கேட்க வேண்டும். அவ்வளவுதானே!''

''புரிந்து கொண்டால் சரி!'' புன்னகைத்தான் புண்டரீகாட்சன்.

''நான் யார்?'' என்றாள் ராதா.

''நீ ஒரு பருவப் பெண். மணம் செய்து வைக்கப்பட வேண்டிய பருவ மங்கை... காதலனொருவனைக் கைப்பற்ற வேண்டி காத்து நிற்கும் காரிகை...''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


''கண்ணா! போதும் உன் திருவிளையாட்டு... நான் ஸ்திரீ என்கின்ற ஜீவன்... ஜீவன் புருஷனை நாடிப் போய் அவனைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும்... குவளைக் குமரன் என்ற யாதவன் என்னைப் போன்ற ஜீவாத்மா... அவனும் ஸ்திரீதான்.. ஸ்திரீ எப்படி மற்றொரு ஸ்திரீயை மணக்க இயலும்... ஸ்திரீயாகப்பட்ட ஜீவன் புருஷோத்தமனாகிய பரமாத்மாவைத்தான் மணந்து கொண்டு மணம் பெறவேண்டும்...''

''உன் தாய், உன் தந்தையை மணந்து வாழவில்லையா?''

''அது மாயை, புருஷோத்தமனை இனமறியாத வரை இந்த மாயையின் சுழற்சியில் அநேக நாடகங்கள் நடக்கும்.''

''அப்படியா!... சரி... நீ மாயையை அகற்றி அந்தப் புருஷோத்தமனை இனம் கண்டுவிட்டாயா?''

''கண்டுவிட்டேன் புருஷோத்தமனை?''

''எப்பொழுது...?''

''இளம் பிராயத்திலேயே எனக்கு மெய்ஞானத்தை அளித்த மெய்யப்பா! ஒப்புயர்வு இல்லாத ஒப்பிலியப்பா! உலகளந்த உத்தமா! புருஷோத்தமா! நீதானே என் பாசத்தை முதிர்ச்சியடையச் செய்து அன்பாக்கினாய். உன்பால் கொண்ட அன்பைக் கனியாக்கி அன்று பக்தியாக மாற்றினாய்... பாற்கடலில் பள்ளி கொண்ட பரந்தாமா... காதலாகிக் கண்ணீர் மல்கி நின்ற என்னை உன் பக்தையாக மாற்றிய மாதவா!...

''உன் கருணையால் என்னை உன் ஒலியாக்கிக் கொண்டாய்... நாராயணா! நீ ஒருவன்தானே புருஷன்! ஜீவாத்மாக்களாகிய மானிட ஜன்மத்தின் உன்னத லட்சியமே உன்னுடன் ஒன்றிணைந்து ஐக்கியமாவதுதானே...''

''ராதா! நீ பக்தியின் உச்ச நிலைக்கு வந்துவிட்டாய். கரங்களை நீட்ட அந்தர்யாமியைப் பற்றிக் கொள்...''

தொலை தூரத்திலிருந்து வரும் அசரீரிபோல் ராதையின் காதுகளில் ஒலித்தது.

முன்னேற அடி ஒன்றினை எடுத்து வைத்தாள். நாராயண ஸ்வரூபமான கிருஷ்ணன் நாலடிகள் நகர்ந்து ராதாவின் முன் வந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



நின்றான்.

கோபாலனின் தோள்களை இறுகக் கட்டிக் கொண்ட ராதா, கோவிந்தனாகிய ஆதிமூலத்தை ஆலிங்கனம் செய்தாள்.

அப்படியே அச்சுதனின் உடலிலிருந்து நழுவி... நழுவி...

கண்ணனின், துயரறு சுடரடிகளில் சரணடைந்தாள் ராதா.

தனியே துவைதமாக விலகி நின்றிருந்த ஜீவாத்மா சர்வேஸ்வரனிடம் பரமேஸ்வரனிடம், பரம புருஷனிடம், பரந்தாமனிடம் சரணடைந்தது.

சரணாகதியடைந்து விட்டபின் ... ராதா என்ற ஜீவன் சரணாகதி தத்துவத்தின் உன்னத நிலையை அடைந்துவிட்டபின்...

சக்ரதாரி, சதுர்புஜனாய் தோற்றமளித்தான்... சசிவர்ணம் நீலமேக வண்ணத்துடன் கலக்க...

கண்ணன் ராதாவைத் தன்னிரு கரங்களில் தூக்கி நிறுத்தினான்.

சரணாகதி எனத் தஞ்சமடைந்த ஜீவனை, பகவான் குனிந்து தன் கரங்களால் தூக்கி தன்னுடன் இணைத்துக் கொள்கிறான். இரண்டாய் பிரிந்த ஜீவன் மறுபடியும் ஒன்றாகின்ற ஜீவமுக்தி நிலைதான் அத்வைதம்.

அத்வைத ஸ்வரூபனிடம் கலந்து விடுவதே பேரின்பத்தின் உன்னத நிலை... பேரருளாளனான பரம் பொருளின் காருண்யமே மோட்சம்.

ராதாவைக் குனிந்து தூக்கித் தன் உடலுடன் அணைத்துக் கொண்டே, துவண்டு தொங்கிக் கொண்டிருந்த அவள் கைகளைத் தோள்களின் மேல் போட்டுக் கொண்டு அணைத்தவாறே, ராதாவின் முதுகுத் தண்டைத் தடவியவாறே...

கண்ணன் ஒரு விநாடி காட்சியளித்தான்...

மறு வினாடி...

ராதா என்ற உடலுக்குள்ளிருந்த ஜீவன் திருநாராயணனுடன் கலந்துவிட்டது. ராதா என்ற பூத உடல் மலர் மாலையாக மாறி...

என்றென்றும் கண்ணனின் தோள்களில் தொங்கியவாறே, அவன் மார்பில் புரண்டு அவன் மேனிக்கு, அவன் தோற்றத்திற்கு மேலும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


அழகூட்டிக் கொண்டிருக்கின்றது.

இடுப்பிலிருந்து குழலை எடுத்தான் கண்ணன்... இல்லை... ராதா கிருஷ்ணன்... உதட்டில் வைத்து இசைத்தான்...

''விஷ்ணுப்ரியா'' ராக ஸ்வரங்கள் குழலிசையாக விண்ணிலும் மண்ணிலும் வியாபித்தன. மனம் மகிழ்ந்து, மந்தகாசம் புரிந்து கொண்டே மதுராபுரி நோக்கிப் புறப்பட்டான் ராதாகிருஷ்ணன்.

□ □ □

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# கர்ணனும் விகர்ணனும்

தாமரைத் தடாகத்தின் நீர், தன் வெப்பத்தைக் குறைத்திடும் என்று வெகு நேரம் நீராடிவிட்டு, வெளியே வந்தான் வில்லிசைக் கர்ணன்.

சிரிப்பொலி கேட்டது...

திடுக்கிட்டுத் திசைகள் எட்டினையும் வட்டமிட்டுப் பார்த்தான்... யாருமில்லை... பின்யார் சிரிப்பது?

குழம்பிய நீர்த்தடாகம் தெளிவுற்றது. ஆனால் மனத்தடாகம்...

பாண்டுவின் பத்தினி குந்தி தேவி வந்து வரம் வாங்கிப் போனாள். இல்லை. சலனத்தை ஏற்படுத்தி விட்டாள். மாயாவிக் கண்ணன் அவன் பங்குக்கு கர்ணனின் மனதை கடலலைகளாக்கி விட்டுச் சென்றான்.

அன்னையை அடையாளம் கண்டதில், தான் சூரியனின் புத்திரன் என்று அறிந்ததில் பெருமிதம், கர்ணனுக்கு மகிழ்ச்சியை அளித்தாலும் உண்மையில் மனதில் ஓர் உறுத்தல்... ஒரு நெருடல்...

நந்தவனத்திலுள்ள ஊஞ்சல் மஞ்சலத்தில் சயனித்து ஆகாயத்தையே கண்ணுற்ற கர்ணன், காலடியோசை கேட்டு மிகவும் அதிர்ந்தான்.

மறுபடியும் அன்னை குந்தி தேவிதான் வந்துவிட்டாளோ அல்லது கம்சனை வதம் புரிந்த கண்ணன்தான் வந்துவிட்டானோ என மருண்டான்.

எதிரே விகர்ணன் சிரித்த முகத்துடன் சிரம் தாழ்த்தி வணங்கினான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


மருண்டவன் கண்ணுக்கு சிறியவன் விகர்ணன், விச்வரூபமெடுத்தவனாய்த் தோற்றமளித்தான். மருண்ட பார்வையை மாற்றி மனபாரத்தை அழுத்தி மறைத்து விகர்ணனைக் கண்ணுற்றான் கர்ணன்.

''அங்க நாட்டு வேந்தனுக்கு என் வருகை அதிசயமா இல்லை அதிர்ச்சியா?'' என்று கௌரவ சகோதரர்கள் நூறில், ஒரு தனிப்பட்டவனான விகர்ணன் கேலியாகக் கேட்டான்.

''அதிர்ச்சியா! அதுவும்.. எனக்கா!... சிறியவனே! நீ இதைக் கேட்டதுதான் அதிசயம்... சரி எதற்காக என்னைத் தேடி வந்தாய்? உனக்கும் ஏதாவது தானம் வேண்டுமா?'' என்று கர்ணன் கூறியதில் ஒரு பதட்டம் ஒளிந்திருப்பதைக் கண்டான் விகர்ணன்.

''ஏன் இன்று யாரும் தங்களிடம் யாசிக்க இதுவரை வரவில்லையோ?''

''வந்தார்கள். வந்தார்கள்... ஆனால் எதையும் யாசிக்கவில்லை.''

''அப்படி யார்தான் வந்தார்கள்?''

''பாண்டவர்களுக்காக தூது வந்தானே கண்ணன், அவன்தான் சற்று முன் வந்து விட்டுப் போனான்.''

''ஓஹோ! அரச சபையில் அதல பாதாள அளவுக்கு வியாபித்து விஸ்வரூபமெடுத்த கண்ணபிரானா வந்திருந்தார்! அங்க நாட்டு வேந்தர் அதிர்ஷ்டம் செய்தவர்தான்.''

கர்ணன் பலமாகச் சிரித்தான்.

''அதிர்ஷ்டசாலி நானல்ல... அவன்தான். கேட்ட எதையும் கொடுக்கும் கொடை வள்ளலான என்னை காண வருபவர்கள் யாவருமே அதிர்ஷ்டசாலிகள்...''

''அண்ணன் துரியோதனன் அளித்த அரச பதவியை, வணங்கி வாங்கிக் கொண்டவருக்கு அகந்தை அதிகமாகிறதைக் கண்டு என் மனம் வருந்துகிறது.''

''சின்னஞ்சிறியவனே! என்ன வார்த்தை பேசிவிட்டாய்?'' கோபத்தில் சீறினான் கொடைவள்ளல்.

''சந்திரகுலத் தோன்றலான நான், பீஷ்மரின் பௌத்திரனான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


நான், ஹஸ்தினாபுரத்து சக்கரவத்தியின் மகனான நான், வயதில் சிறியவனாக இருக்கலாம்... ஆனால் நீதியிலும், நேர்மையிலும் உங்களைவிட உயர்ந்தவன். மரியாதை கொடுத்து மரியாதை வாங்க வேண்டும் என்ற மிகச் சாதாரணப் பண்பு கூடத் தெரியாமல், மனம் குழம்பியிருப்பதால், வார்த்தைகள் கட்டுமீறி கடிவாளத்திற்கு அடங்காத முரட்டுக் குதிரை போல் துள்ளுகின்றன.''

அடங்காத சினம் கர்ணனை மேலும் தடம் புரள வைத்தது.

''என்னடா புலம்புகிறாய்?''கனல் தெறித்தது.

சினம் கொண்டவனைப் பார்த்து, என்றும் தெளிவுற்ற மனம் கொண்ட விகர்ணன் பரிவாகச் சொன்னான்...

''தேரோட்டி மகனுக்கு குதிரைகளை அடக்கத் தெரியாதது விந்தை.''

''என்ன சொன்னாய்?... தேரோட்டி மகனா... ஆம்... நான் உங்கள் கண்களில் தேரோட்டி மகன்தான். வரப்போகின்ற பாரதப் போரில் உன் அண்ணனையும் அஸ்தினாபுரத்தையும் காக்கும் மாவீரனாகத் திகழப் போகிறான்... வெற்றியைத் தேடித் தரப்போகும் நான்...''

முதலில் கேட்ட அதே சிரிப்பொலி மறுபடியும் கேட்டது... சினம் அடங்கிய அங்க மன்னன் பரிதாபமாக விகர்ணனைப் பார்த்தான்.

''மனசாட்சியை மறைத்து விட்டாய் கர்ணா! அதுதான் இந்த விகர்ணன் உனக்கும் உன் கூட்டாளிகளுக்கும் மிகச் சிறியவனாகிப் போனான்.''

''நீ சுவேதனனின் இளவல் விகர்ணனில்லையா!''

''உன் மனசாட்சியின் பிரதி பலிப்பும் நான்தான், சுவேதனனின் மனசாட்சியும் நான்தான். கர்ணனுக்கு... ஒரு... வி...க.. ர்.. ண..ன்.. சிரித்தவனும் நான்தான்...''

''இப்பொழுது இங்கே ஏன் வந்தாய்?''

''கொடை வள்ளலிடம் நீதியையும் நியாயத்தையும் யாசிக்கலாமென்றுதான் வந்தேன்.''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''எது நீதி?... எது நியாயம்?''

''ஆ..மாம்.. தப்புதான்... இருப்பதைத்தானே தானமாக வழங்கமுடியும். கர்ணனிடம் இல்லாதவைகளை நான் கேட்டது தவறுதான்...'' விகர்ணனின் எகத்தாளமான சிரிப்பு.

''நீதியும் நியாயமும் என்னிடம் ஏன் இல்லை? எப்படிச் சொல்கிறாய்?''

''பதிமூன்று வருஷங்களுக்கு முன், கௌரவ அரசவையில் ஒரு பெண்ணை ஆயிரக்கணக்கான ஆண்களின் நடுவே அலங்கோலப் படுத்தினீர்களே... அது என்ன நியாயம்? அவள் அன்று கேட்டாளே நீதி. நீங்கள் வாரி வழங்கியது எது?... நீதியா... அநீதியா?''

''அவள் சூதில் பணயமாக வைக்கப்பட்டுத் தோற்றுப் போன பொருள். அவள் உன் அண்ணனுக்கு அடிமையாகிவிட்டவள்.''

''அரசியைப் பணயமாக்கக் கூடாது என்று நம் முன்னோர் மனு எழுதிய அரசியல் நூல் சொல்கிறது.''

''எங்களுக்குத் தெரியாது.''

''தெரியாததைத் தெள்ளத், தெளிவாக அமைச்சர் விதுரர் எடுத்துரைத்தார். அவர் சொல்லுக்குச் செவி சாய்க்காமல் அகங்காரமாக அவரையே அவமானப்படுத்தினாய் கர்ணா!''

''அந்த மஹா சபையிலே, உன் பாட்டனார் பீஷ்மர், உங்கள் குலகுரு கிருபர், அஸ்திரசாஸ்திர விற்பன்னர் துரோணர், ஆதவனை மிஞ்சும் அளவிற்கு அறிவு படைத்த அஸ்வத்தாமா ஆகிய சான்றோர்கள் இருக்கையில் பேரமைச்சர் என்ற பதவி அதிகாரத்தில், தான் ஒரு தாதிப் பெண்ணின் மகன்தான் என்பதை மறந்து, தகுதியற்ற விதுரன் பேசினதை நான் தட்டிக் கேட்டதில் என்ன தவறு?''

''விதுரர் எங்கள் சிறிய தந்தை. சக்கரவர்த்தியின் சகோதரர்... வ்யாஸ பகவானின் மகன்... பிதாமகரும், கிருபரும், துரோணாச்சாரியாரும், பேரன்புடன் மதிக்கும் மந்திரி. ஹஸ்தினாபுரத்தின் பிரதான அமைச்சர். அவரைத் தாதிப் பெண்ணின் மகனென்று இழிவாய்க் கூறியது தண்டிக்கப்பட வேண்டியது...''

''என் நண்பன் துரியோதனன், அவன் செய்கையை எதிர்த்ததை என் மனம் ஒப்பவில்லை...''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


''அது போகட்டும்... துரியோதனன் உங்கள் நண்பன். உங்களிடையே பெருமை மிக்க தோழமை... நண்பன் தவறு இழைக்கும்போது அவனை திருத்துவதுதான் நட்பின் இலக்கணம். அதை விட்டு விட்டு, அதர்மமாக ஓர் அபலைப் பெண்ணை சான்றோர் சபையில் முடியை இழுத்து, வஸ்திர அபர்ணம் செய்ய உத்தரவிட்டது ஏன்?... அந்த அநீதியை நான் எடுத்துக் கூறியபோது என்னையும் ஏளனமாகப் பேசி ஒடுக்கினது ஏன்?''

''விகர்ணா! துருபதன் மகள் அகங்காரம் பிடித்தவள். இந்திரப்ரஸ்தத்தில் நிலத்திற்கும் நீருக்கும் வித்தியாசம் தெரியாமல் உன் அண்ணன் தடுமாறிய போது எள்ளி நகையாடினாள் பாஞ்சாலி. துவேஷத்தால் விரோதிகளாக இருக்கும் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்குமிடையே அன்பை வளர்த்து பாலத்தை அமைக்க வேண்டியது ஒரு பெண்ணின் கடமை... தர்மம்...''

''அப்படியா!... அவள் செய்தது அதர்மம். ஆனால் நண்பன் என்ற பொறுப்பில் உள்ள நீ என்ன செய்தாய்? துரியோதனன் அரக்கு மாளிகையில் ஐவரையும் அக்னிக்கு இரையாக்கி அழித்து விட திட்டமிட்டபோது, தர்மத்தைப் பற்றி இன்று பேசும் நீ, அன்று அவனுக்கு உறுதுணையாக இருந்தாய். நட்பின் தர்மம் எங்கே போயிற்று? உனக்கு ஒரு தர்மம் அவளுக்கு வேறு தர்மம்... இல்லையா?''

''என்னை ஆதரித்து அரவணைத்து அங்கதேசத்தின் அதிபதியாக முடி சூட்டினானே உன் அண்ணன்...''

''அவன் எதைச் செய்தாலும் தர்மம். அவன் விரோதிகள் உனக்கும் விரோதிகள். அப்படித்தானே உன் நட்பின் இலக்கணம்!''

''அப்படித்தான்.''

''கர்ணா! துருபதன் மகளை அந்த அவையில் அவமானப் படுத்தியதில் உன் பங்கும் உண்டு.''

''ஆமாம்! அவளை மணம் செய்து கொள்ள விரும்பிய நான், துருபதன் அமைத்த வீரப் போட்டியில் கலந்து கொண்டு வில்லை நாணேற்றும் தருணத்தில் என்னைத் தேரோட்டி மகனென்று, குலத்தைக் காட்டி இழிவு படுத்தினாளே... அது என்ன தர்மம்?''

''மனதிற்கு விருப்பமில்லாதவன் நாணேற்றுவதைத் தடுக்க அவளுக்கு உரிமை உண்டு. அந்த உரிமையில் அவள் தன் விரும்பமின்மையை வெளிப்படுத்தினாள். ஆனால் அதை மனதிலிருத்தி வன்மத்தைத் தீர்த்துக் கொள்ள அவளை வேசி, தாசி என்று நீ பேசியது மட்டும் என்ன தர்மம், கர்ணா!''

''விகர்ணா! கண்ணனைப் போல் நீயும் என்னைக் குறை கூறி குற்றம் சாட்டுகிறாய்?''

''கண்ணனும் குற்றம் சாட்டினாரா!''

''ஆமாம்.... ஆனால் முழுக்குற்றத்தையும் என் மேல் சுமத்துவது சரியல்ல... திரௌபதியும் குற்றவாளிதான் என வாதிட்டேன். எதிர் வாதம் எதுவுமில்லாமல் என் தோளைப் பற்றிப் புன்னகை புரிந்தான். பதில் சொல்ல முடியாமல் மழுப்பிச் சிரித்தான். அவனை விட நீ அதிபுத்திசாலியா?''

''நிச்சயமாக இல்லை... ஆனால் நீ படுமுட்டாளாகி விட்டாய். மாதவனின் மழுப்பல் சிரிப்பு உன் வாதத்தை எதிர்க்க முடியாததால் அல்ல... கர்ணா! உன் அறியாமையைக் கண்ட கண்ணன் உன் தோளில் கைவைத்து நகைத்தார்.''

மறுபடியும் சிரிப்பொலி கேட்டது... திகைத்தான் தினகரனின் புதல்வன்.

விகர்ணன் தொடர்ந்தான்...

''உன்னைக் குலத்தைக் காட்டி இழிவு படுத்தினாள் துருபதன் மகள் என்கின்ற காரணத்தால், 'அவளை அவமானப் படுத்தியது நியாயமென்றால்....''

''என்றால்...''

''நிதானமாகக் கேள்... விருப்பமில்லாமல் உன்னை மணந்து கொண்ட உன் மனைவி தினம் தினம் உன்னை 'தேரோட்டி மகன்' என இழிவுபடுத்தி அவமானப் படுத்திக் கொண்டிருக்கிறாளே அவளை எந்த அரச சபையில், என்று மானபங்கப் படுத்தப் போகிறாய்?''

இடிபோல் சிரித்தான் கர்ணன். மின்னல் போல் தாக்க முயன்றான்.

சிரிப்பொலி கேட்டு மரமாகி நின்றான்...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''கர்ணா! இப்பொழுது உன் மனம் எப்படித் துடிக்கின்றது என்று என்னால் புரிந்து கொள்ள முடிகிறது... ஆனால் அன்று, பாண்டவர்கள் எப்படித் துடித்தார்கள் என்று உனக்குத் தெரிய நியாயமில்லை... இன்றும் தெரியப் போவதில்லை... நான் வருகிறேன்...'' விடை பெற்றுக்கொள்ளத் தயாரானான் விகர்ணன்.

''தம்பி! விகர்ணா! உன் வாதம்...''

''நியாயமானதுதான் என்று ஒப்புக் கொள்ள மனிதாபிமானம் படைத்த மனம் வேண்டும்...''

''சரி போகட்டும்.... உனக்கு வேண்டுவதைக் கேள்...''

மனதிற்குள் சிரித்தவாறே விகர்ணன் கர்ணனைப் பார்க்கிறான்....

''கொடை வள்ளல்களின் சக்கரவர்த்தியான அங்க நாட்டு மன்னரை தர்ம சங்கடத்தில் மாட்டிவிட எனக்கு விருப்பமில்லை.''

''இல்லை! விகர்ணா!... கேள்.''

''உன்னிடமிருந்ததை எல்லாம் கொடுத்து விட்டாய். இப்பொழுது உன்னிடம் இருப்பது ஒன்று வீரம், மற்றொன்று நீ தானம் செய்து சேகரித்த புண்ணியம்... வீரத்தை என் அண்ணனிடம், செஞ்சோற்றுக் கடனுக்காக ஈடுவைத்து விட்டாய்... புண்ணியத்தை புருஷோத்தமனைத் தவிர வேறு யாரும் பெற்றுக்கொள்ள முடியாது.''

விகர்ணன் போய் விடுகிறான்.

குழம்பிய மனதுடன் தலையைக் குனிந்து கொள்கிறான், குந்தியின் மூத்த புதல்வன்.

அங்கதேசத்து அரண்மனை முழுவதும் சிரிப்பொலி எதிரொலிக்கிறது.

◻ ◻ ◻

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# கண்கட்டு

பாரதப் போர் முடிவடைந்து சூதால் கவ்வப்பட்டிருந்த தர்மம் ஆயிரம் சூரியனாய் பிரகாசத்துடன் ஒளிவிட்டது.

யுதிட்டிரன் அரசு பீடத்தில் அமர்ந்து தர்மச்சக்கரவர்த்தியாக முடிசூட்டப்பட்டான்.

திருதராட்டிரன் தன் சோதரன் பாண்டுவின் மூத்த மகனிடம் ராஜ்யபாரத்தை ஒப்படைத்து விட்டு அரசியலிலிருந்து விலகிக் கொண்டான்.

வருடங்கள் ஓரிரண்டு ஓடிச் சென்றபின்...

விதுரரின் யோசனைப்படி, திருதராட்டிரன், காந்தாரி, குந்தி ஆகியவர்கள் வானப்ரஸ்த ஆசிரமத்தைத் தழுவி வனம் செல்ல விரும்பினார்கள்.

அவர்கள் விரும்பியபடியே, தர்மன் அவர்களுடைய தவ வாழ்வுக்கேற்ற ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து, அத்தியாவசிய வசதிகளுடன் அவர்கள் வாழ பர்ணசாலைகள் அமைத்துக் கொடுத்தான்.

வயோதிகப் பருவத்தில் அவர்கள் ஏன் காட்டிற்குப் போக வேண்டுமென்று யுதிட்டிரன், திருதராட்டிரனை வினவினான்.

''தர்மபுத்திரா! நாங்கள் வனம் செல்ல மிக முக்கிய நோக்கம் எது தெரியுமா? தர்மநியாயங்களை நன்றாக அறிந்தவர்களாக இருந்த நம் பிதாமகரும், துரோணரும், ஏதோ ஒரு காரணத்தைக் கற்பித்துக் கொண்டு அதர்மத்தை எதிர்க்காமல் அதற்குத் துணை நின்று மாண்டு போனார்கள்... நான், கௌரவ சக்கரவர்த்தி என்ற பட்டத்தை சிரசில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏந்தி... ம்... தடுமாறினேன்.... பாழும் பாசம் என் அறிவையும் குருடாக்கி விட்டது.

''கண்கள் ஏற்கனவே குருடாகிப் போனதுதான்... ஆனால் அன்று என் காதுகளும் செவிடாகிப் போயிற்று... என் வாயும் ஊமையாகிப் போனது.... காரணம் பாழாய்ப் போன பாசம், பற்று, பதவி மோகம்... அது மட்டுமா... பொறாமையும் கூட என்னைப் பற்றிக் கொண்டிருந்தது...

''பெரியவர்களான பிதாமகர் பீஷ்மர், கிருபர், துரோணர் மூவரும் கூட நீதியைப் பேச முன்வரவில்லை... அறிவுச் சுடரான அசுவத்தாமன் சிலையாகி நின்றான்... விதுரன் சபையை விட்டு வெளியேறினான்.... சக்கரவர்த்தி என்ற மாபெரும் பதவியைச் சுமந்து கொண்டிருந்த நான்.... நீதி கேட்டு மடந்தை ஒருத்தி அலறுகிறாளே என்று எண்ணாமல், ஜடமாகி வீற்றிருந்தேன். இனியாவது வனம் சென்று தவ வாழ்க்கையை மேற்கொண்டு மேனியிலும் மனதிலும் படிந்திருக்கும் அழுக்குகளை அகற்றிவிட்டு பரிசுத்தமடையலாம் என எண்ணுகின்றோம்.'' என்று நீண்ட வாசகங்களைக் கூறினார் பழைய சக்கரவர்த்தி...

யுதிட்டிரன் பதில் பேசாமல் பெருமூச்சு விட்டான்.

''குந்தி மைந்தா! உன் மனம் வருந்துவதை நான் அறிகிறேன்... உன் பக்கம் கண்ணனிருக்கிறான். அவனே உனக்குத் துணையாக இருக்கும் பொழுது... ம்... நாங்கள் எம்மாத்திரம்....''

அத்தினாபுரத்திற்கு அடுத்து அமையப்பெற்றிருந்த வனமொன்றில் திருதராட்டிரன், காந்தாரி, குந்தி, விதுரன், கிருபர் அவருடைய பத்தினி ஆகியோர் சென்று அமைதியான வாழ்க்கையை நடத்தி வந்தனர்.

அரசியல் இல்லாத ஆன்மீக வாழ்க்கை, வேத விசாரணை, தெய்வ சிந்தனை...

அவர்கள் துறவறம் மேற்கொள்ள நினைத்தார்கள்.

வம்சத்தின் மூதாதையரான வியாச பகவானை வேண்டினார்கள்.

''ஆண்டவனுக்கொப்பான மாமுனிவரே! எங்கள் விருப்பம் நிறைவேற ஆசி கூறி, அருள வேண்டும்'' என்றார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''திருதராட்டிரா! உன் மனம் பூரணமாகப் பழைய வாசனையிலிருந்து விடுதலை அடையவில்லை. மனதில் சுத்தமான தெளிவான ஒளி தோன்றினால் தான் துறவறம் மேற்கொள்ள முடியும். உங்களில் விதுரன் ஒருவனே பரிபூரணமான பக்குவ நிலையிலிருக்கிறான். அவனுக்கு அடுத்தபடியாக பாண்டுவின் பத்தினியான குந்தியும் துறவறம் பூண்டு பரந்தாமனின் நினைவிலேயே தன் மீதி வாழ்நாளைச் சன்னியாசினியாகக் கழித்து விடலாம்...''

''அப்படியானால் நாங்கள்...'' என்று கிருபர் சிறிது யோசனையுடன் இழுத்தார்.

''குலகுருவே! உங்கள் சஞ்சலம் எனக்குத் தெரிகிறது. நீங்கள் மகத்தான பெரிய பொறுப்பை வகித்த போது, கடமையிலிருந்து தவறிவிட்டீர்கள் - ராஜகுரு என்பவர் தான், தனது என்று எண்ணாமல், சுயநலம் இல்லாத நிலையில், தர்மத்தை எடுத்துக் கூற வேண்டும்.''

கிருபர் தலை குனிந்து மௌனமாக நின்றார். அவருடைய மனசாட்சி அவரை உறுத்திற்று.

கிருபருக்கே இந்த நிலை என்றால் தன் நிலை என்ன என்று அறிந்து கொண்ட திருதராட்டிரன், வியாசரின் முகத்தை ஏறிட்டுப் பார்க்க தைரியமில்லாமல் மனதிற்குள் துயருற்று, சிரம் தாழ்த்தி சிலையாய் நின்றார்.

ஆனால்...

காந்தாரி, தன் தைரியத்தை ஒன்று திரட்டிக் கொண்டு பேசலானாள்.

''பகவான் வியாச முனிவரின் திசை நோக்கி வணங்குகிறேன். அடியேன் என்ன தவறு செய்து விட்டேன். எனக்கு ஏன் சந்நியாசம் அருளக் கூடாது?''

''காந்தார நாட்டு இளவரசியே! நீ ஒரு இரட்டை வேடதாரியைப் போல் வாழ்ந்து வந்தாய்... மாலையிட்டவனுக்குக் கண்ணில்லை என்பதால் நீ உன் கண்களையும் துணியால் மறைத்துக் கொண்டு ஒரு குருடி போல் வாழ்ந்தது ஒரு போலித்தனம்.''

''அதெப்படிச் சொல்ல முடியும்?''

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy 

''காந்தாரி! நான் சொல்வதைக் கவனமாகக் கேள். கணவனுக்கு உறுதுணையாக இருப்பவள்தான் மனைவி. கணவனின் மந்திரியாக மாறி அவனுக்கு தர்மவழிகளைக் காட்டி அவனை அதன் வழி நடக்க வைப்பவள்தான் தர்ம பத்தினி. நீ அவ்வாறு நடந்து கொண்டாயா என்று யோசித்துப் பார்... என் வழி வந்த திருதராட்டிரன் பிறவியிலேயே கண்ணொளியை இழந்தவன். அவனைத் திருமணம் செய்து கொண்ட நீ அவனுக்கு ஒளியாய் இருப்பதற்குப் பதிலாக, உன் கண்ணொளியையும் மறைத்து அடைத்து வாழ்ந்தாயே, ஏன்? இப்பொழுதும் வாழ்கின்றாய்... அது சிறந்த தர்மமில்லை... காந்தாரி! நீ உன் வாழ்க்கையை இருளாக்கிக் கொண்டதினால்... சத்தியம், தர்மம் என்ற பேரொளிகள் உன் எண்ணத்தில் பிரகாசிக்காமல், பொறாமை, சுயநலம், காழ்ப்பு ஆகிய துர்க்குணங்கள் உன் அடிமனதில் குடிகொண்டு விட்டன. வெளியுலகிற்கு மிகவும் நல்ல ஒரு பெண்மணியாகக் காட்சியளித்துக் கொண்டு, உள்ளூர பொறாமைத் தீயால் கனலாகிக் கொண்டிருந்தாய். வேத சாஸ்திரங்களை நன்றாகக் கற்றறிந்த நீ... தர்மத்திற்குத் துணை நில்லாமல், அதர்மத்திற்கு சிரஞ்சீவித் தன்மை கொடுக்கவும் முனைந்தாய்...''

''பாசம் என் கண்ணை...''

''மறைத்தது என்று சொல்லலாம். பாசம், பற்று என்ற மாயை உன்னை எவ்வளவு நீசத்தனமாக நடக்க வைத்தது என்று அறிந்து கொண்டாயா....''

காந்தாரி மௌனமானாள்.

''அதர்மமே உருவான உன் பிள்ளை தன்னுடைய ஆசைக்கும், தன் பேராசைக்கும் எத்தனை உயிர்களை பலி கொடுத்தான். ஆணவத்திமிரால், பரம்பொருளான கண்ணனையே அவமதித்தான்... அப்பொழுதும் அந்த தெய்வம் விஸ்வரூபமெடுத்து சபையிலுள்ளோர்களை சிந்திக்கத் தூண்டியது. தர்மம் எங்கு நடமாடுகின்றதோ அந்தப் பக்கத்தில் தான் தெய்வமிருக்கும் என்று சொல்லாமல், காட்சியாகி நின்ற பொழுதும்.... உன் பதி அதைப் புரிந்து கொள்ளாமல், பிள்ளைப் பாசத்தினால் யுத்தத்திற்கு உத்திரவு கொடுத்தான்... அவன் அத்தனை அறிவாளி இல்லை... ஆனால் நீ...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


அறிவிற்சிறந்தவள், சக்கரவர்த்தியின் அகக் கண்களைத் திறந்து விட்டிருக்க வேண்டும்... கண்ணனை எதிர்த்து நாம் ஒரு நாளும் வெற்றி அடைய முடியாது என்று நல்லுரை செய்திருக்க வேண்டும்... மகன் துரியோதனனைக் கூப்பிட்டு அறிவுரை கூறி யுத்தத்தை நிறுத்தியிருக்க வேண்டும்... நல்ல சதி, தாய் என்ற கடமைகளில் இருந்து தவறி விட்டாய்... எல்லாவற்றையும் விட ஓர் அற்பத்தனமான காரியத்தைச் செய்து, அதர்மத்தை நிலை நாட்டி விட முனைந்தாய்....''

''அப்படி ஏதும் நான் செய்யவில்லையே! பகவானே!''

''தவச்ரேஷ்டரான துர்வாச மாமுனிவர் உனக்கு அளித்த பெரும் வரத்தை நீ உபயோகிக்க முனைந்தாய்... ஆனால் பிரபஞ்சத்தையே ஆட்டி வைக்கும் பரந்தாமன் உன் நோக்கத்தை அறிந்து விநோதமாக உன்னைப் பெரும் பழியிலிருந்து காப்பாற்றி, அதர்மத்திற்குச் சிரஞ்சீவித் தன்மை வந்துவிடாதபடி செய்து விட்டான்...''

''நூறு பிள்ளைகளில் ஒருவனையாவது காப்பாற்ற எண்ணும் தாய் தன் வரத்தை உபயோகிக்க நினைத்தைத் தவறு என்று சொல்லலாமா?''

''கெடுமதியுள்ளவன் மகனே ஆனாலும், அவனை வாழ வைக்க வேண்டும் என்ற பாசம் வெறும் மாயை... மானிட ஜனனம் மாயை என்ற வலையினுள் சிக்கிக் கொண்டு தன்னிஷ்டப்படி காரண காரியங்களை கற்பனை செய்து கொண்டு தன்னையே ஏமாற்றிக் கொண்டு பிறவிச் சூழலில் தத்தளிக்கின்றது. அதற்கு விதிவிலக்கு கோடியில் ஒன்றோ, இரண்டோதான்...''

''வியாச பகவானே! நான் செய்ததை மன்னித்து எனக்கும் ஒரு வழிகாட்ட வேண்டுகிறேன்.''

''காந்தாரி! உன் தவறை நீ உணர்ந்து விட்டாலும் உனக்கு வழிகாட்டி முக்தி நிலைக்கு அழைத்துச் செல்ல என்னால் முடியாது. மூன்று உலகங்களுக்கும் அதிபதியான முகுந்தனால்தான் அது முடியும்.... விதுரன் ஒருவன்தான் கண்ணனைப் பரிபூர்ணமாக அறிந்துகொண்டவன். அவன்பால் அசையாத நம்பிக்கை கொண்டவன்... அதனால் தான் அவன் வில்லை முறித்து எறிந்த விட்டு ஒதுங்கிக் கொண்டான்... அவன் கர்மயோகி, அவனே ஞானயோகியும் கூட... தற்பொழுது பக்தியோகியாய் மகாமேரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போல் நிமிர்ந்து நிற்கிறான்...''

''முனிபுங்கவரே! எங்கள் கதி?...'' என்றார் கிருபர்.

''காலம் வரும்... ஆம்! கட்டாயம் வரும்... கண்ணன் தான் கண் திறந்து உங்களைக் கடாட்சிக்க வேண்டும்....''

மறைந்து விட்டார் வியாசர்.

கௌரவ குல தம்பதிகளைத் தனியே விட்டு விட்டு, கிருபர் தன் வழியே போய் விட்டார்.

குந்திமாதேவிக்கும், விதுரனுக்கும் வியாசர் சந்நியாசம் அளித்தமையால் அவர்களிருவரும் தியானத்தில் ஆழ்ந்து விட்டார்கள்.

காந்தாரி பெருமூச்சு விட்டாள். அந்தப் பொருமலின் ஒலி கேட்டு அவளருகில் நெருங்கின காந்தாரி மணாளன்,

''காந்தாரி! நாமிருவரும் அந்த பரமாத்மாவை நோக்கியே பிரார்த்தனை செய்வோம்... உள்ளம், உடல், ஆவி எதிலும் கள்ளத்தனமில்லாத நிலையில் கண்ணபிரானை துதிப்போம்'' என்றான்.

''ஆர்யபுத்திரா! நீங்கள் சொல்வதும் சரிதான்... பொறாமை, பாசம் என்ற இரண்டு காலசர்ப்பங்கள் என்னைப் பீடித்திருந்தன. இன்று அவை விடுபட்டன... போலித்தனம் என்ற போர்வை வேறு... ஆண்டவன் எனக்கு அளித்த கண்களை நானே மூடிக் கொண்டு உலகத்தை இருளாகப் பார்த்தேன். அறிவையும் மங்கிப் போக விட்டுவிட்டேன்.. இனி என் கண்ணை மறைக்கும் கட்டு எதற்கு? இதோ இப்பொழுதே அதைக் களைத்து விடுகிறேன்....'' என்று பேசிய காந்தாரி, தன் கண் கட்டை அவிழ்த்தாள்....

கண்களை கசக்கிக் கொண்டு விழித்தாள்... அந்தோ பரிதாபம்!

கண்களில் ஒளி இல்லை.. அவளால் எதையும் பார்க்க முடியவில்லை எந்தப் பொருளும், அவள் கண்களில் படவில்லை...

''காந்தாரி! காந்தாரி!''

''ஆர்யபுத்திரா! என்னால் தங்களைக் காண முடியவில்லை.... என் கண்கள் உண்மையிலேயே குருடாகி விட்டனவா? ஆமாம்....

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


அப்படித் தானிருக்க வேண்டும்.. பார்வையை இழந்து விட்டேன்... ஆர்யபுத்திரா! இனி நம் கதி என்ன?... கூட இருந்தவர்கள் மறைந்து விட்டார்கள்... கண்ணில்லாத கபோதிகளுக்கு யார் துணை?''

''கண்ணன் தான் துணை... கண்கள் இருந்த போது அவனை சூது நிறைந்த வஞ்சகன் என்று ஏசினாயே! அந்த வாசுதேவன்தான் இனி நமக்குக் கண்கள்...''

''கண்ணா! கார்முகில் வண்ணா! தேவகி மைந்தா! யசோதை பாலா! ஆயர்குலக் கொழுந்தே! அனாதரட்சகா! என் ஆணவம் அடங்கி விட்டது... யாதவகுலச் செம்மலே! யது நந்தனா! நந்தகோபாலா!''

இருவரும் மாறி மாறியும், ஒருங்கிணைந்தும் கிருஷ்ணனைக் கூப்பிட்டார்கள்...

சரண் அடைந்தவர்களுக்கு உலகமளந்த உத்தமன், அருளினான்.

□ □ □

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# வசிட்டர் இயக்கிய நாடகம்

விண்ணில் நட்சத்திர தீபங்களும், நகரத்தின் மாடமாளிகைகளில் ஏற்றிவைக்கப்பட்ட விளக்குகளும், வீதிகளில் தீப்பந்தங்களும் இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தன. அயோத்தி மாநகரம் விழாக்கோலம் பூண ஆரம்பித்தது.

இராமனுக்கு மறுநாள் மகுடாபிஷேகம் என்ற மங்கலச் செய்தி மகிழம் பூவின் மணம் போல் நகரமெங்கும் பரவி, மக்களை ஆனந்தத்தில் ஆழ்த்தியது.

ஆனால்....

திடீரெனத் தசரதன் பிரகடனப் படுத்திய இராம பட்டாபிஷேகம், வசிஷ்டரை அதிர்ச்சியடையச் செய்தது.

தம் குடிலில் வசிஷ்டர் யோக நிலையில் மௌனியாகிக் கண்களை இறுக மூடிக்கொண்டிருந்தார். மூடிய அவர் கண்களின் முன் காட்சியொன்று விரிந்தது...

பாற்கடலின் அலைகள். ஆதிசேஷ மஞ்சத்தை ஊஞ்சலாட்டிக் கொண்டிருந்தன.

அந்த ஊஞ்சலில் சயனித்துக் கொண்டிருந்த நாராயணன் முன் வசிஷ்டர் கைகூப்பி நிற்கிறார்.

''ஓம் நமோ நாராயணா''

''மாமுனிவரே! தாங்கள் வந்த காரியம் நிறைவேறி விட்டதே! பின் ஏன் நிற்கிறீர்?''

''அச்சுதா! தாங்கள் தானே அடியேனை நிறுத்தி வைத்தீர்.''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''ஆமாம்! ரிஷிபுங்கவரே! உம்மை ஏன் நிறுத்தி வைத்துக் கொண்டேன், தெரியுமா?''

''தாமோதரா! தங்கள் சித்தம் எனக்கு எப்படித் தெரியும்?''

''திரிகாலஞானியான உமக்குத் தெரியாததும் உண்டா என்ன?''

''திரிவிக்ரமா! அடியேனைக் கேலி செய்வதினால், தாங்கள் மன மகிழ்வு அடைவதாயின் அது என் பாக்கியம். தங்கள் அருளாலும் ஆசியாலும் முக்காலத்தையும் நான் உணர்வேன்... ஆனால்.... காலத்திற்குட்படாத தங்களை, தங்கள் நோக்கத்தை யார் அறிய முடியும்?''

''முனிவரே! முடியும். தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் வாக்குக் கொடுத்தபடி நான் பூலோகத்தில் இராமனாக அவதரிக்கப் போகிறேன்.''

''அது பூலோகம் செய்த தவம்.''

''இந்த அவதாரம் ஒரு புதுமையானது. இராமன் என்ற மானுட ரூபத்தில் அவதரிப்பதோடல்லாமல் மனித குணாதிசயங்களோடு தான் தோன்றுவேன். என் சக்தி என்னிடம் இருக்குமே தவிர, அதை நான் உணர மாட்டேன்... இந்த இராம நாடகத்தை உமக்கு மட்டும் முன்னதாகவே சொல்லி விடுகிறேன்... அது எதற்காகத் தெரியுமா?''

தெய்வத்தின் குரலில் தம்மை மறந்து லயித்திருந்த ப்ரம்மரிஷி மௌனமாகவே இருந்தார்.

''வசிஷ்டரே! நீர்தாம் இராம நாடகத்தை நடத்த வேண்டிய இயக்குநர். காட்சிகளை மாற்றி, அந்தந்த பாத்திரங்களை ஏற்கும் நடிக நடிகைகளை நடிக்க வைத்து, சம்பவங்களையும் சந்தர்ப்பங்களையும் சிருஷ்டி செய்து கதாநாயகனான எனக்குக் கதையின் ஒவ்வொரு கட்டத்தையும் அமைத்துக் கொடுக்க வேண்டும்....''

''அநாதரக்ஷகா! என்னால் இந்த சோதனையை ஏற்க முடியுமா? இல்லை ஏற்று நடத்த முடியுமா?''

''ஏன் முடியாது? ப்ரம்மரிஷிக்கு இதெல்லாம் பெரிய சோதனையா என்ன?''

''பத்மநாபா? பரிசோதனையில் வெற்றி பெற அருள வேண்டும். பரப்ரம்மமான தங்கள் ஆக்ஞை என் பிரக்ஞை. தங்கள் உத்தரவு என்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


உணர்வு. தங்கள் சித்தம் என் தவப்பயன்.''

பரந்தாமன் சிரித்துக் கொண்டார்.

''ஞானச்ரேஷ்டரே! ஐயம் வேண்டாம்.''

''ஐயம் இல்லை ப்ரபோ!.... ஆனால்....''

''சந்தேகம் என்பது உங்கள் மனித இனத்தின் தனிப்பட்ட குணம்...ம்... என் அவதாரத்தில் நான் மட்டும் அதற்கு விதிவிலக்காகவா இருக்க முடியும்!... ஆனால் என்ன?...''

''புருஷோத்தமா! உன் புதிய நாடகத்தின் சூட்சம மந்திரத்தை அடியேன் அறியலாமா?''

''அதை அறிந்துகொண்டால் தானே முயற்சியில் வெற்றி காண முடியும்.''

''உபதேசித்து அருள்பாலிக்கப் பிரார்த்திக்கிறேன்.''

மஹாவிஷ்ணு எழுந்து நின்றார்.

வசிஷ்டர் வாய் புதைத்து, சிரம் தாழ்த்திப் பணிவாய் நின்றார்.

''ராமா..... ராமா.... ராமா...''

தாரக மந்திரத்தை மனனம் செய்தவாறே கண்களைத் திறந்தார் தவச்ரேஷ்டர்.

எதிரில்....

ஊர்மிளை பணிவோடு நின்று கொண்டிருந்தாள்.

''குரு தேவா! என்னைக் கூப்பிட்டதின் நோக்கம்...''

''ஞானப் பெண்ணே! உனக்குத் தெரியாததும் உண்டோ....''

ப்ரம்ம ரிஷியின் புகழ்ச்சி இளைய பெருமாளின் பத்தினியை வெட்கமுறச் செய்தது.

''ஊர்மிளா! இராம நாடகத்தின் அடுத்த காட்சி மாற்றத்திற்குக் காலம் வந்துவிட்டது.''

''ஆமாம்! அண்ணல் அயோத்தியாதிபதியாக நாளை முடி சூடப்போகிறார்.''

''அது நடக்கக் கூடாது!... ஆமாம்... நாளைய தினம் அசுபமானது. கோள்களின் நிலையைப் பாராமல் கோமகன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திடீரெனப் பிரகடனப் படுத்திவிட்டார்.''

''மாமன்னரிடம் எடுத்துரைத்து...''

''முடியாத ஒன்றைப் பேசுவது வீண் காலதாமதமாகும்.''

''மங்கள மந்திரங்கள் ஓதி, கோள்களைத் திருப்தி செய்து, தேவாதி தேவர்களையும் அழைத்து ருத்ரனையே முன்னிறுத்தி மகுடாபிஷேகம் செய்தால்....''

''தெய்வ சங்கல்பம் இவை எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டது.''

''அப்படியானால்...''

''சீதாராமன் ராஜாராமனாக தற்போது ஆகக்கூடாது. ஜானகி மணாளன் கானகம் போக வேண்டும். இதுதான் மஹாவிஷ்ணுவின் வாக்கு; தெய்வத்தின் ஆணை. அவதார நாடகத்தின் அடுத்த காட்சிக்கு இன்றைய இரவில் ஒரு திருப்புமுனை அமைக்க வேண்டும்.''

''அதற்கு வழி!''

''மகுடாபிஷேகத்தைத் தடுத்து நிறுத்த என்றே மந்தரை என்ற ஒரு மடந்தை பிறந்திருக்கிறாள்... அவள் நடிக்க வேண்டிய கட்டம் வந்து விட்டது... இதோ அவளும் வந்து விட்டாள்.''

மந்தரை என்ற பெண் மாமுனிவரின் முன் மண்டியிட்டு வணங்கி நின்றாள். அவள் கேகய நாட்டு மங்கை. தயரதனின் இளைய ராணி கைகேயியின் அந்தரங்கப் பணிப் பெண்.

''மந்தரை! அரண்மனையில் என்ன செய்தி?''

''நாளை ஸ்ரீ ராமச்சந்திரனுக்கு மகுடாபிஷேகம். நகரமெங்கும் கோலாகலம். அந்தப்புரங்கள் அனைத்திலும் குதூகலம்...ம்...''

''மந்தரை! உன்.... மனமும்....''

''மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது என்று சொல்ல என்னால் முடியவில்லையே... இளைய ராணியின் குதூகலம் வானுயரப் பறந்து சிறகடிப்பதைப் பார்க்கும் போது என் மனம் பதறுகிறது... புழுங்குகிறது... குரு சிரேஷ்டரே! ஏன் நான் மட்டும் புண்பட்டவளாக இப்படித் துடிக்க வேண்டும்?''

''மந்தரை! நீ யார் தெரியுமா?''

''அறியேன்...''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


''இன்னல் செய் இராவணன் இழைத்த தீங்கின் உருவம்தான் நீ! விஷ்ணு லோகக் கன்னியான நீ இராம நாடகத்தின் ஒரு சிறிய பாத்திரம்.... ஆனால் மிகமிக முக்கிய பாத்திரம்... உன் பாத்திரப் படைப்பு இன்றிரவு பிரகாசிக்க வேண்டும்.... பழியேற்க என சில பாத்திரப் படைப்புகளை இராம நாடகத்தில் உருவாக்கி இருக்கின்றார், ஸ்ரீமந் நாராயணன். அவர்களில் முதன்மையானவள் நீதான். இப்பொழுது நீ நடிக்க வேண்டிய தருணம் வந்து விட்டது.''

''பகவானின் திருவுளம் அறிந்து தானே எங்களில் சிலர் இந்தப் பிறவி எடுத்தோம். பிறவியின் நோக்கத்தை நிறைவேற்றத் தயங்கலாமா.... இல்லை பழிக்குப் பயந்து பின் வாங்கத்தான் முடியுமா?''

''கம்பீரம் நிறைந்த விஷ்ணு கன்னியே! நீ செய்ய... இல்லை... நடிக்க வேண்டியதைக் கூறுகிறேன்.... நடித்து முடித்த பின் உன் கம்பீரம் மறைந்து நீ கூனியாகத் தோற்றமளிப்பாய்.''

''ஈச்வர இச்சை அதுவானால் ஆணை இடுங்கள்.''

''உன் சாமர்த்தியத்தாலும் சமத்காரத்தாலும் கேகய நாட்டுப் பேரணங்கின் மனதைப் பேதலிக்க வைத்து, அவள் சக்ரவர்த்தியிடம் இரண்டு வரங்களைப் பெற்றுவிட வேண்டும்....''

''என்ன வரங்கள்!''

''இராமன் பதினான்கு வருஷங்கள் வனவாசம் செய்ய வேண்டும். பரதன் நாட்டை ஆளவேண்டும்.''

மந்தரை சிலையாகி நின்றாள். அது சில வினாடிகள் தாம். அவள் மனதில் விஷ்ணு சங்கு சக்கரத்துடன் சதுர்புஜராகக் காட்சி அளித்தார்.

''ஸ்ரீ பதே! அவதார நாடகத்தில் அடியவளின் பங்கைப் பங்கமில்லாமல் நிறைவேற்ற அருள் புரிய வேண்டும்.''

புல்லரிப்பில் உடல் சிலிர்த்த மந்தரை தீயவளாய்ப் புறப்பட்டுப் போய்விட்டாள்.

''ஊர்மிளா! இனி நடப்பதைக் காண்பதுதான் நம் வேலை...''

''பழி ஓரிடம்.... பாவம் ஓரிடம்....''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''அதுதான் உலக நியதி. மானுடத்தின் வாழ்வு முறை... பகவானின் விருப்பமே தவிர இது என் செயல் அல்ல... இனி உன் வேலையைக் கவனி... அண்ணலுடன்... உன்னவரும் பின் தொடர்வார்..... இருவருக்கும் மரஉரி ஆடை....''

''வசிஷ்ட மாமுனிவரே! மூவரல்லவா கானகம் போகவேண்டும்... அன்னை சீதாப் பிராட்டியார் அண்ணல் வழி போகவில்லை என்றால் தசமுகனின் அழிவு...''

''ஆமாம்! மூவரும் அதிகாலையில் ஆரண்யம் செல்ல ஆயத்தங்கள் செய்ய வேண்டும்.... நடுஜாம மணியோசை ஒலிக்கிறது... உன் வழி நீ செல்வாய்...''

மறுநாள் அருணோதயம்...

அயோத்தி நகரம் ஆழ்ந்த துயரத்தில் கண் விழித்தது.

இராமன் கானகம் செல்ல ரதம் தயாராகி விட்டது. நகர எல்லை வரை, இளவரசரையும், பிராட்டியையும் ரதத்தில் ஏற்றிச் சென்று விட்டுவிட்டுத் திரும்பி வரும் பொறுப்பு அமைச்சர் சுமந்திரர் தலையில் சுமத்தப்பட்டது.

காகுத்தன் கானகத்துக்குச் செல்கிறான் என்று அறிந்த தேர்க்குதிரைகள் கண்ணீர் வீட்டு அழுது கொண்டே தங்கள் கடமையைச் செய்தன.

□ □ □

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# நச்சுப் பொய்கையில்...

விதுரர் மனம் கலங்கி நின்றார். சற்று முன் அவருடைய அந்தரங்க ஒற்றன் கூறிய செய்தி அவர் மனதைக் கலக்கியது.

துஷ்டன் துரியோதனனுக்கும், பாவி கர்ணனுக்கும், கெடுமதி சகுனிக்கும் பாண்டவர்கள் மேல் ஏன் இத்தனை வஞ்சம்?

சூதாட்டமாடி, பாண்டவர்களையும் - பாஞ்சாலியையும், வனவாசத்திற்கு விரட்டிவிட்ட பின்னும், அவர்களை அழித்து விடும்படியான வன்மத்தை வரம்பில்லாமல் வளர்த்துக் கொண்டே வருகிறார்களே! அவர்களைக் கொன்று தீர்த்துவிடவே எண்ணி விட்டார்களே! அதற்காக வேள்வி நடத்த முற்பட்டு விட்டார்களே! இந்த மூன்று முரடர்களும்...'' என்று ஏங்கித் தவித்தார் விதுரர்.

ஆபத்தைத் தடுத்து ஐவர்களையும் காப்பாற்றக் கூடியவன் கண்ணன் ஒருவனே. அவனுக்குச் செய்தியைத் தெரியப்படுத்த வேண்டியது தன் கடமை என்று நினைத்தார்.

தானே போய்ச் சொல்ல முடியாத தர்மசங்கடமான பதவிப் பொறுப்பு, ஹஸ்தினாபுரத்துப் பிரதம அமைச்சர் பதவி. எங்கேயாவது தான் செல்ல வேண்டுமென்றால் சக்கரவர்த்தி திருதராட்டிரனிடம் அனுமதி கேட்க வேண்டும்; காரணமும் கூற வேண்டும்... அவரிடம், அவருடைய புதல்வனின் சதித்திட்டத்தை எப்படிக் கூற முடியும்? பொய் சொல்லிப் பழக்கமில்லாத அரசியல்வாதி அவர்.

சட்டென ஒரு யோசனை மின்னியது. உடனே பணியாளை ஏவி விட்டார்.

அர்ச்சுனனின் அன்னையை அவசரமாக அழைத்து வரப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பணியாள் பறந்து போனான்... தர்மனின் தாய் வந்தாள்...

விதுரனின் பேச்சுக்கு பாண்டுவின் பத்தினி மிகவும் மதிப்பு வைத்திருந்தாள். அரக்கு மாளிகை சம்பவம் அவள் மனதை விட்டு மறையவேயில்லை. விதுரனின் முன்னேற்பாட்டினால் தானும், தன் பிள்ளைகளும் மரணத்தின் பிடியிலிருந்து தப்பியதை தாயுள்ளம் கொண்ட குந்தியால் மறக்கத்தான் முடியுமா?

''அவசரமாக என்னை அழைத்த காரணம் என்ன? அமைச்சர் பிரானே!''

''தாங்கள் உடனே மதுராபுரிக்குச் சென்று, கண்ணனிடம் நான் கூறும் செய்தியைத் தெரிவிக்க வேண்டும். நீங்கள் ஒருவர்தான் இதைத் தடங்கலில்லாமல் செய்யமுடியும்.''

''கண்ணனைப் பார்க்கச் செல்ல வேண்டுமென்றால், கற்கண்டைச் சுவைப்பது போல்தான், போகிறேன்... என்ன செய்தி?''

''காளர் என்ற முனிவர் யாகமொன்றினைத் துவங்கப் போகிறார் என்று சொல்ல வேண்டும்... அவ்வளவுதான்...''

''முனிவர் யாகம் செய்யப் போவது அதிசயமா என்ன! அதிலும் அதை நான் போய் ஏன் சொல்ல வேண்டும்?... அமைச்சரின் வேண்டுதல் வேடிக்கையாக இருக்கிறதே!''

''வேடிக்கையா வேதனையா என்பது வாசுதேவனுக்குத் தெரியும்... மற்றபடி ஏதும் கேட்க வேண்டாம்... ரதம் தயார் நிலையில் காத்து நிற்கின்றது...''

ரதம் புறப்பட்டுச் சென்றது.

முனிவர் காளரின் முன் மண்டிபோட்டு வணங்கி அவரை உபசார வெள்ளத்தில் மூழ்கடித்துத் திணற வைத்தான் சகுனி. கர்ணன் அவர் கால்களைத் தொட்டுக் கும்பிட்டான். வணங்காமுடி துரியோதனன் கரம்கூப்பி வரவேற்றான்.

மூவரின் பணிவையும், உபசரிப்பையும் கண்ட முனிவர் மனம் மகிழ்ந்தார்.

''காந்தார நாட்டு இளவல் என்ற பட்டத்தை மட்டும் சுமந்து நிற்கும் சகுனியே! அங்க நாட்டு மன்னனான கொடை வள்ளலே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தினாபுரத்து இளவரசரே! உங்கள் மூவருக்கும் மங்களம் உண்டாகட்டும். ஏழை ரிஷியான என்னிடம் ஆசிகள் தருவது ஒன்றுதானே ஆஸ்தி... அதையே உங்களுக்கு அபரிமிதமாக அளிக்கிறேன்...''

''மாமுனிவரே! வாயால் ஆசிகள் வழங்கினாலும், உங்களால் எங்களுக்குப் பெரிய ஓர் உதவி தேவை... அதை யாசிக்கிறோம்...'' கபட நாடகத்தின் சூத்ரதாரி நயமாகப் பேசினான்.

''உங்களுக்கு இல்லாமல் வேறு யாருக்கு என் தவம் உதவப் போகிறது... சொல்லுங்கள்...'' புகழ்ச்சியில் புல்லரித்துப் போன முனிவர் கூற...

சகுனி சதியை விஸ்தரித்தான்.

முனிவரின் முகம் மலர்ந்தது. தன்னையும் மதித்துத் தன் தவப்பயனை உபயோகித்துப் பரீட்சை பார்க்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததில் உள்ளம் பூரித்தார் காளர்.

''யாகத்தை இன்றே துவங்கிட ஏற்பாடுகள் செய்யுங்கள். உங்கள் விருப்பம் என் பாக்கியம்...'' என்று அம்மூவர்களின் ஆசைக்குத் தூபம் போட்டார்.

மூவரின் முன்னிலையில் யாகத்தைத் துவங்கினார் காளர்.

அதே சமயம்...

மதுராபுரியில், குந்தி மதுசூதனின் செவிகளில் விதுரன் கூறியதை ரகசியமாகக் கூறிவிட்டு, ''கிருஷ்ணா! அவர் யாகம் செய்ய முற்படுவதை, உன்னிடம் ரகசியமாகச் சொல்லும்படி ஏன் விதுரர் என்னை அனுப்பினார்?'' என்று கேட்டாள்.

''விதுரனுக்கு தர்மத்தின் மேல் அசையாத நம்பிக்கை... அதுதான் என் காதில் விஷயத்தைப் போட்டு வைக்கிறான்... தர்மதேவனின் வாரிசை தரணிக்குத் தந்த தாயே! உன் வேலை முடிந்தது... என்னை நாடி வந்தபின் உனக்கு ஏன் மற்ற கவலைகள்?''

இதற்கு மேல் கண்ணனிடம் எதையும் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியாது என்று தீர்மானித்து, கிருஷ்ணனின் பத்தினி ருக்மணியைக் காண அந்தப்புரம் விரைந்தாள் குந்தி.

குந்தி மறைய...

சர்வலோக சம்ரட்சகன், மனதில் சங்கல்பித்துக் கொண்டார். தாமோதரன் முன் தலைவணங்கி நின்றான் தர்மதேவன்...

''பரந்தாமா! அடியேனை அழைத்த காரணம்?''

''தர்மதேவனே! பாண்டுவின் பத்தினி குந்திதேவியை நினைவிருக்கிறதா?...'' தர்மத்தையே கேள்வி கேட்டான் கேசவன்.

தர்மம் தலை ஆட்டியது.

''அவளுக்கு உன் அம்சமாக ஒரு குழந்தையை அளித்தாயே... அது பெரியவனாகி யுதிட்டிரன் என்ற பெயரில் தன் தம்பிகளுடனும், தர்மபத்தினியுடனும் கானகத்தில் தண்டனைக் காலத்தைக் கழிக்கிறார்களே... அதாவது தெரியுமா?...'' நக்கலாகக் கேட்டான் நந்தகுமாரன்.

''தெரியும் ப்ரபோ!'' பதிலளித்தான் காலத்தின் அதிபதியான யமதர்மராஜன்.

''அவர்களுக்கு ஆபத்து.''

''எப்படி?''

''அதர்வண வேதத்தில் விற்பன்னரான காளர், பாண்டவர்களை மாய்த்துவிடக் கூடிய பூதமொன்றை யாகத்தில் உருவாக்கி விடுவார்... அந்தக் கொலை பூதம்... ஐவர்களையும் தன் அகோரப் பசிக்கு விருந்தாக்கிக் கொள்ளும்...''

''தத்வஸ்வரூபா! இந்த பயங்கரத்தைத் தடுக்க முடியாதா?'' கவலையுடன் கேட்டான் காலன்.

''முடியும்! நீ மனம் வைத்தால்...'' என்றான் முகுந்தன்.

''நானா?''

''ஆமாம்! யமதர்மராஜனான நீதானே மரணத்தின் அதிபதி. உன் மாயையால் நீ தர்மபுத்திரனையும் மற்றவர்களையும் காப்பாற்று. பாண்டவர்களை மாண்டவர்களாக்கி விடு உன் மாயையால்... காளர் ஏவிவிடும் பூதம் அவர்கள் மாண்டு கிடக்கும் கோலத்தைக் கண்டு ஏமாந்துவிடும்... இறந்தவர்களை மறுபடியும் சாகடிக்க முடியாத ஆத்திரத்தில் அது கோபமடைந்து யாகசாலைக்கே ஓடி, தன்னை ஏவிய

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy 

காளரையே பலிவாங்கிவிட்டு யாக குண்டத்தில் குதித்து மறைந்துவிடும்...''

''உலகமளந்த பெருமாளே! உன் உத்திரவை சிரமேற்கொண்டு செவ்வனே முடிக்கிறேன்.''

பன்னிரெண்டு ஆண்டுகள் வனவாசம்... இறுதிக் கட்டத்திற்கு நெருங்கிக் கொண்டிருந்தது. பாண்டவர்கள் துவைத வனத்தின் எல்லையை நோக்கிப் பயணித்தார்கள்... கட்டவிழ்ந்த கார்குழலுடன் துருபதன் மகளும் அவர்களைப் பின் தொடர்ந்தாள்...

திடீரெனக் காற்றின் சலனம் குறைந்தது. வெப்பம் கடுமையாக வனப்பிராந்தியத்தை வாட்டிக் கொண்டிருந்தது. பாண்டவர்களும் பாஞ்சாலியும் களைத்துப் போனார்கள்...

தவித்துப் போன ஆறுபேர்களும்... ஓரடிகூட எடுத்து வைக்க முடியாமல் தள்ளாட....

அவர்கள் முன்... சிறிய மான்கூட்டமும் ஒரு மயிலும் காட்சியளித்தன... ஐந்து கலைமான்களையும், ஒரு புள்ளி மானையும் அந்த மயில் வழிநடத்திக் கொண்டே நடனநடை போட்டது...

மயில் போன வழியில் ஆமைபோல மெதுவாக நகர்ந்தனர் அறுவரும்...

மயிலும் மான்களும் சட்டென மறைந்தன...

மடந்தை நல்லாள் மயக்கத்தால் நடை தள்ளாட ஜாடையால் நீர் கேட்டாள். செய்வதறியாமல் திகைத்தனர் சோதரர்கள்...

''நகுலா! மரத்தின் உச்சியிலேறி, பக்கத்தில் நீர்நிலை இருக்கின்றதா என்று பார். நீரை மோப்பம் பிடித்ததால் தான் மயிலும் மான்களும் மறைந்திருக்கும்...'' என்றான் தர்மன்.

மரத்தின் உச்சியில் நின்று கண்ணோட்டம் விட்ட நகுலன்...

''தடாகம் ஒன்றைக் காண்கின்றேன்'' என்று உரக்கக் கூறினான்.

''அது கானலாக இருக்கும் நகுலா!'' அர்ச்சுனன் அவ நம்பிக்கைப் பட்டான்.

''இல்லை...! அது உண்மையாகவே நீர்த்தடாகம்தான். சற்றுமுன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


நம்முன் தோன்றிய மயில் தோகை விரித்தாடுகிறது. மேலே புள்ளினங்கள் வட்டமிடுகின்றன... நாரைகள் நீர் மட்டத்தில் தவசியாய் நிற்கின்றன...''

''போதும்... நகுலா! இறங்கி வா... தடாகத்திற்குச் சென்று உடனே நீர் கொண்டு வா... ம்... விரைந்து செல்...'' என்று மூத்தவன் ஆணையிட இளையவன் வேகமாக ஓடினான்.

நீர் கொண்டு வரச்சென்ற நகுலன் வெகு நேரமாகியும் திரும்பி வராமற்போக... சகாதேவன் அவனைத் தேடிச் சென்றான்...

அவனும் திரும்பவில்லை...

காண்டீபனும், அவனைத் தொடர்ந்து பீமனும் நீர் நிலையை நோக்கிப் போனார்கள்.

நச்சுப் பொய்கையின் கரையிலே நால்வரும் சவமாகி விட்டதை அறியாத தர்மபுத்திரன் பதட்டப்பட்டான்...

''கிருஷ்ணே! தண்ணீர் கொண்டுவரச் சென்றவர்கள் நால்வரும் திரும்பவே இல்லை... என்ன ஆனார்களோ?... நான் போய்ப் பார்த்து வருகிறேன்... ப்ரியே! நீ தைரியமாக இரு.'' என்று கூறின யுதிட்டிரன் தயக்கத்துடன் தான் புறப்படுவதைச் சற்று தாமதப்படுத்திக் கொண்டே, தம்பிகள் வந்துவிட மாட்டார்களா என்று வழிமேல் விழிவைத்து ஏக்கமுடன் பாதையைப் பார்த்தான்.

அந்த இடைவெளியில்...

காளரின் வேள்வித் தீயிலிருந்து வெளிப்பட்ட பூதம்... ''யாரைக்கொல்ல வேண்டும்?'' என்று கர்ச்சித்தது.

''துவதை வனத்தில் இருக்கும், துரியோதனனின் விரோதிகளைக் கொன்றுவிட்டு வா.''

ஏவி விடப்பட்ட பூதம் நச்சுப் பொய்கையை அடைந்தது. அங்கே...

நால்வர்கள் பிணமாகிக் கிடப்பதைக் கண்டது... புரட்டிப் புரட்டிப் பார்த்த பூதம் அவர்கள் மாண்டு விட்டதைக் கண்டு ஏமாற்றத்தால் ஆத்திரம் கொண்டது.

ஆக்ரோஷத்துடன் யாகசாலைக்குத் திரும்பிய பூதம் முனிவர்

Public domain. Digitization Muthulakshmi Research Academy

காளரை நோக்கிக் கொக்கரித்தது... ''கபடரிஷியே! மாண்டவர்களை மீண்டும் கொல்ல இயலுமா? பிணங்களையா கொன்று தின்று விட என்னை ஏவினாய்?... இதோ பார்! என் பசிக்கு நீயே ஆகாரம்... உன் ஏவலுக்கு நீயே பலி.''

காளரைக் கொன்று தீயில் எறிந்து விட்டுப் பூதமும் அக்னியில் மறைந்தது.

யாக சாலையில் அமர்ந்திருந்த மூவரும் திகைத்தனர்.

''பாண்டவர்கள் ஒழிந்தார்கள்...'' என்று சகுனி உரக்கக் கூறினான்.

''மாமனே! பாண்டவர்கள் அத்தனை எளிதில் மாண்டிருப்பார்கள் என்றா நினைக்கிறாய்?... இதில் ஏதோ சூது நடந்து இருக்கிறது... சகுனி மாமாவே! சூதில் வல்லவனான உனக்கும் மேல் ஒரு வல்லவனிருக்கிறான்... அவன்... அவன்... அவனாகத்தானிருப்பான்...'' என்று சோகமாய்க் கூறிவிட்டு, யாக சாலையை விட்டு வெளியேறினான் துரியோதனன்.

நச்சுப் பொய்கையில்... தர்மதேவன் வினாக்களை அடுத்து அடுத்துக் கேட்க, தர்மபுத்திரன் அலுக்காமல் சலிக்காமல் அத்தனைக்கும் விடையளித்தான்.

மனம் மகிழ்ந்த யட்சன் தர்மராஜனாக மாறி யுதிட்டிரனிடம் ''மகனே! நீ வென்று விட்டாய்... உன் தம்பிகள் நால்வரும் உயிர்ப்பித்து எழுவார்கள்... தர்மம் என்றும் வெல்லும்...'' என்று கூறிவிட்டு மறைந்தான்.

நச்சுப் பொய்கையின் கரையில் நடந்த வினா - விடை விவாதங்கள் தர்மதத்துவ வார்த்தைகள்.

தர்மக்ஷேத்திரமான குருக்ஷேத்திரத்தில் பின்னர், தான் உபதேசிக்கப் போகும் கீதைக்கு நச்சுப் பொய்கையில் தர்மதேவனைக் கொண்டே முன்னுரை ஒன்றை அரங்கேற்றினானோ கீதாசார்யன்...

□ □ □

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# பகடைகள் சிரித்தன

பாரதப் போரின் பதினேழாம் நாள் யுத்தம் முடிந்தது.

குருக்ஷேத்திரப் புண்ணிய பூமி குருதி வெள்ளத்தில் குளித்தது.

கௌரவ சேனையின் பாசறைகளில் ஓர் அழுத்தமான சூனியம். வீரர்களிடையே ஒரு பயம்; நடுக்கம். ஆமாம்... படைபலத்தில் முக்கால் பங்கிற்கும் மேல் பலியாகி விட்டது.

மங்கலான தீவட்டி வெளிச்சத்தில், தன்னுடைய பாசறையில், வணங்காமுடி வருத்தமே உருவாய், மேலும் கீழுமாய் நடைபோட்டுக் கொண்டே உலாவிக் கொண்டிருந்தான்.

கௌரவர்களின் அரசு பீடமான அத்தினாபுரத்தைக் காப்பாற்றுவதையே தன் லட்சியமாகக் கொண்டு வாழ்ந்த பீஷ்மர், வெட்டி எறியப்பட்ட வாழைமரம் போல், உயிரை விடாமல், ஒன்றுக்கும் உதவ இயலாத ஜடமாய் சரமஞ்சத்தில், சயனித்து விட்டார்... தன் மனசாட்சியாய், தன் வலக்கரமாய், தன் உயிர் நண்பனாய், போரிட்ட மகா வீரனான கர்ணன் மாண்டுவிட்டான். தன் நிழலாய், தன் எண்ணங்களின் பிரதிபலிப்பாய், தன் நாடியின் துடிப்பான தம்பி துச்சாதனன் பீமனால் கொல்லப்பட்டான். 'நூறு சோதரர்களில் ஆறுதல் சொல்வதற்கோ, இல்லை ஆதரவுடன் சமர் புரியவோ ஒருவன் கூட மீதியில்லாமல் அழிந்து போனார்கள்!' என்றெல்லாம் மனவேதனையில் புழுங்கினான், காந்தாரியின் தலை மகன்.

'எந்த இக்கட்டான நேரத்திலும் சமயோசித புத்தி சொல்லும் மாமன் சகுனியுமா சாக வேண்டும்... யாருமில்லாத தனியாளாக நிற்கிறேனே... நாளையப் போரில் தனியாகத்தான் போராட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேண்டும்...' மனம் நொந்து மருகினான் பானுமதி மணாளன்.

பகடைகள் சிரித்தன.

தன் ஆசனத்திற்கு நேரெதிரே இருந்த ஓர் ஆசனத்தின் நடுவே வீற்றிருந்த அந்தப் 'பகடைகள்', சகுனியின் ஆயுதங்கள்... அவைகளையே உற்றுப் பார்த்தான் திருதராட்டிரனின் அன்பு மகன்.

''மாமனின் கபட வார்த்தைகளின் சொற்படி பிசகாமல் நடந்து கொண்டதின் பின் விளைவுதான் தன்னை மரணத்தின் எல்லையில் இழுத்து வந்து நிற்க வைத்திருக்கிறது... ஏய்!.. சகுனியே! உன் திருட்டுச் சிரிப்பிலும், இனிப்பாக பேசிய நியாயமற்ற உபதேசங்களாலும் ஓர் அரசகுலமங்கையை அவை நடுவே அவமானப்படுத்தினேன்... இதோ... அவள் என் உதிரத்திற்குக் காத்து நிற்கிறாள்... மதி கெடுத்த மாமனே! இப்பொழுது என் கதி என்ன? அதர்மத்தின் சிகரத்தில் ஆட்டம் போட்ட எனக்கு இன்று யார் துணை?... அன்று... ஆம்... பதிமூன்று வருஷங்களுக்கு முன்... தர்மமே உருவாகி நின்ற யுதிட்டிரன் சொன்னானே... தர்மத்தை சூது கவ்வும். பொறுத்திரு, காலம் வரும் தர்மம் வெல்லும்...' ஆமாம் காலம் வந்துவிட்டது... சூதிலும் சூழ்ச்சியிலும் காலம் கடத்திய என்னைத் தேடி காலனும் வந்துவிட்டான்... அம்மா!... அம்மா! உன்னுடைய மைந்தனுடன் தோளோடு தோள் கொடுத்துப் போரில் உதவ யாருமே இல்லை... தனி மரமாய்த் தவிக்கிறேன்... அம்மா... அம்மா... என்னைக் காப்பாற்ற இனி யார்?...'' என்று புலம்பினான். அரற்றினான் அரவக்கொடியோன்.

அப்போது -

''மகனே! சுயோதனா!'' பாசறைக்கு வந்தாள் தாய்.

தாயின் அன்பும், பாசமும், பரிவும் அவள் குரலில் சங்கமித்துப் பிரவாகமாக வெளிப்பட்டன. தொடர்ந்தாள்...

''உன் குரலில் அவலம் பிரதிபலிக்கிறது. மகனே!... ஏன் இந்தப் பதட்டம்?''

''அம்மா! யுத்தத்தில் நான் எல்லோரையும் இழந்துவிட்டேன்... பிதாமகர், ஆசார்யர், நண்பர்களான ஜயத்ரதன், கர்ணன், தம்பி துச்சாதனன் உட்பட அனைவரும் பலியாகி விட்டார்கள்... என் அங்கங்கள் எல்லாம் துண்டிக்கப்பட்டன.''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


''செல்வ மகனே! நான் உயிருடன்தான் இருக்கிறேன். என் கண்களைத்தான் கட்டி மறைத்துக் கொண்டேனே தவிர, என் அறிவையோ அன்பையோ அணைபோட்டுத் தடுத்துக் கொள்ளவில்லை... கௌரவ குலக் கொழுந்தே! உன் நிலை எனக்குத் தெரிகிறது... பயத்தை விடு... உன் தாய் உனக்குத் துணை.''

''அம்மா! கண்களைக் கட்டிக் கொண்ட நீங்களா எனக்கு உதவ முடியும்! என்ன அம்மா இது!''

''சுவேதனா! என் அருகில் வா! நான் சொல்வதைக் கேள்.''

துரியோதனன் தன் தாயின் முன் மண்டியிட்டு, அவள் முகத்தருகே சென்று, தாய் சொல்லப் போவதைக் கேட்கத் தயாரானான்.

பகடைகள் சிரித்தன.

பாண்டவர்களின் பாசறை.

சகாதேவனுடன் சிரித்து உரையாடிக் கொண்டிருந்த வாசுதேவன் சட்டென மௌனமானான்.

''கண்ணா! திடீரென ஏன் மௌனம்?''

சகாதேவனின் கேள்விக்குக் கண்ணனிடமிருந்து பதில் ஏதுமில்லை. மௌனம்...

''கண்ணா!'' மறுபடியும் சகாதேவன்.

அரைவினாடி தன் கமலக்கண்களை மூடிக்கொண்ட அச்சுதன்,

''சகாதேவா!'' மௌனத்தைக் கிழித்துக் கொண்டே மென்மையாகத் திருவாய் மலர்ந்தான் மாதவன்.

''என்ன!'' சகாதேவனின் பதில் கேள்வியா அல்லது ஆச்சரியமா?

''என் அருமை நண்பா! என் ராஜதந்திரத்திற்கு மிகப் பெரிய சோதனை...'' கண்ணனின் பதிலில் எந்தவித பாவமும் இல்லை.

''பரந்தாமா!... பக்தர்களையும் அடியவர்களையும் சோதனை புரியும் சூட்சுமக் காரனான உனக்கா சோதனை!'' என்று ஆச்சரியப்பட்டான் மாத்ரி மைந்தன்.

''ஆமாம், சகாதேவா! பதிமூன்று வருஷங்களுக்கு முன் ஒரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதிவிரதை வீரமுழக்கம் செய்தாள்... ஞாபகமிருக்கிறதா?...''

சகாதேவனுக்கு அந்தநாள் ஞாபகம் மனத்திரையில் விரிந்து மறைந்தது.

''பாவி துச்சாதனனின் செந்நீர் அந்த பாழ் துரியோதனனின் ஆக்கை இரத்தம் மேவி, இரண்டும் கலந்து, குழல் மீதினிற் பூசி நறுநெய் குளித்தே சீவி குழல் முடிப்பேன் என்று பாஞ்சாலி சபதமிட்டாள். அதன் விளைவு இன்று யுத்தம் நடக்கின்றது... தர்மத்தின் பக்கம் நான் துணை நின்று அவள் சபதத்தின் முற்பகுதியை முடித்து விட்டேன்...''

''நன்றி கண்ணா! நாளையப் போரில் தனித்து விடப்பட்ட துரியோதனனையும் மாய்த்து விட்டால்...''

''அது நடக்குமா என்று எனக்கு சந்தேகம்தான்....''

''ஸர்வ வியாபியான நீ சந்தேக நிவாரணி. உனக்குமா சந்தேகம்?''

''இந்த இருளில் நட்டநடு நிசியில் நாடகம் ஒன்று துவங்கி விட்டது... ஆமாம்... துரியோதனனை வென்று வீழ்த்தி விடலாமென்று நினைத்த பாண்டவர்களுக்கும் பாஞ்சாலிக்கும் மிகப்பெரிய சோதனை.''

''புரியவில்லையே கண்ணா!''

''இப்பொழுது புரியாது... நீ உன் பாசறைக்குப் போய் தூங்கு...''

''வாசுதேவா!''

''ஆமாம், சகாதேவா! நீ போ.''

கௌரவப் படையைச் சார்ந்த கூடாரம். தன் உடன் பிறந்தவர்களின் மரணத்தை எண்ணி சோகமே உருவாய் வீற்றிருந்தாள் துச்சலை... காந்தாரியின் ஒரே மகள்.

அவள் முன் போய் நின்ற துவாரகாநாதன் அவளுடைய கவனத்தைத் திருப்ப தன் கையிலுள்ள புல்லாங்குழலை நழுவ விட்டான்.

குழல் விழுந்த ஒலி கேட்டு, துச்சலை முகம் நிமிர்த்தி முகுந்தனைப் பார்த்தாள்.

''துச்சலை! உன் மாமன் சகுனி மாண்டு விட்ட சோகமா இல்லை...''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''கண்ணபிரானே! எனக்கு ஆயிரம் துயரமிருக்கும். அதைப் பற்றி உனக்கு ஏன் கவலை?... இங்கே நீ ஏன்...''

''வந்தாய் என்றுதானே கேட்கப் போகிறாய்?... நான் எங்கேயும் வருவதும் இல்லை. போவதுமில்லை... எங்கும்.. எப்பொழுதும் எந்த நேரத்திலும் இருப்பவன் தான்...''

கீழே விழுந்த குழலை எடுத்து, இரு கரங்களுக்கும் நடுவே வைத்து, உருட்டிக் கொண்டே புன்முறுவல் செய்தான் உலகமளந்த பெருமான்.

''நீ சொல்வது புரிய வில்லை. துன்பத்திலாழ்ந்து அழும் பெண்ணிடம் அவள் மனம் சமாதானமடையப் பேசுவதை விட்டு விட்டு, புரியாத கருத்துக்களைக் கூறினால்..''

''அழும் குழந்தைகளுக்கு ஆதரவு அன்னை அல்லது ஆண்டவன். துரியோதனனின் சோதரியான நீ என்னை எப்படி அறிந்து கொள்ள முடியும்?... போகட்டும்... உன் அன்னை இப்பொழுது இங்கே வந்திருக்கிறாள்.''

''என்ன! என் தாயாரா?''

''ஆமாம், துச்சலை! அத்தினாபுரத்திலிருந்து குருக்ஷேத்திரம் வந்திருக்கிறாள் உன் அன்னை காந்தாரி.''

''கண்ணா! உனக்கு என் மேல் கூட கருணையா!''

''ஆமாம் பெண்ணே! எனக்கு உன்னிடம் எதற்கு விரோதம்? யாரிடமும் எனக்குப் பகை கிடையாது.''

துள்ளி எழுந்தாள் துச்சலை.

''துரியோதனனின் பாசறையில்தான் உன் தாய் இருக்கிறாள். அங்கே போய் அழாதே... உன் மாமா சகுனியின் பகடைகள் கூட அங்கேதான் இருக்கின்றன. அதை எடுத்துக் கொண்டு அருகில் இருக்கும் தடாகத்தில் எறிந்து விடு... மறக்காதே... அதன் பின் உன் தாயின் மடியில் தலை வைத்துத் துயரத்தைப் போக்கிக் கொள்... உன் அண்ணனையும் கண்குளிரப் பார்த்துக் கொள்... அவன் எந்த நிலையில் இருந்தாலும் பரவாயில்லை... தர்மம் பிழைத்து விடும்... சென்று வா... கண்ணனின் வார்த்தையை அலட்சியப் படுத்தாதே.''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓடிவிட்டாள் துச்சலை.

பதிவிரதையான காந்தாரியின் திட்டத்தை முறியடிக்கப் பரந்தாமனால் முடியாது என நன்றாக உணர்ந்த அந்த கோபாலன், துரிதகதியில் ஒரு நாடகம் நடத்த, திட்டம் போட்டதை அவனன்றி வேறு யார் அறிவார்?

''அன்பு மகனே! கோழையாகி விடாதே கௌரவகுலத் தோன்றலான நீயா மரணத்தைக் கண்டு அஞ்சுகிறாய்... என் மகனே!... உன்னை யாருமே கொல்ல முடியாது... என் சொல்படி செய்... போ... அருகாமையிலுள்ள தடாகத்தில் குளித்துவிட்டு, பிறந்த மேனியுடன் இங்கே வா. ஆடையோ, ஆபரணமோ அணியக்கூடாது. நீராடிய பின் பரிசுத்தமாக வந்துவிடு... என் ஆசிகளைப் பெற்றுக்கொள்... கவனமாக நான் சொன்னதைச் செய்... போய் வா...''

''அப்படியே தாயே!''

விரைந்து சென்றான் துரியோதனன்.

பகடைகள் சிரித்தன.

''அம்மா!... அம்மா!'' என்று அலறிக் கொண்டே பாசறைக்குள் நுழைந்தாள் துச்சலை.

காந்தாரிக்குத் தன் மகள் வந்தது அதிர்ச்சியைத் தந்தது. பூஜை வேளையில் இவள் ஏன் கரடி போல் வருகிறாள்.

''துச்சலை! இந்த வேளையில் இங்கே உனக்கென்ன வேலை? உடனே இங்கிருந்து போய் விடு... நாளை என்னைச் சந்திக்கலாம். தாமதிக்காமல் போய் விடு... ம்...'' என்று அதிகாரமாக அதட்டினாள், அத்தினாபுரத்து மகாராணி. அன்னையின் குரலின் கடுமை துச்சலையை கலங்க வைத்தது. நடுங்கவும் வைத்தது.

''சரி! போகிறேன்'' என்று கூறிவிட்டுப் புறப்படத் தயாரான துச்சலையின் கண்களில் பகடைகள் தென்பட்டன. பகடைகளைக் கையிலெடுத்துக் கொண்டே, பாசறையை விட்டு வெளியேறினாள். வெளியே...

கண்ணன் காத்திருந்தான்.

''அண்ணனைப் பார்த்தாயா?'' ஆதங்கமாகக் கேட்டான் ஆயர் குலத் தோழன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''இ... ல்.... லை...''

''பரவாயில்லை... ம்... கையிலுள்ள பகடைகளைத் தடாகத்தில் எறிந்துவிடு. போ... நேரத்தை வீணாக்காதே... ஒருவேளை... உன்...'' என்று கூறி முடிப்பதற்குள், ஓடியே போய்விட்டாள் அந்தப் பேதைப் பெண். மந்த ஹாஸத்துடன் மறைந்து விட்டான் மாயவன்.

சகுனி மாமா என்றைக்கு அத்தினாபுரம் வந்தானோ, அன்றிலிருந்து தனக்கு அண்ணனின் பாசமும் பார்வையும் கிட்டவில்லை என்று நன்குணர்ந்த அவளுக்கு பகடைகள் மேல் வெறுப்பும் ஏறியது.

அவை ஒழிந்தால்...

தடாகத்தை நோக்கி, இருளில் ஓடிய துச்சலையின் எதிரே...

வானத்து விண்மீன்கள் வீசிய மங்கிய ஒளியில்...

பிறந்த மேனியுடன் நீர்த்திவலைகள் சிரசிலிருந்து வழிந்து ஓட அண்ணன் துரியோதனனைக் கண்டாள் தங்கை துச்சலை.

அவன் கோலம் கண்டு நடுங்கினாள்... பயங்கரமாக அலறினாள்... பதட்டத்தில், கை நழுவிய பகடைகள் தரையில் வீழ்ந்தன...

வெட்கினான் வணங்காமுடி.

வனிதாமணியாகி நிற்கும் தங்கை முன், தான் இப்படி அசிங்கமான தோற்றத்தில் நிற்பதா?... அரை வினாடி சிந்தித்தான்.

அருகே வானளாவி வளர்ந்து நின்ற வாழை மரங்களிடையே மறைந்தான். முழுநீள வாழை இலையால் தன் ஆண்மையை மறைத்துக் கொண்டான்... இடுப்பிலிருந்து தொடை வரை வாழை இலையைச் சுற்றிக் கட்டிக் கொண்டு தன் மானத்தைக் காப்பாற்றிக் கொண்ட துரியோதனன் மௌனமாக வழிப்பாதையில் நடக்க முற்பட்டான்.

அவன் காலடிகளில் நசுங்குண்ட பகடைகள் சிதறுண்டன. எலும்புத் துண்டுகளால் தயாரான அவை, அவனை அசுத்தப்படுத்தின.

சிதறுண்ட பகடைத் துண்டுகள் பயங்கரமாக சிரித்தன. அதுவே அவை எழுப்பிய இறுதி ஒலி. திகைத்துப்போன துச்சலை பிரமை பிடித்தவள் போல் தன் கூடாரம் நோக்கி ஓடினாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''அம்மா!... அம்மா!'' தான் வந்திருப்பதைப் பிரகடனப்படுத்தினான் சுவேதனன்.

ஒரு வினாடி, தன் சக்தியை எல்லாம் கண்களுக்குள் ஒன்று சேர்த்துக் கொண்டு, தன் கண்கட்டை அகற்றினாள் காந்தாரி.

உச்சந்தலையிலிருந்து ஒவ்வொரு அங்கமாகப் பார்வையை செலுத்திக் கொண்டே வந்த காந்தாரி, துரியோதனன் இடையையும் தொடைகளையும் இலையொன்று மறைத்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டாள்... தீயை மிதித்தவள் போல் திகைப்புண்டாள்.

அவள் கண்பட்ட இடத்தை யாரும் அழிக்க முடியாது என எண்ணிய காந்தாரி தன் பார்வையால் மகனைக் காப்பாற்றிவிட நினைத்தாள்... ஆனால்... ஏமாந்தாள்.

தன் பார்வை படாத அருமை மகனின் தொடை... தாக்கப்பட்டால்...

பதினெட்டாம் நாள் போர்...

மாலை நெருங்கும் வேளை...

துரியோதனனின் கதையைத் தட்டி விட்டான் பீமன். உயரே எறியப்பட்ட கதையைப் பிடிக்க அரவக் கொடியோன் ஆகாயத்தை நோக்கி எம்பினான்.

அவன் பாய்ச்சலைக் கண்ட பார்த்தசாரதி, ஹுங்காரம் செய்து கொண்டே, தன் தொடைகளைப் பலமாகத் தட்டிக் கொண்டான்.

எம்பிக் குதித்துக் கதாயுதத்தைக் கைப்பற்றிய துரியோதனன், தரையில் கால்களை ஊன்றவும், பீமன் அவன் தொடையில் கதாயுதத்தால் ஓங்கி அடிக்கவும் சரியாக இருந்தது.

அலறித் துடித்து வீழ்ந்தான் பாவி துரியோதனன். அவன் உயிர் பிரிந்தது.

ஒரு பெண் சக்தி துரியோதனனின் முடிவுக்குச் சபதமிட்டது. மற்றொரு பெண் சக்தி அவன் முடிவை மாற்ற முயன்றது. மூன்றாவது பெண்சக்தி இரண்டாவது சக்தியைத் திசை திருப்பி விட்டது.

□ □ □

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# தீராத தாபம் தீர்ந்தது

அந்தரங்க ஆலோசனைக் கூடத்தில், யாருடைய வருகைக்கோ காத்திருந்தான் கம்சன். சிறைச்சாலையில் பிறந்து, நள்ளிரவிலேயே தப்பிவிட்ட தேவகியின் எட்டாவது குழந்தை எப்படியும் தன்னைப் பலி வாங்கிவிடும் என்ற பயம் அவனைச் சூழ்ந்து கொண்டிருந்தது.

பூதகி வந்தாள்...

''மதுராபுரி மன்னா! இந்த பூதகியை அழைக்கக் காரணம்...''

''உண்டு, அவசியமேற்பட்டால் உன்னைக் கூப்பிடலாம்...''

''...என்று நான் கூறியது எனக்குத் தெரியும். இப்பொழுது அத்தகைய அவசரம் வந்து விட்டதாக்கும்!''

''ஆமாம் பூதகி! என் உயிருக்கே ஆபத்து! அதுவும் ஒரு சின்னஞ்சிறிய பாலகனால்...''

அட்டகாசமாகச் சிரித்தாள் அரக்கி.

''ஆயிரக் கணக்கான யானைகளைத் தூக்கிப் பந்தாடும் வீராதிவீரன் கம்சனுக்கா இந்த பரிதாபம்!... ஒரு சிம்மத்தை ஒரு சிட்டுக் குருவி அழித்து - விட முடியாத போது ஒரு மாவீரனை பச்சிளங்குழந்தையா அழித்துவிட முடியும்.''

மறுபடியும் பயங்கரச் சிரிப்பு.

''நிறுத்து உன் சிரிப்பை. விஷயத்தைப் புரிந்து கொள்ளாமல் சிரிக்காதே.''

''சரி! சொல்...''

''என் தங்கையின் எட்டாவது சிசுதான் எனக்கு யமன்! என்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


அசரீரி அன்று சொல்லிற்று. அவளைச் சிறையில் வைத்து, அவளுக்குப் பிறந்த ஏழு குழந்தைகளையும் கொன்றுவிட்டேன்.''

''சிசுக்களைக் கொன்ற சூரன்தான்.''

''கேலி போதும்! சொல்வதைக் கேள்... இப்பொழுது எட்டாவது குழந்தை பிறந்து அதுவும் தப்பிவிட்டது.''

''எங்கே தப்பியது? எப்படி?...''

''எப்படி என்பது அவசியமில்லை, எங்கே இருக்கிறது என்று கண்டுபிடித்து விட்டேன். யாதவகுலத் தலைவன் நந்தனின் பாதுகாப்பில், அவன் மனைவி யசோதாவின் கண்காணிப்பில் வளர்கிறது.''

''அப்படியா!...ம்...''

''நீ அந்தக் குழந்தையைக் கொன்றுதின்று விடவேண்டும்.''

''முடியாது கம்சா! இப்பொழுதெல்லாம் நான் நரமாமிசம் உண்பதில்லை. அதைக் கொல்ல அங்கே நான் எப்படிப் போக முடியும்?''

''பூதகி! நீயோ மாயாவிநோதினி! உன்னால் முடியாதது எது? அழகிய ஆரணங்காக உருமாறி ஒரு யாதவப் பெண் போல் அங்கே போ. குழந்தையிடம் கொஞ்சி விளையாடு... பின்...''

''அரும்பு போன்ற பச்சிளந்தளிரைக் கொல்லமாட்டாள் இந்த பூதகி. எனக்கு வேண்டாம் பொல்லாப்பு...''

''பூதகி! அந்தக் குழந்தை யார் என்று தெரிந்தால் நீ இப்படிச் சொல்ல மாட்டாய்.''

''யார்?''

''பாற்கடலில் பள்ளி கொள்ளும் திருமால்தான் இந்தப்பாலகன். அதனால்தான்... நானே பயப்படுகிறேன்.''

''திருமாலின் மற்றொரு அவதாரமா!... உண்மையாகவா... இதோ இப்பொழுதே போகிறேன்... எத்தனை காலமாக என் மனதுள் வளர்த்த ஆசை நிறைவேறக் காலம் வந்துவிட்டது.'' மறைந்தாள் பூதகி.

மதுராபுரியில் மாயமாகிப்போன பூதகி, கோகுலத்தில் அழகு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


மயிலாய்த் தோன்றினாள்...

அவள் மனதில் யுகம் தாண்டிய காட்சிகள் தோன்றின...

இலங்கையின் வணங்காமுடி வேந்தன் இராவணனின் தங்கை சூர்ப்பனகை.

காண்போர் மயங்கிவிடும் கட்டழகி அவள். அவளுக்குக் கார்முகில் வண்ணனிடம் அதீத ஆசை. இராமனை அடைய தண்டகாரண்யத்தில் ஒரு காமநாடகமாடினாள். விளைவு... இருகாதுகளும் மூக்கும் அறுக்கப்பட்டுக் குரூபியானதுதான் மிச்சம்.

சீதை என்ற பேரழகி இராமனிடம் இருப்பதால்தானே, தன்னைக் கண்ணெடுத்துப் பார்க்காமல் உதாசீனப்படுத்தினான் அந்த ஆறடி மானிட அழகன்.

இராவணன் சீதையை அபகரித்துச் செல்ல, அதன்பின் இராம -இராவண யுத்தம் ஏற்பட்டு, இலங்கேசுவரன், உற்றார் சுற்றாருடன் ரணகளத்தில் அழிந்து போனான்.

ஆனால் யுத்தத்தையே கிளப்பிவிட்ட சூர்ப்பனகை எங்கேயோ மறைந்து விட்டாள்.

பாதாளலோகத்தில் மறைந்து விட்ட அவள் அதிரூப சுந்தரனான அயோத்யாதிபதியை மறக்கவேயில்லை. அவன்பால் உண்டான தாபம் அவளுடைய இதயத்தை வாட்டிக் கொண்டுதானிருந்தது. அயோத்யாராமனின் அகன்ற தோள்களைப்பற்றி அவனுடைய வாட்டமான உடலை அணைத்துத் தன் காம இச்சையைத் தீர்த்துக் கொள்ள முடியாத அவள் காம மோஹினி ஆனாள். காமம் அவளை விகாரப்படுத்தியது. உடல் காமத் தீயால் வெந்து கொண்டிருந்தாலும் உள்ளம் இராமனையே சதாசர்வகாலமும் எண்ணியெண்ணி ஏங்கியது. யுகம் மாறியது...

மீண்டும் இலங்கைக்கு வந்தாள் சூர்ப்பனகை. அங்கே அண்ணன் விபீடணன் அரியணையில் வீற்றிருப்பதைக் கண்டாள்.

''அண்ணா!...'' என்று அலறிக் கொண்டே அவனடியில் வீழ்ந்தாள்.

''அடிப்பாவி! நீ உயிருடனா இருக்கிறாய்! அரக்கர் குலத்தின் அழிவிற்குக் காரணமான நீ அழியவில்லையா!''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


''இல்லையே அண்ணா! காமாக்னியில் எரிந்து கொண்டிருக்கிறேன். இராமன் என்ற அந்த நரனின் உருவம் என் மனதிலிருந்து விலகவில்லையே.''

''ஸ்ரீராமனையே நினைத்துக் கொண்டிருக்கும் ஜீவனுக்கு முக்தியுண்டு. ஆனால்... நீயோ காமயோகினியாய் அவதிப்படுகிறாய்.''

''அண்ணா! எனக்காக என் ஆசைக்காக ஒரே ஒரு முறை...''

''காமப் பிசாசே நிறுத்து உன் பேச்சை. மூக்கையும் காதையும் வெட்டிய இளவல் உன் நாக்கையுமல்லவா துண்டித்திருக்கவேண்டும். விட்டு விட்டாரே...''

''அண்ணா! அதிலாவண்யமான உத்தமபுருஷனைக் காதலித்தது என் தவறா?''

''தவறுதான். என்று அவர் சீதாப்பிராட்டியின் மணாளனானாரோ, அன்றே அவரை நீ மறந்திருந்தால்... நம்குலம் அழிந்திருக்காது. நீயும், இப்படி குரூபியாய் அலைந்து கொண்டிருக்கமாட்டாய்.''

''உண்மைதான் அண்ணா! என் தவறை உணர்கிறேன். எனக்கு விமோசனமே இல்லையா?''

விநாடி நேரம் யோசித்த விபீடணன், பாசத்துடன் தங்கைக்குக் கூறினான்.

''உண்டு, திருமாலின் அவதாரமான ஸ்ரீராமன் இப்பொழுது கண்ணனாக அவதாரமெடுத்து ஆறுமாத மழலையாக யசோதாவின் மடியில் கோகுலத்தில் வளர்கிறான்...''

கோகுலத்துக்கு வந்த அழகு மயில் ஒரு யாதவப் பெண் உருவத்தில் யசோதாவை நெருங்கினாள். அந்தப் பெண் மனதில்... ''இந்த குழந்தையை மார்போடு அணைத்தால் யுகயுகமாக வளர்ந்த என் ஆசை, தாபம் எல்லாம் தீர்ந்துவிடும்.'' என்று தோன்றியது.

அந்தக் குழந்தையை எப்படித் தூக்கி அணைத்து மகிழ்வது?...

பயங்கர சொரூபத்துடன் யசோதாவின் முன் பூதகி தோன்ற... பயத்தில் அலறிக் கொண்டே யசோதா மயங்கி வீழ்ந்தாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


கண்ணனை நெருங்கினாள்... பூதகி...

பிள்ளைக் கனியமுது பூதகியைப் பார்த்து இளநகை புரிந்தது. பின் சிரிக்கவும் செய்தது.

கண்ணனை வாரி எடுத்தாள். பரந்த மார்பில் சேர்த்து அணைத்தாள். மனதிற்குள்... ராமனையே அணைத்துக் கொண்ட மகிழ்ச்சி... அவளுடைய தீராத தாபம் தீர்ந்தது போன்ற உணர்ச்சி.

''ராமா... ராமா....'' முனகினாள்.

அவள் மார்பை செம்பவழ வாயால் பற்றிக்கொண்ட குழந்தை கண்ணன், வெறிப்பிடித்தவளான பூதகியின் உதிரத்தை தாய்ப்பால் போல் உறிஞ்சி அவளுடைய பூதாகாரமான உடல்மேல் உமிழ்ந்தான்.

காம இச்சையான விஷம் வெளியேற வெளியேற ஸ்ரீராமனையே நினைத்து உருகிக்கொண்டிருந்த சூர்ப்பனகை என்ற பூதகி உயிர் நீத்தாள்.

ஜீவன் முக்தி அடைந்தது. தாரக நாம ராம மந்திரத்தின் கருணையால் அடைய முடியாததும் உண்டோ!

□ □ □

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# ஆச்ரமத்தில் அக்னிக் குஞ்சுகள்

அயோத்தியில்... அரசவைக் கூட்டத்தில்... அரசாங்க விவகாரங்களை விவாதித்துக் கொண்டிருந்தனர்.

சக்கரவர்த்தித் திருமகன் ஸ்ரீராமன் தலைமையில், நடந்த விவாதத்தில் மாமுனிவரும் குலகுருவுமான வசிஷ்டர், மாமந்திரி சுமந்திரர், மூன்று சகோதரர்கள், சிற்றரசர்கள், சேனைத்தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் இருந்தனர்.

பலதரப்பட்ட குடிமக்களும் கூடியிருந்தனர். அப்போது...

ஒருவன் அடக்கத்துடன் எழுந்து நின்று அரச சபையை வணங்கிவிட்டு...

''தலைசிறந்த அரசன் என்பதன் இலக்கணம் என்ன?'' என்று ஒரு கேள்வியைத் திடீரெனக் கேட்டான்.

''அரசனோ, அவன் மனைவியோ எந்த ஓர் அவதூறுக்கும் ஆளாகாமல் இருப்பதே அரசனின் சீரிய மாண்பு...'' என பதிலுரைத்தார் மாமந்திரி.

''அப்படியானால் நம் அரசியார் பிறன் மனையில் சிறை இருந்த..'' என்று பதட்டத்துடன் கூறிக் கொண்டிருந்த குடிமகனை சுட்டெரித்து விடுவதுபோல் வெறித்து முறைத்தான் இலக்குவன்.

வெகுண்டு எழுந்த இளவல், ''போதும் நிறுத்து உன் பேச்சை... மேற்கொண்டு ஒரு அக்ஷரம் உன்னிடமிருந்து வெளிவந்தால் உன் நாக்கை...'' என்று சீறியவாறே வாளை உறுவி விட்டான்.

''லட்சுமணா! சினத்தையடக்கு... ஜனநாயக அரசாட்சியில் எந்த ஒரு பிரஜையும் எதைப்பற்றியும் யாரைப் பற்றியும் கேட்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


உரிமையுண்டு'' என்று அமைதியாகக் கூறிய அயோத்தி மன்னன், தன் தம்பியின் கோபத்தை அடக்கினான்.

''சக்கரவர்த்திப் பெருமானே! என் வார்த்தைகள் தர்மசங்கடத்தையுண்டாக்கி விட்டதற்கு மன்னித்துவிடுங்கள்... என் மனதில் பல நாட்களாக அரித்துக்கொண்டிருந்த சந்தேகம்தான் இன்று வெளிப்படையாயிற்று...'' என்று கீச்சுக் குரலில் கூறிய அந்தக் குடிமகன் அவசர அவசரமாகச் சபையை விட்டு வெளியேறினான்.

சபை கலைந்தது.

தன் பிரஜைகளில் ஒருவன் வெளிப்படுத்திய சந்தேகம், பலருடைய மனங்களிலும் இருக்கக் கூடுமோ என எண்ணி மனம் கலங்கினார் ராஜாராமன்.

மனத் திருப்தியுடன் ராஜ சபையை விட்டு வெளியேறிய வசிட்டர், தன் குடிலுக்கு விரைந்தார்.

அங்கே...

மாறுவேடத்தைக் களைந்து விட்டு ஆடைகளை மாற்றிக் கொண்டு தன் அரண்மனைக்குப் புறப்படத் தயாராக இருந்தாள் ஊர்மிளா.

''ஊர்மிளா! உன் வேஷமும் நடிப்பும் மிகப் பிரமாதம்...'' என்று அவளைப் புகழ்ந்தார் வசிட்டர்.

''குருச்ரேஷ்டரே! அன்னைசீதா தேவிக்குப் பாதகமாகப் பேசும்படியான துர்ப்பாக்கியவதியாகி விட்டேனே நான். என்னை யார் மன்னிப்பார்கள்?'' என்று புலம்பினாள் ஊர்மிளா.

''ப்ரபஞ்சத்தின் ஜீவன் ப்ரணவம். ப்ரணவத்தின் ஸ்வரூபமான நீயே ப்ரபஞ்ச நாடகத்தில் ஓரங்கத்தை அரங்கேற்ற வேண்டுமென்பது பரம்பொருளின் ஆக்ஞை...''

''அது ஏன்? குருதேவா?''

''ராம ராஜ்யத்தில்... சக்ரவர்த்திக்கெதிராக எந்த ஒரு மானிடனும் கேள்வியை எழுப்பமாட்டான். அப்பேர்ப்பட்ட உன்னதமான அரசாட்சி... அதன் தலைவரோ உன் ஜானகி மணாளன்...''

''சலனமற்ற தடாகத்தில் கல்லை எறிந்தாகிவிட்டது. இனி நடக்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


வேண்டியது நடக்குமேயானால் நன்மைதான்.''

''ஆமாம்! மைதிலியை ஒரு குடிமகன் சந்தேகித்து விட்டானே என்ற தாபம், தசரதன் மைந்தனின் மனதை அரித்துவிடும். அதன் விளைவு...''

''நாம் எதிர்பார்ப்பது போல் நடந்தால் நாடும் பிழைக்கும், மக்களும் பிழைப்பார்கள்'' என்று சொன்ன இலக்குவனின் பத்தினி குடிலைவிட்டு நகர்ந்தாள்.

முன்னிருளில், முனிவரின் ஆச்ரமத்தை விட்டு வந்த ஊர்மிளா, தன் மஞ்சத்தில் தஞ்சமடைந்தாலும், உறக்கமின்றித் தவித்தாள்.

ஈவு, இரக்கம், தயை, தாக்ஷண்யம் எதுவுமே இல்லாதவளாகி விட்டோமே தான் என்று ஏங்கினாள்.

அண்ணல் ராமனையும் அண்ணி சீதாப் பிராட்டியையும் பிரிக்கும் படியாக ஒரு நாடகமாடி விட்டோமே எனத் தவித்தாள்.

புள்ளிகளை வைத்தவர் புருஷோத்தமர். கோல இழைகளைக் கோடிட்டவர் ஸ்ரீமந்நாராயணர். அவர் வரைந்த அவதார ஓவியத்தில் எந்த நேரத்தில் எந்த இடத்தில் என்ன வண்ணம் தீட்ட வேண்டும் என்று திட்டமிட்டவரும் அவர் தானே... இன்றைக்கு வண்ணக் கலவையை தன் மூலமாக பூசிக்கொள்ள ஏவிவிட்டவரும் அவர்தான்.

கூட வேண்டுமென ஓர் அங்கம்.

விசுவாமித்திரர் ஸ்ரீ ராமனை மிதிலா நகருக்கு அழைத்துச் சென்றார். அங்கே!

அண்ணலும் நோக்கினான் - அவளும் நோக்கினாள் - இருவரும் கூடினர். சுகவாசத்திலும், வனவாசத்திலும் இணைபிரியாமல் இருந்த ஜோடியை தாற்காலிகமாகப் பிரித்து அன்னையைச் சிறை வைத்து... அவதாரத்தின் கடமையை நிறைவேற்றியது.

அதன்பின்...

அயோத்தி நாட்டு சக்ரவர்த்தினியான சீதா... கர்ப்பமுற்றாள்... ராஜவம்ச வாரிசு வரப்போகிறது என யாவரும் குதூகலித்தனர்.

மன்னர் மகிழ்ந்தார்... மக்கள் பேரானந்தம் எய்தினர்... ஆனால்...

மண்ணிலிருந்து உதித்த மாணிக்கமான பெருந்தேவி மனம் கலங்கினாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தங்கை ஊர்மிளாவுடன், குலகுருவான ப்ரம்மரிஷி வசிட்டரை நாடி வந்தாள் ஜானகி.

''குருதேவா! வணங்குகின்றேன்.''

''மங்கள முண்டாகட்டும்!''

அமர்ந்தார்கள்.

''எல்லாவற்றையும் அறிந்த எங்கள் குரு சிரேஷ்டரே! நான் யார் என்பது தங்களுக்குத் தெரியுமல்லவா... இப்பொழுது என் நிலை என்ன என்பதும் தாங்கள் அறிந்ததே...''

''தூய்மையின் உருவமான அக்னி தேவதையே! உன்னை தன் கர்ப்பத்திலிருந்து பிரசவித்தாள் பூலோக மாதா. தூயவளே! உன் கர்ப்பத்திலிருப்பதோ நெருப்புக் கோளங்கள்...''

''அவை அயோத்தியில் ஜனித்தால் அடுத்த கணம் நாடு அழிந்துவிடும்...''

''அந்த - அழிவை எப்படித் தவிர்ப்பது!'' கருணையே வடிவான காகுத்தனின் பத்தினி கேட்டாள்.

''அது ஒரு பெரிய பிரச்சினைதான்... பூமாதேவியே உலகத்தின் அடித்தளத்தில் உன்னைப் பிரசவித்த பின் பலகாலம் மண்ணிலேயே வைத்து சீதளமாக்கிய பின்னர்தான், மிதிலாபுரி நகரின் வயல் வெளியில் வெளிக்கொணர்ந்தாள். அதே போல்தான் உன்னுடைய பிரசவமும் அதிபவித்ரமான நிலப்பரப்பில் தான் நடக்க வேண்டும்...

''சதா சர்வகாலமும் அக்னியைத் துதித்துக் கொண்டிருப்பவருமான வால்மீகி முனிவரின் ஆச்ரமத்தில் தான் உன் பிரசவம் நடக்க வேண்டும்'' என்று வசிட்டர் தீர்மானமாக வாய்மொழிந்தார்.

மின்னல் விண்ணில் நெளிந்தது. இடி ஒலித்தது, நீர்த் திவலைகள் பன்னீராய் விண்ணிலிருந்து மண்ணில் விழுந்து குளிர்ந்தது...

விண்ணும், மண்ணும், காற்றும், நீரும், நெருப்பும் வசிட்டரின் வாய்மொழியை ஆமோதித்தன. பின் மொழிவது போல் மழை பொழிந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''மாமுனிவரே! த்ரிகால ஞானியே! இடத்தைத் தேர்ந்தெடுத்து விட்டீர்கள். அங்கே அண்ணியை எப்படி அனுப்புவது?'' என்று வினாவை எழுப்பிய ஊர்மிளா மேலும் சொன்னாள்: ''ஸ்ரீராமபிரான், சீதாப்பிராட்டியை கணநேரமும் பிரியமாட்டார். பிரசவத்திற்காக ஜானகியை ஜனகருடைய அரண்மனைக்கே, அனுப்பவும் மாட்டார். பிறந்தகத்தில் கவனித்துக் கொள்வதைக் காட்டிலும் மேலாக நாங்கள் பார்த்துக் கொள்வோம் என்று முப்பெருந்தேவியர்களும் சொல்கிறார்கள்.''

''அப்படியானால் காட்சி மாற்றத்தை அரங்கேற்ற வேண்டியது தான். பாற்கடல் பெருமானே! நீயே துணை'' என வேண்டினார் வசிட்டர்.

நாடகம் நடந்தேறியது.

ஊர்மிளாவே குடிமகனாக வேடமணிந்து, கூற வேண்டிய வசனத்தை விசனத்துடன் கூறி விட்டாள்.

அன்புக் காதலியை விட, அரச கடமையையே பெரிதென மதிக்கும் இராமன் சீதையை வான்மீக ஆசிரமத்திற்கு அனுப்பிவிட எண்ணினார்.

ப்ரபஞ்ச மேடையில், இழைக்கோடுகள் திட்டமிட்ட படியே போடப்பட்டன.

அன்றிரவே... இருள் நீங்கி விடியல் தோன்றுவதற்கு முன்...

குதிரைகள் பூட்டிய ரதம் சீதாதேவியின் அந்தப்புரத்திற்கு முன் வந்து நின்றது. அதன் அருகே இறுக்கமான முகத்துடன் இராமன் நின்று கொண்டிருந்தார்.

''லக்ஷ்மணா! ஜானகியை வனத்திலுள்ள வான்மீக ஆசிரமத்தில் விட்டுவிட்டு வா'' ஆணை பிறந்தது.

''அ...ண்...ணா!'' என்று தயங்கினான் இராமனின் நிழலான லட்சுமணன்.

''அரச கட்டளையை மீறுவது தண்டனைக்குரிய குற்றம்'' கம்பீரமான குரல் இளையவனை அதிரவைத்தது. தேரின் முன்னிருக்கையில் ஏறி அமர்ந்தான்.

அந்தப்புரத்திலுள்ளிருந்த சீதை வெளியே வந்தாள். அவளை

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy 

அணைத்தபடியே ஊர்மிளா ரதத்தை நோக்கி நடந்தாள். தேர்ப்படியில் காலை வைத்து ஏறுவதற்கு முன் தன் பதியைப் பார்க்க எண்ணிய தசரதனின் மருமகள் நாலா பக்கங்களிலும் தன் பார்வையை வீசினாள். எங்கும் அவரைக் காணவில்லை.

மனதிலேயே குடியிருக்கும் தன் மணாளனை மானசீகமாகவே வணங்கிவிட்டு, தேரில் ஏறிக் கொண்டாள் மிதிலா நகரின் மங்கை.

''ஹே! அயோத்திமா நகரே! உன்னை விட்டுச் செல்கின்றேன். இனி உன் மண்ணில் என் பாதம்படுமா என்பது சந்தேகம் தான். உன் வளமைக்கும், உன் மக்களின் வளர்ச்சிக்கும், உன் புகழ்பெற்ற பேராட்சிக்கும் என் புத்திரர்களை உனக்குப் பரிசாக அனுப்பி வைக்கின்றேன். என் தாயான பூமியின் ஒரு பகுதியே! என்னை வாழ்த்தி வழி அனுப்பு... அன்று பதியின் பின்னே வனம் சென்றேன்... இன்று பதியின் பிம்பத்தை கர்ப்பத்திலும் எண்ணங்களை இதயத்திலும் சுமந்து செல்கிறேன்... காலம் வரும்போது அவரை என்னிடம் அனுப்பிவை...''

பெருமூச்சு விட்டாள் பெருந்தேவி.

ரதம் ஓடி மறைந்தது.

தேர் போன வழியையே ஒரு சில விநாடிகள் பார்த்துவிட்டுத் திரும்பிய ஊர்மிளாவின் பார்வையில் பட்டாபிராமன் தென்பட்டான். கோசலையின் மைந்தன் முகத்தில் சோகம் படர்ந்திருந்தது...

காலம் நகர்ந்தது.

வால்மீகி ரிஷியின் ஆச்ரமத்தில்...

தனியான ஒரு பர்ணசாலை. அதில் சீதை, ராமனை நினைத்துக் கொண்டே தன் பிரசவ காலத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள்.

லோக மாதாவே ஆசிரமத்துத் தாதிபோல் தோன்றி, சீதையைத் தாய்போல் பேணிப் பாதுகாத்து, சீராட்டினாள்.

காலம் வந்தது. கோதண்டம் ஆர்ப்பரித்தது... நெருப்பாகி நின்ற சீதா, அழகான இரட்டையர்களை ஈன்றெடுத்தாள்.

''ஓம்...ஓம்...ஓம்'' என ஆசிரமவாசிகள் ப்ரணவ மந்திரத்தை உச்சரித்தனர். வேத கோஷங்கள் வானத்தை எட்டின.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேதத்தின் அதிபனான ஸ்ரீ ராமன் தந்தையானார்.

ஆச்ரமத்தில் இரண்டு அக்னிக் குஞ்சுகள் அவதரித்தன... ஊர்மிளா உளம் பூரித்தாள். ஆனால்...

பிறந்த மழலைகளை, தன் கரங்களில் தூக்கி மகிழ முடியாமல் இராமன் மனதில் புழுங்கினான். பாசத்தால் பரிதவித்தான், பாவம்!

தானே தனக்கு விதித்த தண்டனை என எண்ணிய அவதாரம் மனதைத் தேற்றிக் கொண்டது.

அக்னிக் குஞ்சுகளை, லவ - குசர்களாகச் சந்திக்கும் காலத்திற்காகக் காத்திருந்தான் காகுத்தன்.

□ □ □

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# ஒரு கல் இரு கனி

அயோத்தியில் இராம பட்டாபிஷேகம் முடிந்தது. விழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் மரியாதை செய்து பரிசுகள் வழங்கி வழியனுப்பிவைத்தார் இராஜா ராமன்.

யாவரும் சென்றபின், ஜாம்பவான் ஒருவரே மிகுந்திருந்தார். அவரிடம்...

''பல யுகங்கள் கண்ட பெரியவரான உங்களுக்கு நான் என்ன பரிசு தரக்கூடும்?'' என்று ஒரு வினாவைத் தொடுத்தான் கோதண்ட ராமன்.

''மாலின் அவதாரமான மாபுருஷனே! தாங்கள் கொடுக்க வேண்டியதுமில்லை, நான் பெற்றுக் கொள்ள வேண்டியதும் ஏதுமில்லை. ஆனால்....''

''ஆதி புருஷரே! ஆனால் என்றால்... உங்கள் மனதில் ஏதோ ஓர் அபிலாஷை... இருக்கின்றது. சரிதானே?''

''ஆமாம். நீங்கள் இலங்கேஸ்வரனுடன் சமர் புரிந்ததைக் கண்ட எனக்கும் உங்களுடன் போரிட ஆசை.''

''ஜாம்பவானே! அதிசயமான ஆசைதான். அதை அடுத்த யுகத்தில் அவதாரம் புரியும் பொழுது வைத்துக்கொள்ளலாமே. இப்பொழுது எங்கும் அமைதிதான் தேவை.

துவாபரயுகம்.

திருமால் ஸ்ரீகிருஷ்ணனாக அவதாரம் செய்கிறார். திரேதாயுகத்தைக் கடந்து வந்த ஜாம்பவான், ரைவதம் மலைக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குகையில் வாழ்ந்து வருகிறார். அவருக்கு அழகே உருவெடுத்து வந்த அற்புத மடந்தையாக, ஜாம்பவதி மகளாகப் பிறந்து வாழ்கிறாள்.

துவாரகா தேசத்தை அடுத்து, பல குறுநில மன்னர்கள் பலராமனின் தலைமையில் வாழ்ந்து வருகின்ற காலத்தில்...

சத்ராஜித் என்ற குறுநில மன்னன், கடும் தவம் புரிந்து ஆதித்த 'பகவானிடமிருந்து அரும் பெரும் பொக்கிஷமான 'ச்யமந்தக' ரத்தினத்தைப் பெறுகிறான். கோடி சூரியப் பிரகாசமான அந்த அற்புத மணி, அவனுக்கு நாள் தோறும் தங்கமாகக் கொடுத்து அவனை மிகப்பெரிய செல்வந்தனாக ஆக்குகிறது.

சுயநலமே உருவான அந்தக் குறுநில மன்னன் அகங்காரம், ஆணவம், கர்வம், செறுக்கு ஆகிய மாயைகளால் தன்னிலை இழந்து தான் தோன்றியாக திரிகிறான்.

பணக்காரனைச் சுற்றி பலபேர் இருப்பது போல், சத்ராஜித்தையும் பலர் புகழ்ந்து துதிபாடி அவனுடன் நட்பு கொண்டார்கள். அவனுடைய கர்வம் மேலோங்கியது. அவனுடைய ஆணவம் அணைதாண்டி தடம் புரண்டது.

கண்ணன் ஒருவனைத் தவிர மற்ற எல்லோரும் சத்ராஜித் மன்னனை மதித்தனர்.

நாட்டு மக்கள் எல்லோரும் நந்தகோபனின் மைந்தனான மாடு மேய்க்கும் கோபாலனையே புகழ்கிறார்களே என்று அசூயைப் பட்டுக் கொண்டிருந்த சத்ராஜித்திற்கு இப்பொழுது ஒரு தன்னிறைவு ஏற்பட்டது.

சத்ராஜித் மன்னனுக்கு வெகுநாள் சென்றபின் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அவளுக்கு பாமா எனப் பெயரிட்டு அகமகிழ்ந்தான். பாமா என்பதற்கு பிரகாசம் என்று ஓர் அர்த்தம்.

அந்த சிறுபெண் வளர்ந்து வரும் காலத்திலேயே கண்ணனைப் பற்றிக் கேள்வியுற்றாள். அவன்பால் அன்பும் கொண்டாள். பாமா பருவமடைந்தபின் அவளுடைய அன்பு பிரேமையாகி காதலாய்க் கனிந்தது.

சத்ராஜித், தன்னை மதிக்காத கிருஷ்ணனை நிந்திப்பதையே தன் ஜீவ மூச்சாகக் கொண்டிருந்தான்.

அந்த கால கட்டத்தில், செல்வம் தரும் ச்யமந்தக ரத்தினத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


பொது உடமையாக்கி, சத்ராஜித்திடம் குவிந்து போன தங்கத்தை மக்களுக்கு பகிர்ந்து கொடுக்க யாதவ திலகன் யோசனை கூறியதை அவமதித்து, அவனிடம் அலட்சியமாக நடந்து கொண்டான், சத்ராஜித்.

ஒருவசந்த கால ஆரம்பத்தில்...

பல குறுநில மன்னர்களும் கிருஷ்ணனும் வேட்டையாடிக் களித்திருக்கக் கானகம் சென்றார்கள். அப்பொழுது சத்ராஜித் மன்னனின் தம்பியாகிய பிரசேதனனும் வேட்டைக்குச் செல்ல விரும்பினான்.

பிரசேதனன் வேட்டைக்குப் போகின்ற காலத்தில், தன்னை ரட்சித்துக் கொள்ள ச்யமந்தக ரத்தினம் பதித்த பொற்சங்கிலியை அணிந்து கொண்டு போனான்.

தன்னந்தனியே தனிவழி ஒன்றில் தன் குதிரைமேல் சென்று கொண்டிருந்த பிரசேதனனை ஒரு சிங்கம் தாக்கி அவனையும் அவன் குதிரையையும் கொன்று விட்டு, பிரகாசிக்கும் கல்லை மாத்திரம் வாயில் கல்விக் கொண்டு சென்று விட்டது.

வேட்டைக்குப் போன அனைவரும் நாட்டுக்குத் திரும்பிவிட்டார்கள். ஆனால் பிரசேதனன் திரும்பவில்லை.

ஓரிரு நாள்கள் காத்திருந்தபின், சத்ராஜித் மன்னன் பலராமனிடம் புகார் செய்தான்.

''துவாரகை நாட்டு மாமன்னரே! என் தம்பி 'பிரசேதனன் என்னுடைய அரிய பொக்கிஷமான ச்யமந்தக ரத்தினத்துடன் வேட்டையாடச் சென்றபொழுது, அவனை வஞ்சகமாக தாக்கிக் கொன்று விட்டு அந்த இரத்தினத்தையும் அபகரித்துக் கொண்டான் உங்கள் இளவல்.''

புகாரைக் கேட்ட பலராமன் தன் தம்பியை நோக்கினான். மந்தகாசப் புன்னகையில் புகாரை மறுத்தான் மதுசூதனன்.

''கண்ணா! உன் மேல் குற்றம் சாட்டப்பட்டிருப்பதை பொய்யென நிரூபித்து, அந்தக் கல்லை மீட்டுக் கொண்டு வரவேண்டும். இது என் ஆக்ஞை.''

வெள்ளைப் புரவி மேலேறி வனம் நோக்கிச் சென்றான் முரளீதரன். தனி வழி ஒன்றில் குதிரைக் குளம்புத் தடங்களைக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


கண்ணுற்ற கண்ணன் அந்த வழியே சென்றான். சிறிது தூரத்தில் அடர்ந்த புதர்ப் பகுதிகளின் நடுவே பிரசேதனனின் உயிரற்ற உடலையும் கண்டான்.

பிரசேதனனின் உடலுக்கருகில் சிங்கத்தின் காலடிகள் தென்பட்டன. சிங்கம் ஒன்று பிரசேதனனை அடித்துப் போட்டு விட்டு, அவன் கழுத்திலிருந்த ச்யமந்தக இரத்தின ஹாரத்தை கவ்விக் கொண்டு போயிருக்கலாம் என ஊகித்த காளிங்க மர்த்தனன் அக்காலடிகளைத் தொடர்ந்து சென்றான்.

ஒரு குகையின் வாசலில் சிங்கத்தின் உயிரற்ற உடலையும் அதன் அருகே ஒரு கரடியின் காலடிகளையும் கண்டு அந்தச் சுவடுகளைத் தொடர்ந்து மேலும் சென்றான் சுதர்சனன்.

நீண்ட தூரம் பிரயாணம் செய்தபின், ரைவதம் மலைக்குகை வாசலை அடைந்த கண்ணன், குகையினுள் சென்றான்.

குகையினுள் அதி பிரகாசமான மற்றொரு சூரியனே உதித்தது போல் மிகுந்த ஒளியுடன் ச்யமந்தகம் ஒரு மஞ்சத்தின் மேல் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது. மஞ்சத்தில் அழகையே வார்த்தெடுத்தாற் போல் ஒரு வனிதை சிலைபோல் சயனித்திருந்தாள். கண்களைக் கசக்கிக் கொண்டு ஓரிரு முறை அவளையே நோக்கின நந்தகுமாரன் அவள் ஆழ்ந்த உறக்கத்திலிருக்கிறாள் என்று தீர்மானித்து மெதுவாக, மஞ்சத்தின் மேலே தொங்கிக் கொண்டிருந்த இரத்தினத்தை எடுக்க முயற்சித்தான்.

அப்பொழுது...

''யாரடா!'' என்று கத்திக் கொண்டே ஒரு வயதான, ஆனால் வலிமை மிகுந்த கரடி ஒன்று அங்கே திடீரெனக் குதித்தது. குதித்த கரடி கண்ணனின் கையிலிருந்த இரத்தினத்தைத் தட்டிப் பறித்துக் கொள்ள...

''ஐயா, கரடியாரே! இந்தக் கல் எங்கள் நாட்டுக் குறுநில மன்னன் ஒருவனுக்குரியது. அது தங்களிடம்...''

''கார்முகில் நிறத்து வாலிபனே! கல் யாருடையது என்பது எனக்குத் தெரியாது. பிறர் செல்வத்தை அபகரிப்பது என் வழக்கமில்லை. கல்லின் மகிமை தெரியாத சிம்மம் ஒன்று அதனைச் சின்னா பின்னப் படுத்திக் கொண்டிருந்தது. அப்பொழுது அதைக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொன்று விட்டு அந்த இரத்தினத்தைக் கொண்டு வந்து என் மகள் ஜாம்பவதிக்கு பரிசாக அளித்தேன். எவரும் நுழையமுடியாத இந்த குகைக்குள் வந்திருக்கும் நீ ஒரு கள்வன்''....

''முதியவரே! நான் கள்வனல்ல. வீணாக என் மேல் சுமத்தப் பட்ட பழியை நீக்குவதற்காக இந்த இரத்தினத்தைத் தேடி வந்தேன்.''

''இருக்கலாம்! ஆனால் நீ உத்தரவு இன்றி ஒரு மங்கை சயனித்து இருக்கும் இடத்திற்கு கள்ளத் தனமாக வந்து, கல்லைக் களவாடிச் செல்ல முயன்ற உன்னை கயவன் என்று சொல்லாமல் கதிரவன் என்றா சொல்லுவது? என்னுடன் போரிட்டு வெற்றி கண்ட பின்தான் இந்தக் கல் உன்னுடையதாகும். உனக்கு வீரமிருந்தால் என்னுடன் யுத்தம் செய்ய வா!'' என்று மிகப்பயங்கரமாகக் கர்ச்சித்தது கரடி.

''கிழட்டுக் கரடியே! ஆணவத்தோடு பேசுகிற நீ என்னுடன் மோதினால் பொடிப் பொடியாகி விடுவாய். வீணாக அழிந்து போகாமல் கல்லை என்னிடம் கொடுத்து விடு!!''

''வாலிபனே! நான் யார் தெரியுமா? நான்தான் ஜாம்பவான். யுகயுகமாக வாழ்ந்துகொண்டிருக்கும் நான் திருமாலின் நண்பன். என்னை வெற்றி கண்டவர் யாருமே இல்லை.''

கிருஷ்ணனின் மனத்திரையில் ஜாம்பவானின் வேண்டுகோள் மின்னலெனப் பளிச்சிட்டது.

''ஆதிமுதல் இன்று வரை வாழும் முதியவருக்கு இத்தனை ஆணவம் இருக்கக் கூடாது.... நீங்களே சமர் புரிய அழைத்து விட்டீர்கள். நானும் தயார்... எங்கே, எந்த ஆயுதம் தாங்கி யுத்தம் புரியலாம்?''

குகைக்கு வெளியே கிருஷ்ணனும் ஜாம்பவானும் கதாயுதம் ஏந்தி இருபத்தெட்டு நாள்கள் போர் புரிந்தனர். கடைசி நாளன்று ஆயுதமேதுமின்றி இருவரும் மல்யுத்தம் செய்தனர். ஜாம்பவான் தளர்ந்து போனான். ''ஹே ராமா! ஜயராமா! பட்டாபி ராமா!'' கண்களை மூடி த்யானித்த ஜாம்பவான் தன் கண்களைத் திறந்து பார்த்த பொழுது... எதிரே....

ஆஜானுபாகுவாகக் கோதண்டராமன் காட்சி அளித்தார். இராமனைக் கண்ட ஜாம்பவான் ரகுநந்தனையே கண்டு களித்துக் கொண்டிருந்த பொழுது ரகுநந்தன், யதுநந்தனாக மாறி நின்றான்.

''ஜாம்பவான் என்ற காரணப் பெயர் கொண்ட கரடி ராஜனே! தங்கள் விருப்பம் நிறைவேறியதல்லவா?'' கேட்டான் ஜனார்த்தனன்.

''ஆம் பிரபோ! என்னை மன்னித்து என் மகள் ஜாம்பவதியையும், ச்யமந்தகத்தையும் ஏற்றுக் கொண்டு அருள் புரிய வேண்டும். நாராயணா! நின் பாதமே சரணம்.''

''கல்லையும் கன்னியையும் அளித்த கரடி ராஜனே! உன் ஜீவன் தன் யாத்திரையை முடித்து விட்டு பரமனுடன் இணையட்டும்.''

துவாரகையில்...

பலராமன் முன்னிலையில் கண்ணன் ச்யமந்தகக் கல்லை சத்ராஜித்திடம் கொடுக்க...

நாள் தோறும் நந்தனின் மைந்தனை நிந்தித்துக் கொண்டிருந்த சத்ராஜித்தின் கைகளில், கண்ணன் கைபட்ட ச்யமந்தக இரத்தினம் விழுந்த பொழுது அவன் உடல் புல்லரித்தது. உள்ளம் பூரித்தது.... மாதவனின் அருள் பெற்றதால் மாயை விலகி மனமும் குணமும் மாறின.

''ஹே கோவிந்தா! உன்னை அவமதித்து அவதூறாகப் பேசிய என்னை மன்னித்தருள்வாயாக!!''

துவாரகாநாதன் ஒரு குறும்புச் சிரிப்புடன் அவனையும் அவன் அருகில் நின்று கொண்டிருந்த பாமாவையும் நோக்கினான்.

சக்ரதாரியின் கடைக்கண் பட்டவுடன் பாமா மேலும் பிரகாசித்தாள். வசுதேவரின் மைந்தனிடம் பரிதியிடமிருந்து தான் பெற்ற அற்புத கல்லையும் தன் அருமைப் புத்திரியான பாமாவையும் ஒப்படைத்து விட்டான் சத்ராஜித்.

சத்யஸ்வரூபமான சாரங்கனின் கைத்தலம் பற்றிய பாமா, சத்யபாமாவாகி நின்றாள்.

கதிரவன் அளித்த ஒரு கல் கண்ணனுக்கு ஜாம்பவதி என்ற ஒரு கன்னிகையையும், சத்யபாமா என்ற மற்றொரு கன்னிகையையும் உறுதுணையாக்கியது.

☐ ☐ ☐

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# வீரத்தை யாசித்தவன்

ஈராறு ஆண்டுகள் வனவாசத்தை கழித்த பாண்டவர்கள் திரௌபதியுடன் விராட நாட்டில் அஞ்ஞாத வாசத்துக்காக மறைந்து போனார்கள்.

பாண்டவர்களும் பாஞ்சாலியும் மறைந்து வாழும் இடத்தை கண்டுபிடிக்க முடியாத ஒற்றர் படைத்தலைவர்கள், அரவக்கொடியோனின் கோபத்திற்கு ஆளானார்கள்.

சூதாட்டத்தில் பறித்துக் கொண்ட யுதிட்டிரனின் ராஜ்யத்தை, இழந்து விடுவோமோ என்ற பீதியில் மனம் கலங்கினான், துரியோதனன்.

வஞ்சகமே உருவெடுத்து நடமாடும் சகுனி வந்தான்.

''மா... மா!...'' என்று கர்ஜித்தான் காந்தாரி மைந்தன்.

''ஏன் அலறுகிறாய்? இப்பொழுது என்ன நடந்து விட்டது?'' என்று உருக்கமாகக் கேட்டான் காந்தாரி சோதரன்.

''பாண்டவர்கள் அடுத்த சில மாதங்களில் தங்கள் அஞ்ஞாத வாசத்தை முடித்துக் கொண்டு திரும்பி வந்து விடுவார்கள்...''

''வரட்டுமே'' என்றான் கேலியாக சகுனி.

''தருமன் தன் அரசுரிமையை திருப்பிக் கேட்டால்...'' என்று துரியோதனன் துயரம் தோய்ந்த தொனியில் கேட்டான்.

''துரியோதனா...! கேட்டால் கொடுத்து விட வேண்டுமா என்ன?''

''கொடுக்கிறோம் என்று வாக்களித்தோமே...''

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy 

''வாக்கைக் காப்பாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் நியாயவான்களுக்கும் தர்மவான்களுக்கும்தான்... ஆனால் நாம் அப்படிப்பட்டவர்களில்லையே!... அதனால் உனக்கு தர்மசங்கடமில்லை...''

''மாமா! நீ சொல்வது...''

''யானை வாயில் கரும்பு போன பின் அது திரும்பி வருமா?''

''ஆனால்... பிதாமகர், குலகுரு, ஆச்சாரியார், அமைச்சர் விதுரர் ஆகியவர்கள் என்ன சொல்வார்கள்?''

''துரியோதனா! அவர்கள் என்ன கூறுவார்கள்?...'' கலகலவென்று பலமாகச் சிரித்த சகுனி தொடர்ந்தான், ''எதுவுமே... கூற மாட்டார்கள். அன்று துருபதன் மகளை துகிலுரித்தபோது மரமாய் நின்றார்கள்... இப்பொழுதும்... ஜடங்களாய், கற்சிலைகளாய் ஸ்தம்பித்து விடுவார்கள்.''

''மாமா!... இப்பொழுது நாம் எப்படியாவது பாண்டவர்களை இனம் கண்டு பிடித்து விட்டால், மறுபடியும் அவர்களை பதிமூன்று ஆண்டுகள் காட்டிற்குத் துரத்தி விடலாமே.''

''ஆமாம்!... ஆமாம்!... அப்படி ஒரு நிபந்தனையை அன்றே கூறி இருக்கிறோம் இல்லையா?...''

''அதற்கு ஒரு யோசனை சொல்லுங்கள்...''

''அதற்கும் ஒரு வழி இருக்கிறது. கேள்!...''

சிறிது யோசித்துவிட்டு மேலும் கீழுமாக நடை போட்ட சகுனி ஆசனத்தில் அமர்ந்து கொண்டான்... ''துரியோதனா! உன்னுடன் கூடப்பிறந்த சகோதரி துச்சலையின் குமாரத்தியை யார் திருமணம் செய்து கொண்டார்கள்?''

''அர்ச்சுனனின் மகன்...''

''அல்லியின் அருமைப் புதல்வன் புலேந்திரன், உன் மருமகள் கலாந்திரியின் கணவன்...

''அவர்கள் திருமணம் சிறு வயதில் நடந்தது... இப்பொழுது கலாந்தரி பருவமடைந்து விட்ட நிலையில் தன் மணவாளனுடன் சேர வேண்டும் இல்லையா?....'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


''ஆமாம்...''

''அதில்தான் நம்முடைய திட்டம் உருவாகிறது.''

''எப்படி?''

''அல்லி தன் மருமகளை தன் நாட்டிற்கு அனுப்பி வைக்குமாறு தூது அனுப்பி இருக்கிறாள்... உன் சகோதரி ஏற்பாடும் செய்து கொண்டிருக்கிறாள்...''

''தெரியும்...''

''உன் தங்கையின் புத்திரியை, நாம் புதிதாகக் கட்டி இருக்கும் மாளிகையில் சிறைவைத்து, உன் நண்பன் கர்ணனைக் காவலுக்கு நியமித்து விடுவோம்...''

பலமாகச் சிரிக்கிறான் துரியோதனன். பின் ''அந்தச் சிறு பெண்ணை சிறை வைத்து விட்டால்,... பாண்டவர்களைக் கண்டுபிடித்து விடமுடியுமா என்ன?''

''துரி...யோ...தனா! தன் மகனின் பத்தினியை... தன் நாட்டு வருங்காலத்துப் பட்டத்து ராணியை... தன்னிடம் தகுந்த மரியாதையுடன் அனுப்பி வைக்காமல் அவளை சிறைவைத்தால்... அல்லி ராணிக்குக் கோபம் வரும்... ஆவேசத்துடன் நம் மேல் படை எடுத்து வருவாள்... கர்ணனை அவள் தோற்கடித்து கலாந்தரியை மீட்டுச் செல்ல முடியாது... அந்த நிலையில் அவளுடைய பதியான பார்த்தன், மறைந்திருக்கும் இடத்திலிருந்து வெளிப்பட்டு அவளுக்கு உதவ வருவான்...''

''மாமா!... மாமா!...'' என்று ஆர்வத்துடன் கூறிய கொடுமதியோன், கெடுமதியோன் சகுனியை ஆரத்தழுவிக் கொண்டான்.

திட்டம் நிறைவேற முதல் கட்டம் தயாராகி விட்டது.

''கர்ணா! கலாந்திரியின் காவலுக்கு உன்னையே பொறுப்பாக்குகிறேன்'' என்று துரியோதனன் ஆணவத்துடன் ஆக்ஞையிட்டான்.

''நண்பனே!... உன் ஆணை எதுவானாலும், அதனைத் தலைமேல் தாங்கி உனக்குத் தோள் கொடுப்பான் உன் உயிர்த்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


தோழனான இந்தத் தேரோட்டி மகன்... ஆனால்...''

''ஆனால்... என்ன... ஆனால்?''

''நட்பின் சிகரமான நண்பனே!... மண்ணைக்காக்க வேண்டிய மாவீரனை, பெண்ணைக் காத்து நிற்க ஏவுகிறாயே...! இது சரியா?... மாரதன் என மதிக்கப்படும் ஒரு வீரனை, வெறும் மாளிகைக்குக் காவற்காரனாக நியமனம் செய்கிறாயே... இது நியாயமா?''

''ராதேயா!... உன்னை அங்கநாட்டு மன்னனாக முடிசூட்டி மதிப்பளித்தவன் நான். மாரதன், மாவீரன் என்ற பெருமைகளைச் சேர்த்தவன்... நான்... அது மட்டுமா? என் ஆருயிர்த் தோழன் என்னும் பெரும் மதிப்பு யாருக்கு?...''

கர்ணன் மௌனமாக நின்றான்.

''கர்ணா!... இது என்னுடைய எதிர்காலத்தை நிர்ணயிக்கும் ரகசியத் திட்டம்... இதில் நான், உன்னையன்றி மற்றொருவனை நம்ப முடியுமா?... சொல்...'' என்றான் பானுமதி மணாளன்.

கர்ணனின் தன்மானத்தைத் தட்டிக்கேட்டு விட்டான் துரியோதனன். கர்ணனும் பதிலேதும் கூறாமல் அவன் ஆணைக்குக் கட்டுப்பட்டான்.

அல்லி ஆவேசமுடன் தன் சேனைத் தலைவர்களுக்கு ஆணையிட்டாள்.

ஆனால்... அவள் பெற்ற பிள்ளை, புலேந்திரனோ... அமைதியாகத் தன் அன்னையிடம் அவள் ஆத்திரத்தைத் தணித்துக் கொள்ள மன்றாடினான்.

''அம்மா!... இது என் பிரச்சினை... உன் ஆத்திரம் அறிந்துதான், கலாந்திரியின் மாமன் சதி செய்கிறான்... சதியைச் சதியால்தான் வெல்ல வேண்டும்... அவர்கள் எதையோ மனதில் வைத்துக் கொண்டு சூழ்ச்சி செய்கிறார்கள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது... போரிடாமல், அவர்கள் எண்ணத்தில் மண்ணைப் போட வழிகாண வேண்டும்.''

''புலேந்திரா!... அது எப்படி முடியும்?''

அன்னை அல்லியின் குரலில் ஆவேசம் குறைந்திருந்தாலும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


ஆதங்கம் மிகுதியாக ஒலித்தது.

''கம்சனை அழித்த கண்ணனை கலந்து ஆலோசிக்கிறேன். பின்னர் அவன் யோசனைப்படி நடந்து கொள்வோம்.''

அத்தினாபுரத்து புறநகர் வெளியில் கம்பீரமாக நின்றிருந்த மாளிகையின் முன்...

புலேந்திரன் ஓர் அந்தணனைப் போல் மாறுவேடம் தரித்து கர்ணனைக் காண வேண்டும் என்று அங்கிருந்த காவலாளியிடம் கேட்டுக் கொண்டான்.

கர்ணனும் வந்தான்.

''யாசிப்பவனுக்கு இல்லையென்று சொல்லாத அங்கதேசத்து அதிபதியே!... ஏழை அந்தணன் வணங்குகிறேன்...'' - புலேந்திரன்.

''வாலிபனே!... கொடுப்பதையே வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டு வாழும் என்னை நாடி வந்தது எதற்கு? உனக்கு என்ன வேண்டும்?''

''வாரி, வாரி வழங்கும் கொடை வள்ளலே!... கேட்பது எதுவாகயிருந்தாலும் தருவீர்களா?... கேட்டபின் முடியாது... இயலாது... என்று கூற மாட்டீர்களே?''

''என்னைப் பற்றிச் சரியாக நீ அறியாததால்தான்... சந்தேகம் உன்னை இப்படி ஒரு கேள்வியை கேட்கத் தூண்டி இருக்கும்... என்னிடம் இருப்பதெதையும்... ஏன், என் உயிரையும் கேட்டாலும் கொடுப்பேன். தைரியமாகக் கேள்...''

''கொடை வள்ளலே!... தங்களுயிரை விட மேலானது... உங்கள் வீரம்... அதுதான் எனக்குத் தேவை'' பணிவாகக் கேட்டான் புலேந்திரன்.

''வாலிபனே! பொன்னையும் பொருளையும் யாசிக்காமல் என் வீரத்தைக் கேட்கின்றாயே...! அதிசயமாகத்தான் தோன்றுகிறது. என் வீரம் உனக்கெதற்கு?''

''யாசிப்பவன் எதற்காக யாசிக்கிறான்?... ஏன் யாசிக்கிறான்... என்றெல்லாம் தெரிந்து கொண்ட பின்தான் கொடுப்பீர்களோ...?''

''அப்படியில்லை.''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''நான் கேட்பதைத் தர இயலுமா என்று சொல்லவில்லையே... முடியாதென்றால்...''

''வாலிபனே! நிறுத்து உன் பேச்சை...'' பொங்கி வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு, ''கேட்பவன் யார் எனக்கூடத் தெரிந்து கொள்ள முயலாமல், கேட்பதைக் கொடுத்துக் கொடுத்து வாழ்கின்றவன் இந்தக் கர்ணன்... என் வீரம் உனக்கே உரியது... எடுத்துச் செல்.''

வாலிபன் சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறாய்?''

''மன்னனே வீரம் என்பது உங்கள் திறன். உங்களிடம்... உடலின் அங்கம் போல் இருக்கும் தன்மை. அதை நீங்கள் கொடுத்தால் தானே நான் எடுத்துச் செல்லமுடியும்... உங்கள் தோளில் தொங்கும் வில்லையும் அம்புராத்தூளியையும் என்னிடம் கொடுங்கள்... அதுவும் மூன்றே நாழிகைதான்... பின்னர் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்.''

ஆச்சரியப்பட்ட கர்ணன், ''அதிசயமான யாசகமாய் இருக்கிறதே நீ கேட்பது... இப்பொழுதாவது காரணத்தை நான் தெரிந்து கொள்ளலாமா?'' என்று கேட்டான்.

''அங்கநாட்டு அதிபதியே!... என்னையும் என்னில் மறுபாதியான என் மனைவியையும் சேரவிடாமல் பிரித்து வைத்திருக்கும் சில துஷ்டர்களை விரட்டி அடிக்கவே உன் வில்லைக் கேட்டேன்... தம்பதியானவர்களை சுகமாக வாழவிடாமல் தடுக்கலாமா?''

கர்ணனின் மனம் தன் வாழ்வை நினைத்துக் கொண்டு உருகி ஏங்கியது. கடிமணம் செய்து கொண்டு வந்த தன் பத்தினி தன்னிடம் சேராமல் ஒதுங்கி வாழ்வதை எண்ணினான் கர்ணன்.

''வாலிபனே! நீ உன் மனைவியுடன் சேர்வதற்கு என் வில் உதவுமானால் நான் பாக்கியசாலி ஆவேன்... போ உன் காதலியை மீட்டு சுகமாய் வாழ்.''

புலேந்திரன் மாளிகைக்குள் ஓடினான். அடுத்த சில கணங்களில், கலாந்திரியுடன் கைகோர்த்துக் கொண்டு கர்ணனின் முன் வந்து நின்றான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திகைத்தான் கர்ணன்.

''வாலிபனே!'' பதறினான்.

''பதறாதீர்கள். கொடை வள்ளலே!... சதிசெய்து... என் சதியை தன் பதியுடன் சேர விடாமல் செய்த உன் நண்பனின் சதித்திட்டத்தை மற்றொரு சதியால் வெற்றி கொண்டேன். உங்கள் வில்லையும், அம்புராதூளியையும் இங்கேயே விட்டுச் செல்கிறேன்... என்னை... இல்லை எங்களை ஆசி கூறி வழி அனுப்புங்கள். நான்தான் கலாந்திரியின் பதி புலேந்திரன்... சதியை வெல்ல மதி வேண்டும்... வருகிறோம்.''

மறைந்து நின்றிருந்த ரதத்தில் கலாந்திரியுடன் ஏறிக்கொண்டு துவாரகாபுரியை நோக்கி, புரவிகளை துரிதகதியில் செல்ல விரட்டினான் புலேந்திரன்.

செய்வதறியாமல் சிலையாகிப் போய் நின்றான் கர்ணன். இந்த இளஞ்சோடிகள் சேர்ந்து சுகமாக வாழ வாழ்த்தினான் தன் மனதிற்குள்.

''கண்ணா! சதியை மதியால் வெல்ல வழி வகுத்துக் கொடுத்த வாசுதேவா! நாங்கள் வணங்குகிறோம்'' என்றான் புலேந்திரன்.

விதித்தவனை மறந்து, சதி செய்த சகுனிக்கு எந்த சக்தி தன் திட்டத்தை புரட்டி விட்டது என்று புரியவில்லை... என்றுமே அவனுக்குப் புரியப் போவதில்லை.

□ □ □

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# கைலையில் ஓர் ஊடல்

பொதிகை மலையில் பிறந்த பொருணை, மலைச் சரிவுகளில் தவழ்ந்து அருவியாய் வீழ்ந்து, மலையடிவாரத்தில் குறிஞ்சி முகப்பில் குதித்து நடை போட ஆரம்பிக்கும் இடம்தான் பாபவிநாசம்.

நதியில் நீராடிவிட்டு யோக நிஷ்டைகளை முடித்துக் கொண்டு மலை மீது ஏறத் தொடங்கினார் குறுமுனிவர். பாண தீர்த்த கரையினிலே அமைந்திருந்த பர்ண சாலைதான் அகத்தியரின் வாசஸ்தலம்.

நினைவில் பசுபதியும் நெஞ்சில் பஞ்சாட்சரமும் குடியேறி இருந்தாலும் இயற்கையை ரசித்துக் கொண்டே வேக நடை போட்டார்.

என்றுமில்லாது, இன்று இயற்கை மிக அழகாக பரிமளிக்கின்றதே என்ற எண்ணம், அவருடைய சதாசிவ சிந்தனையைச் சற்றே கலைத்தது.

வழி நெடுக, வானளாவ வளர்ந்த மருத மரங்கள் புன்னகை புரிந்தன. காட்டு மலர்கள் பூத்துக் குலுங்கி மணம் பரப்பிச் சிரித்தன.

பர்ண சாலையின் எதிரே வெண்ணிறப் பாறையொன்றில் உமா வீற்றிருந்தாள்.

''ஓஹோ! அன்னையே தங்களுடன் வந்தமர்ந்திருக்கிறாள் என்ற குதூகலம்தான், மரம், செடி, கொடிகள் யாவும் மகிழக் காரணமோ!''

''அகிலாண்டேசுவரியே! அகத்தியன் தங்கள் பாத கமலங்களில் அடிபணிந்து வணங்குகின்றேன்'' என்று கூறியபடியே தாயின் கால்களில் வீழ்ந்து வணங்கினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்னை பராசக்தி அவரைக் கடைக் கண்ணால் ஒரு பார்வை பார்த்தாள்.

மௌனம்...

''தேவியே! திருநீலகண்டனின் பத்தினியே! திருமாலின் சோதரியே! தாயே!... அம்மா!... அடியேனிடம் கோபம் கொண்டு திருவாய் மலர்ந்தருளாமல்... மௌனம் சாதித்தால்...''

''குறுமுனிவரே! உம்மிடம் எனக்கேன் கோபம்... இல்லை...''

''அப்படியானால் தங்கள் முகம் வாடியிருப்பதின்... காரணம்...''

''அகத்திலிருப்பதை முகம் பிரதிபலிப்பதைக் கண்டு கொண்டீராக்கும்...''

ஆதிபராசக்தியின் முகலாவண்யத்தை ...சஞ்சல ரேகைகள்...

மாசு படரச் செய்கின்றனவோ!

மூன்றடி உருவத்தில் கைகூப்பி நின்று கொண்டிருந்த முனிவர் 'ஆம்' என்பது போல சடை முடியை ஆட்டினார்.

''அகத்தியரே! கைலாச நாதருக்கு... பத்தினி யார்?''

''தாங்கள்தான்! இதில் என்ன சந்தேகம்!''

''பின் உங்கள் மகாதேவன், தலையில் ஒருத்தியைத் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடுகிறாரே, அது ஏன்?''

''இமயத்தில் ஜனித்த ஹேமாவதியே! சச்சிதானந்த சிவனின் ஜடா முடியில் சிக்கிக் கொண்டிருக்கும் மங்கை யாரெனத் தங்களுக்கா தெரியாது!''

உடலின் பாதியென்று என்னை இடபாகத்தில் ஏற்றுக் கொண்டவருக்கு சிரசில் எதற்காக மற்றொருத்தி?... வாஞ்சி நாதனின் வாம பாகத்திற்கு வஞ்சகமில்லையா இது? நீங்கள் புகழ் பாடும் சத், சித், ஆனந்த ஸ்வயரூபன், பசுந்தோல் அணிந்து கொண்டிருக்கும் நயவஞ்சகப் புலி.''

கௌரியின் பேச்சில் ரௌத்திரம் தாண்டவமாடியது.

''இல்லை தாயே! சச்சிதானந்த ரூபன் புலித்தோல் அணியும் பசுபதி அல்லவா!''

Public domain. Digitization Muthulakshmi Research Academy

''ஹாஸ்யமா!''

''இல்லை உண்மையைக் கூறினேன்.''

''அப்படியானால்...''

''அவசரப்படாதீர்கள் தாயே! நாங்கள் உங்கள் குழந்தைகள். அம்மையையும் அப்பனையும் ஒரு சேரக் கண்டால்தான் மனம் மகிழும்.''

''...ம்... அப்புறம்...''

''சிவத்தைப் பிரிந்து சக்தியா! சக்தியில்லாமல் சிவமா!... இல்லையே... சிவம் சக்தியிலடங்கியது... சக்தி சிவத்தில் அடங்கியது... இரண்டும் பிரிக்க முடியாதவை... அது அணு... அணுதான் பரம்பொருள்... ப்ரம்மம்...''

''முனிவரே! போதும் உம் தத்துவ உபதேசம். நான் தொடுத்த வினாவிற்கு விடை சொல்லும்.''

''எந்த வினா? எப்பொழுது கேட்டீர்கள்?''

''என் புருஷார்த்தத்தை என்னுடன் பகிர்ந்து கொள்ளும் மங்கை யார்? எனக்கு அவள் போட்டியா?''

''உலக மாதாவான தங்களுக்குப் போட்டியாக யாராவது இருக்க முடியுமா என்ன?... ஒரு வினாடி... உங்களை நீங்களே உணர்ந்தால்... மனதில் உண்டான உறுத்தல் மறைந்து விடும்.''

''தாய்க்கு யோசனை கூறும் தவ சிரேஷ்டரே! என் வினாவிற்கு விடை தெரிந்தால் கூறும். இல்லையென்றால் இமயத்திற்கே போய்விடும்...'' காத்யாயனியின் குரலில் கடுமை வெளிப்பட்டது.

''அம்மா! அகத்தியனின் வாயால் அதைக் கேட்க வேண்டுமென்ற உங்கள் அவா... அடியேனின் பாக்கியம்... சொல்கிறேன்...

''...முன்னொரு காலத்தில் வருணனின் கருணை இல்லாமல் பூமி வறண்டு போயிற்று. நீர்வளமில்லாமல் நிலம் வெப்பத்தால் வெடித்தது. ஜீவராசிகள் அன்ன ஆகாரமின்றி அவதியுற்றன.''

''வானத்தில் பறக்கும் புள்ளினங்கள்... காடுகளில்... நீர்ச் சுனைகளில் வாழ்ந்து திரியும் மிருகங்கள், ஊர்வனங்கள்... மரங்கள், செடி கொடிகள், பூச்சிகள் புழுக்கள்... பூண்டுகள்... மனித இனம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாவும் மடியத் தொடங்கின...''

''அந்த அகோரங்களைக் காண மனமில்லாத அரசனொருவன் நீரை நிலத்திற்குக் கொண்டு வர பயங்கரமான தவம் செய்தான். கருணாகரியும் கல்யாணியுமான ஆதிபராசக்தியை வேண்டி மகோன்னதமான தவம் செய்தான்.''

''இரு கரங்களையும் விண்ணை நோக்கி உயர்த்தி, இரு கண்களையும் இமயத்தின் முடிமுனையிலிருத்தி, ஊசி முனையில் நின்று கொண்டு அவன் நிஷ்டையில் ஆழ்ந்திருந்தான்... ஆண்டுகள் கடைக் கண் பார்வையில் அவன் பிரயத்தனப் படாமலேயே காலங்கள் வந்து போயின.''

''சர்வேசுவரி வெள்ளிப் பனி மலையில் உறங்கி விட்டாளென எண்ணினான் அந்தக் கோமகன். காருண்ய மூர்த்தமான புவனேசுவரியின் அநுக்ரகத்தைப் பெற ஆத்மத்யாகம் செய்ய முற்பட்டான் அந்த தவசீ...''

''பரமேசுவரியின் பார்வையில் அவனுடைய தவ முயற்சி பட்டது.''

''அவ்வளவுதான்...''

''உயிர்களை ரட்சிக்கும் உலகமாதாவின் உள்ளம் நெகிழ்ந்து, அன்னையின் கருணை அலை கடலாய், பிரளயமாய் விண்ணைக் கிழித்து மண்ணில் பெருகியது...''

''பிரளயமாய் பொங்கி வரும் நீர் வேகத்தை, நிலம் தாங்குமா என்று நடுங்கிய அந்தத் தவயோகி, அளவுக்குட்பட்ட அன்னையின் கருணையை வேண்டி ஐயனிடம் முறையிட...''

''கைலாசபதி தன் விரிசடையில் நீர்ப் பிரவாகத்தைத் தாங்கி, நிதான கதியில் நிலத்தை நோக்கி அமைதியாக ஓடச் செய்தார்.''

''கங்கோத்ரியில் நோன்பு கொண்டிருந்த ஜான்வி என்ற பராசக்தியான தங்களிடமிருந்து ஜனித்த செல்லக் குழந்தைதான் கங்கை. தங்கள் குழந்தையைத் தான் சிரசில் வைத்துக் கூத்தாடுகிறார் ஆடலரசன்...''

''காளையின் மீது அமர்ந்த நமச்சிவாயனும் நாராயணியும், தவயோகியை கடாட்சித்து, அவனுக்கு பகீரதன் என்ற பெயரையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


சூட்டினார்கள்...''

''பகீரதனுக்கு அருள்பாவித்ததால் பாகீரதி என்ற நாமம் பெற்றவளே...''

''குறுமுனிவரே! தாய், தன் தனயனின் வாய் மூலம் கதை கேட்கும் பொழுது தன்னை மறந்து மகிழ்கிறாள்.''

மகேசுவரன் குரல் கேட்டு, உமா அவருடன் இணைகிறாள்.

உமா மகேசுவரனைத் தரிசனம் செய்த அகத்தியர், ''என் இருப்பிடம் வந்து காட்சியளித்து ஆட்கொள்ளும் பரம்பொருளே! சிவசக்தியே! அம்மையப்பா! நின் கருணையே கருணை!''

''அகத்தியரே என் சஞ்சலத்தை அகற்றி மனதை தெளிவு படுத்திய இந்த இடத்தில் ஓடும் பொருணை நதி என்றும் தெளிந்தே இருக்கும்.''

தென் முனையில் தெள்ளத் தெளிந்த நீருடன் நடை போடுகிறாள் பொருணை.

□ □ □

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# அக்னி தந்த அம்மன்

பாஞ்சால தேசத்தின் தென் கிழக்குப் பகுதியில் காம்பில்ய வனம் என்ற எல்லைக்குக் காவலாக ஒரு தளபதி இருந்தான். அவன் கும்ப கூடன்.

மலைவாழ் இனத்தைச் சேர்ந்த கும்பகூடன் தன் சமூகத்திற்குத் தலைவன்.

துருபத ராஜனின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன். அந்த அடர்ந்த காட்டுப் பகுதிக்கு அவனை சிற்றரசனாகவே நியமித்திருந்தான் துருபதன்.

வானளாவிய நெடிய மரங்களின் நெருக்கமும், புதர்போல வளர்ந்திருந்த செடி கொடிகளும் காம்பில்ய வனத்தை மிக பயங்கரமான காடாக்கியிருந்தது. கொடிய வனவிலங்குகள் மலைப் பாம்புகள் ஆகியவை கணக்கிலடங்காதவை. பரதக் கண்டத்திலேயே இப்பகுதியில்தான் சிங்கங்கள் உள்ளன.

கடுமையான கோடை. ஒரு நள்ளிரவில் மூங்கிற்புதர்களில் நெருப்பு பற்றிக் கொண்டு வனாந்திரமே எரியத் தொடங்கியது.

இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்த அக்னி தன் தீக் கொழுந்துகளை வானை நோக்கி படரவிட்டுக் கொண்டிருந்தன... பஞ்சபூதங்களில், விண்ணும் அக்னியும் விளையாடிக் கொண்டார்கள்.

காம்பில்ய வனம் செய்த புண்ணியம், வாயுதேவன் மற்ற இருவர்களுடன் சேராமல் எங்கேயோ பதுங்கி விட்டான். காற்றின் கூட்டுறவு இல்லாததால் அக்னியின் ஆக்ரோஷம் மெல்ல மெல்ல அடங்கிப் போயிற்று.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy 

தீயால் விளைந்த நாசத்தைக் கண்கூடாகப் பார்க்கச் சென்றான் கும்பகூடன்.

போகும் வழியில்...

ஓர் அருவிக் கரையில் ஒரு பெண் குழந்தை அழுது கொண்டிருந்தது... 'சந்தன இலைகளைப் பரப்பி அதன் மேல் சின்னஞ் சிறிய குழந்தையை விட்டுவிட்டு அதன் தாய் புனலில் நீராடிக் கொண்டிருப்பாள்' என எண்ணிய கும்பகூடன் சுற்று முற்றும் பார்த்தான்... தேடினான்... கூவிக் குரல் கொடுத்தான்... மலை சிகரங்கள் அவன் குரலை எதிரொலித்தனவே தவிர... மற்ற எந்த ஓர் ஒலியுமில்லை...

கார்முகில் வண்ணத்தில், காலையும், கையையும் மாறி மாறி உதைத்துக் கொண்டு முனகிக் கொண்டிருந்த அந்த சிசுவை வாரி எடுத்து தன் மார்புடன் அணைத்துக் கொண்டான்.

பல ஆண்டுகள் குழந்தைப் பேறு இல்லாத கும்பகூடன் தம்பதியர் அந்த சிசுவை வனம் கொடுத்த வரப்பிரசாதம் என்று எண்ணி மகிழ்ந்தனர்.

கார்முகிலி எனப் பெயர் சூட்டி அப்பெண் குழந்தையை வளர்த்தான் கும்பகூடன்...

காட்டின் அடர்ந்த பகுதிகளிலும், அருவிக் கரைகளிலும், சிகரங்களிலும் ஆடி ஓடி விளையாடி வளர்ந்தாள் கார்முகிலி. சிங்கம், புலி ஆகிய விலங்குகள் அவளுடைய விளையாட்டுத் தோழிகள்.

காலம் சென்றது.

கார்முகிலி கன்னியானாள். இயற்கை எழில் அவளை ஓர் அற்புத மடந்தையாக ரஸவாதம் செய்திருந்தது.

ஒளிரும் கரிய மேனி... ஒயிலான கருவிழிகள்... நீல கண்டனை நினைவூட்டும் கழுத்து... பளபளக்கும் கன்னக் கதுப்புகள்... மலரத் துடிக்கும் பெரிய தாமரை மொட்டுகள் போன்ற மார்பகங்கள்... பிறை நிலாவின் நெளிவைப் போன்ற இடைகள்... திரட்சியான தொடைகள்... அல்லி தண்டைப் போன்ற கால்கள்...

அவள் துள்ளி ஓடும் பொழுது மானினங்கள் மயங்கி நிற்கும்... அவள் அருவிப் புனலில் நீராடும் பொழுது மீனினங்கள் நீந்த மறந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போய் ஒதுங்கிவிடும்...

அவளுடைய அழகு... மூவுலகத்திலும் பேசப்பட்டது. இளைஞர்களின் உள்ளங்களில் அது இசையாய்ப் பரிணமித்தது...

கந்தர்வர்கள், யட்சர்கள், மானிடர்கள், ஆகியவர்களின் கனவுக் கன்னியாகத் திகழ்ந்தாள் கார்முகிலி.

கும்பகூடனிடம் பெண் கேட்டு ஆயிரமாயிரம் பேர்கள் வந்தார்கள்...

கும்பகூடன் தன் மகளிடம் பேசினான்...

''பெண்ணே! உனக்குத் திருமணம் செய்து வைக்க என் மனம் துடிக்கின்றது'' என்றான் கும்பகூடன்.

''தந்தையே திருமணத்திற்குத் தருணம் வரவில்லையே'' பதிலளித்தாள் அன்புமகள்.

''முகிலி! இளமைக் காலத்தின் வாசலில் வளமாய் வளர்ந்து நிற்கும் நேரம்தான் இல்லறத்திற்கு ஏற்ற தருணம்.''

''தருணம் சரியாக இருக்கலாம்... ஆனால் என் மனதிற்கினியவனை என்னால் காண முடியவில்லையே...''

''உன் மனதிற்கினியவன் யார் என்று சொல்... அவன் எங்கிருந்தாலும் தேடிப் பிடித்துக் கொண்டு வருகிறேன்.''

''தேவாதி தேவர்களுக்குத் தலைவனான இந்திரனின் அம்சமும்... மனோபலமும், தேக பலமும் மிகுந்த வாயு தேவனின் அம்சமும், தர்மத்தின் தேவதையான யம தர்மராஜனின் அம்சமும்... ஆயுள் வேதத்திற்கு அதிகாரணமான அஸ்வினி சோதர்களின் அம்சமும்... எவனிடம் ஒருங்கிணைந்திருக்கின்றதோ... அவனே என்னை மாலையிட்டுக் கைப்பிடிக்கத் தகுந்தவன்...''

''கார்முகிலி! கற்பனையில் கூட காண முடியாத ஒரு புருஷனை உன் மனத்தில் ஓவியமாய்த் தீட்டி வைத்திருக்கிறாயே...! ம்... அப்படி ஒருவன்...''

''பூவுலகில் இல்லாமற் போனால் பிரம்மனைக் கொண்டு அவனைச் சிருஷ்டிக்க வேண்டுவேன்.''

கும்பகூடன் மனம் குழம்பிப் போய், தன் வழியே போனான்...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விதி வினோதமாய் தன் பெண் மனதில் ஒரு வானவில்லை ஏற்படுத்தி விட்டதே என மனம் வருந்தினான்.

நீரோட்டத்தின் வேகத்தை எதிர் நீச்சல் போட்டுப் பின்னே உதைத்துதைத்துக் தள்ளி முன்னேறி வந்து குளித்த குதூகலத்தில் கரையேறினாள் கார்முகிலி...

முகத்தில் படர்ந்திருந்த நீர்த் துளிகளைத் துடைத்து எறிந்துவிட்டு... கண்களை அகல விரித்தாள்...

எதிரே...

சிவந்த மேனியுடைய ஒருவன் சிரித்த முகத்துடன் கம்பீரமாக நின்று கொண்டு தன் ஓரக்கண்ணால் அவளுடைய அழகை விழுங்கி விடுபவன் போல் பார்த்துக் கொண்டிருந்தான்.

நனைந்த ஆடையால் தன்னை மறைத்துக் கொண்ட கார்முகிலி, அவனை அலட்சியமாக பார்த்துக் கேட்டாள்.

''யார் நீ? மரியாதை தெரியாத மந்த புத்தியுடையவனே... இங்கே உனக்கு என்ன வேலை...?''

''ஆரணங்கே! நான் ஆதவனின் மைந்தன். என் பெயர் கிரண்குமார்... உன் எழிலில் மோகம் கொண்டவன்... உன் மீது மையல் கொண்டவன்...''

''மூடனே! நிறுத்து உன் பேற்றலை. நீ ஆதவனின் மகனானாலும், மாதவன் மகனானாலும் சரி... முறை தவறி என்னை நாடி வந்தது அநாகரீகம்... மரியாதையாக ஓடிப் போய்விடு...''

''அழகானவளுக்குக் கர்வமிருப்பது இயற்கைதான். ஆனால்... இத்தனை ஆணவம் ஆகாது கன்னியே! உன்னை அடைந்தே தீருவது என்ற எண்ணத்தில் வந்த நான் உன்னை அபகரித்துக் கொண்டு போக நினைத்தால்... அதைத் தடுக்க இந்தக் காட்டில் யாருமே இல்லை. புரிந்து கொள்.''

''ஓஹோ அப்படி ஓர் எண்ணம் உனக்கிருக்கின்றதா என்ன?... எங்கே உன் வீரத்தைப் பார்த்து விடுகிறேன்...'' என்று சொல்லியவாறே, கார்முகிலி ஒரு சங்கேத ஒலி எழுப்பினாள்...

அடுத்த வினாடியே...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதினாறு சிங்கங்கள், முப்பத்திரண்டு புலிகள், நாற்பத்தெட்டு யானைகள் மற்றும் பல வனவிலங்குகள் அந்த வாலிபனைச் சூழ்ந்து கொண்டன.

''வாலிபனே! உடலில் வலிமையும், புத்தி சாமர்த்தியமும் இருந்தால், விலங்குகளைச் சமாளித்து விட்டு என்னைத் தூக்கிச் செல்...'' என்று பலமாகச் சிரித்தவள், ஏதோ சைகை செய்தாள்...

உறுமிக் கொண்டே புலிகள் அவன் மேலே பாய, சிங்கங்கள் பிடறிகளை உசுப்பிக் கொண்டே அவனைத் தாக்க...

தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஆகாயத்தில் மாயமாய் மறைந்தான் அவன்.

கார்முகிலி சிந்தித்தாள்...

கனியையும், கன்னியையும் யாரும் நிம்மதியாக இருக்க விடமாட்டார்கள்...

தன் மனதிலேற்பட்ட லட்சிய புருஷனை எங்கே காண்பது? எப்படித் தேடுவது? அப்படியான ஒருவன் பிறந்திருக்கிறானா...?

பிறந்திருக்காவிடில்... பிரமனிடம் அப்படிப்பட்ட ஒருவனை சிருட்டிக்கச் சொல்லி வேண்டிக் கொள்ள வேண்டும்...

சிந்தனை செயலாகியது.

அதே அருவிக் கரையில் பிரமனை நோக்கி கடுந்தவம் புரிந்தாள் கார்முகிலி.

பன்னிரெண்டு ராசிகளையும் பன்னிரு முறை வலம் வந்து விட்டான் சூரியன்.

கானகத்தில் தவமியற்றும் கன்னிகையின் முன் பிரமன் தோன்றினான்... அவன் கார்முகிலியின் கண்முன் தோன்றுவதற்கு முன் கலைமகள், தவயோகினியின் நாவில் குடி கொண்டாள்...

''பிரம்ம தேவனே! அடியவள் தவத்திற்கிணங்கி தரிசனம் தந்தமைக்கு நன்றி... தங்கள் தாள் பணிந்து வணங்குகிறேன்...''

''பெண்ணே! உனக்கு என்ன வேண்டும்? கேள்... தருகிறேன்...''

''சிருஷ்டிகர்த்தாவே! என் மனதில் ஓர் ஆசை... இந்திரன், வாயு, தர்மதேவன், ஆயுள் வேத விற்பன்ன அஸ்வினி குமாரர்கள் ஆகிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஐவர்களின் அம்சங்களைக்கொண்ட...'' சிறிது தடுமாற்றம்... நாக்கு வறண்ட மாதிரி ஓர் உறுத்தல்... எச்சிலை விழுங்கி சமாளித்து பின் தொடர்ந்தாள் கார்முகிலி...

''ஐவரின் அம்சம் கொண்ட ஐவர்கள், என்னை ஒருங்கிணைந்து திருமணம் செய்து கொள்ள அருள வேண்டும்...''

''அப்படியே ஆகுக...''

நான்முகன் மறைந்தான்...

பிரமன் அளித்த வரத்தை மறுபடியும் தன் மனதிற்குள் எண்ணியவள் சட்டெனத் தன் தவறை உணர்ந்தாள்...

ஐவர்கள் ஒருங்கிணைந்து ஒருவனை என கேட்பதற்குப் பதிலாக... ஐவர்கள் என்னை ஒருங்கிணைந்து மணக்க வேண்டும் என கேட்டுத் தவறு செய்து விட்டோமே என்று வெட்கினாள், நங்கை.

தவம் செய்த இடத்திற்கு முன்னால் அக்னி குண்டம் தயார் செய்து அதனுள் குதித்துத் தன்னையே அழித்துக் கொண்டாள்.

ஆத்திரத்தில் தன்னையே அழித்துக் கொண்ட அந்த வனதேவதையை...

தனக்குள்ளேயே பாதுகாப்பாக வைத்துக் கொண்ட அக்னிதேவன் தகுந்த காலத்திற்காகக் காத்திருந்தான்.

**பா**ஞ்சால நாட்டு மன்னன் நடத்திய வேள்வியின் முடிவில்...

கார்முகிலியை, கிருஷ்ணை என்ற பெண்ணாக யாக குண்டலத்திலிருந்து வெளிக் கொண்டு வந்து, துருபதனிடம் ஒப்படைத்தான் அக்னிதேவன்.

தன்னை போரில் வெற்றி கண்ட அருச்சுனனை மாலையிடத் தனக்கு ஒரு மகள் வேண்டுமென யாகம் செய்த துருபதனுக்கு மகளானாள் கிருஷ்ணை.

துருபதனின் மகளானதால் திரௌபதி எனவும், பாஞ்சால நாட்டு இளவரசியானதால் பாஞ்சாலி எனவும் அழைக்கப் பெற்றாள் கார்முகிலி.

சுயம்வரப் போட்டியில்...

Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுழலும், இயந்திரத்தின் ஒரே த்வாரத்தின் வழியே அம்பு எய்து, ஐந்து முறைகள் லட்சியத்தை அடித்த அருச்சுனன் கழுத்தில் மாலையிட்டாள் திரௌபதி.

அரக்கு மாளிகையிலிருந்து தப்பிய பாண்டவர்கள், அந்தண வேடத்தில் தங்கள் அன்னை குந்தியுடன் ஏகசக்ரபுரம் என்ற கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருந்த சமயம், தங்களுக்குள் ஓர் நிபந்தனையை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

அதன் பிரகாரம்...

தங்களில் யார் ஒருவருக்கோ அல்லது எல்லோருக்குமோ எது கிடைத்தாலும் சம பங்கு போட்டுக் கொள்வது என பிரதிக்ஞை செய்து கொண்டார்கள்.

சுக துக்கங்களில் ஐவரும் பிரியாமல் ஒன்றுபட்டு வாழவேண்டுமென தாய் கூறிய வாக்கைக் காப்பாற்ற அவர்கள் செய்த ஏற்பாட்டின் படி...

தர்மதேவனின் புத்திரனான யுதிட்டிரனுக்கும், வாயு தேவன் மகனான பீமனுக்கும், இந்திர குமாரனான அருச்சுனனுக்கும், அசுவினி குமாரர்களின் மைந்தர்களான நகுல, சகாதேவனுக்கும் பத்தினியாள் பாஞ்சாலி... கார்முகிலியின் மனதிலேற்பட்ட அபிலாஷை, அவள் எண்ணியவாறு நிறைவேறாமற் போனாலும், ஏதோ ஒரு விதத்தில் பூர்த்தியாயிற்று.

திரௌபதி ஐவரின் பத்தினியானாலும் அவளை, பஞ்சகன்னிகைகளில் ஒருத்தியாகவும், ஏழு பதிவிரதைகளில் ஒருத்தியாகவும் அகிலம் புகழ்ந்து வணங்குகின்றது...

அன்றும்... இன்றும்...

□ □ □

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# சங்கு ஒன்று கண்டேன்

நங்கூரம் போட்டு கடலில் நிறுத்தப்பட்டிருந்த புந்தியஜனா என்ற நாவாய், அலைகளின் மோதலில் அசைந்தாடிக் கொண்டிருந்தது.

ப்ரபாஸ துறைமுக நகரங்களில் தன் வாணிப விவகாரங்களை முடித்து விட்டு கப்பலுக்கு வந்து சேர்ந்தான் பாஞ்சஜனன் என்ற அந்த நாவாயின் அதிபதி. அடிமைகள் பலரை வேலைக்கு அமர்த்தி அவர்களை ஈவிரக்கமின்றி அடித்து துன்புறுத்தி வேலை வாங்கும் தளபதி அவன்.

அன்று சித்திரைமாத பௌர்ணமி.

விண்மீன்களின் கண் சிமிட்டல்களுக்கிடையே, வானத்தின் உச்சியில் பவனி வந்து கொண்டிருந்த வெண்ணிலா, நிலப்பரப்பையும் நீர்ப்பரப்பையும் ஒளிமயமாக்கிக் கொண்டே அதிகமாகச் சிரித்துக் கொண்டிருந்தது.

ஆமாம், தன் குலத்திலுதித்த கண்ணனைக் கடற்கரையில் கண்ட சந்திரன், வழக்கத்தைவிட அதிகமாகப் புன்முறுவல் பூத்ததில் அதிசயமில்லைதான்.

ப்ரபாஸ தீர்த்தம் என்ற நகரத்தில் தன் மாணாக்கர்களுடன் முகாமிட்டிருந்தார் குருதேவர் ஸந்திபாநி. அவருடைய சீடர்களில் கண்ணனும், பலராமனும், உத்தவனும் இருந்தார்கள்.

கம்ஸனை வதம் புரிந்து, வடமதுரையை மீட்ட பின்னர் வசுதேவன் தன் மைந்தனான வாசுதேவனை ஸந்திபாநியின் உலாவரும் வித்யா பீடத்தில் குரு குலவாசம் புரிய சேர்த்திருந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சித்திர எழிலுடன் காட்சியளித்து அந்த நள்ளிரவில், குருவுடன் கண்ணன் கடற்கரையில் ஒரு பாறையின் மேல் அமர்ந்திருந்தான்.

குருவின் பிரத்யேக அன்புக்குப் பாத்திரமானவனாகி விட்டான் கிருஷ்ணன்.

கண்கொட்டாமல் நீலக்கடலின் விளிம்பையே நோக்கிக் கொண்டிருந்த ஆசார்யனின் முகத்தில் துயரம் படர்ந்திருப்பதைப் பார்த்த யதுகுல திலகன் திடுக்கிட்டான்... குருவின் சோகத்தை அறிந்து கொள்ள முற்பட்டான்.

நெஞ்சகத்தில் தேங்கியிருந்த சோகம், வார்த்தைத் தொடராக வெளிவந்தது...

''கடந்த சித்திரா பௌர்ணமியன்று என்னுடைய அருமைச் செல்வன் புனர்தத்தனை, பாஞ்சஜனன் என்ற கொடியவன் கடத்திக் கொண்டு போய்விட்டான்... அதோ தெரிகின்றதே ஒரு கப்பல், அதில் தான் என் மகன் எங்கேயோ போய்விட்டான். புத்திரனைப் பிரிந்ததிலிருந்து என் மனம் நிலையில்லாமல் இந்த அலைகளைப்போல் தத்தளிக்கிறது...''

''குருதேவா! கவலையை விட்டொழியுங்கள்... கண்ணனிடம் கூறிவிட்டீர்களல்லவா... இனி அது என் பொறுப்பு... உங்கள் புத்திரன் புனர்தத்தன், அகிலத்தில் எந்த மூலையிலிருந்தாலும் அவனைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்து உங்களிடம் சேர்ப்பது என் கடமை'' என்று சூளுரைத்தான் கிரிதர கோபாலன்.

''கண்ணா! வேண்டாம்... வீணாக நீயும் அக்கொடியவனிடம் சிக்கிக் கொள்ள வேண்டாம்... என் விதி என்னோடு போகட்டும்... வீண் முயற்சி விபரீதமாகி விநாசத்தை உண்டாக்கி விடலாம்...''

''குருதேவா என் முயற்சி வீணாகாது. உங்கள் மகனை மீட்டுத் தருவதே என் குரு தட்சிணை... என்னை குருகுல பந்தத்திலிருந்து விடுவித்து, ஆசி கூறுங்கள்...''

''காளிங்கனை அழித்த கண்ணா! வெற்றி பெறுவாயாக... ஜய விஜயீ பவ:''

ஆசார்யனின் ஆசியுடனும், ஆருயிர்த் தோழன் உத்தவனுடனும், ஆழ்கடலில் நீந்தி, புந்நியஜனக் கப்பலை நெருங்கினான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நந்தகோபனின் குமாரன்.

கப்பலின் மேல்தளத்திலிருந்து கடலடிக்குப் பாய்ச்சப் பட்டிருந்த நங்கூரத்தின் சங்கிலியில் தொத்தி ஏறி, மேல் தளத்திற்கு வந்தார்கள், கிருஷ்ணனும், உத்தவனும்.

கப்பலின் முகப்பில், வயது முதிர்ந்த ஆனால் வலிமை உதிராத, மாலுமியொருவன் அமர்ந்திருந்தான். வானை அண்ணாந்து பார்த்துவிட்டு, நங்கூரத்தை அகற்ற ஆணை இட்டான். நாவாய் நகரத் தயாரானது. திசை திருப்பி கப்பலையோட்டிச் செல்லும் திருவையைச் சுற்றிவிட்டு, துடுப்புப் போடுபவர்களுக்கு உத்திரவு போட்டான்...

நகரத் தொடங்கிய நாவாய், கடலைக் கிழித்துக் கொண்டு வேக கதியில் ஓடத் தொடங்கியது.

அப்பொழுதுதான்... தன்னருகே இரு சிறுவர்கள் நிற்பதைக் கவனித்தான் பிக்ரு என்ற அந்த மாலுமி.

''யாரடா, நீங்கள்?... எப்படியடா கப்பலுக்குள் வந்தீர்கள்?... திருட்டுப் பயல்களா மரியாதையாய் நிசத்தைச் சொல்...'' அதட்டினான் பிக்ரு.

முதியவரை நோக்கி முறுவலித்தான் முகுந்தன்... அவர் பக்கம் சென்று அவரைத் தொட்டான் ஆயர்பாடி பாலன்.

''தாத்தா! உங்க கப்பல் மிகவும் அழகாக இருக்கிறது... கப்பலை யோட்டும் உங்கள் கரங்கள்தான் எத்தனை திடமாக இருக்கின்றன... லாவகமாக இயந்திரத்தை நீங்கள் இயக்கியதைக் கண்டால், உங்களை முதியவர் என்று சொல்லமாட்டார்கள்... நரை படர்ந்த முடி... ஆனால் திறமை கொண்ட பிடி... தாத்தா...'' குழிவிழுந்த கன்னங்கள் சிரிப்பை உதிர்க்க, குழைந்து, குழைந்து புகழ்ந்தான், புல்லாங் குழலில் இசையமுதம் அளிக்கும் யசோதா பாலன்.

''பசப்பாகப் பேசி என்னை ஏமாற்ற முடியாது. மரியாதையாக கடலில் குதித்துத் திரும்பிப் போங்கள்... எங்கள் தலைவன் உங்களைப் பார்த்தால்...''

''தாத்தா! எங்களுடைய அருமைப் பாட்டனாரே! குதித்துத் திரும்பி போகவா நாங்கள் வந்தோம்... எங்களையும் உங்கள் பேரனாக நினைத்துக் கொள்ளுங்கள்...''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிக்ருவின் முகவாயைப் பிடித்துக் கொண்டு கொஞ்சல் மொழியில் கெஞ்சினான், வாசுதேவன்.

கிருஷ்ணனின் வாய்மொழி கேட்ட கிழ மாலுமி, அவர்களை வாஞ்சையுடன் அணைத்துக் கொண்டான்.

வேகமாய் ஓடிக் கொண்டிருந்தது புந்நிய ஜனா என்ற கப்பல்.

மறுநாள் நடுப்பகல்.

நாவாயின் மையத்திலிருந்து அறைக் கதவுகள் திறக்கப்பட்டன. கப்பலின் அதிபதி, பாஞ்சஜனன் தோன்றினான்.

கறுத்தமேனி, பெருத்த உடல். இரும்புத் தூண்கள் போன்ற கால்கள், ஏஃகால் செய்யப்பட்ட கைகள். அகன்ற மார்பு, பரந்த தோள்கள்... தோளில், தோல்பட்டையில் ஊஞ்சலாடிக் கொண்டிருந்த சங்கு... வெளிறிப் போன தாமரைப் பூவின் வண்ணத்தில் சங்கு, கதிரவனொளியில் பளபளத்தது...

பிக்ருவின் பின்புறமாய் நின்று கொண்டிருந்த தேவகி பாலனுக்கு, அந்த சங்கின் மேல் அதீத ஆசையுண்டாயிற்று.

தடித்த உதடுகளில் சங்கைப் பதிய வைத்தூதினான் தளபதி... சங்கிலிருந்து ஜனித்த ஒலி மென்மையாய் பண்ணிசை பரப்பியது... கேட்டவர் பணியும் ஓர் அற்புத நாதம்.

சங்கொலி கேட்டவுடன், கப்பலிலுள்ள அனைவரும் மேல் தளத்திற்கு வந்து முழங்காலிட்டு அடிபணிந்து வணங்கினார்கள், அடித்தளத்தில் துடுப்புகள் போடும் அடிமைகளைத் தவிர.

பாஞ்சஜனன் அவர்கள் வணக்கத்தை ஏற்றுக் கொண்டு, தன் வலக்கரத்தை உயரே தூக்கி ஆசி கூறினான்.

பிரதான மாலுமியான பிக்ரு, சிறுவர்களிருவரையும் அதிபதியின் முன் நிறுத்தி அறிமுகம் செய்து, அவர்கள் கப்பலுக்கு வந்தது எப்படி எனக் கூறினான். நீல நிறத்துப் பாலகனையும், சிவந்த நிறத்துச் சிறுவனையும் கூர்ந்து நோக்கிய பாஞ்சஜனன், சினங் கொண்டு சீறாமல் கள்ளச் சிரிப்பொன்றைச் சிதறவிட்டான்.

நாகலோகத்தில் இவ்விருவரையும் விற்றால், நிறைய பொற்காசுகளும் பரிசுகளும் கிடைக்குமென்று எண்ணலானான், ஏழ்கடல் சென்று வாணிபம் செய்யும் பாஞ்சஜனன். பின்னர்...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''பிக்ரு! இருவரும் என் விருந்தாளிகளாக என் அறையில் என்னுடன் தங்கட்டும்'' என்றான் உரத்த குரலில்.

நீல வண்ணக் கண்ணன் இரண்டு அடிகள் முன் வந்து, கையை நீட்டி வணக்கம் கூறி விட்டுச் சொன்னான்.

''அதிபதியின் அதிதிகளாய்த் தங்க அழைத்த உங்கள் கருணைக்கு என் நன்றி... உழைக்காமல் உண்பது கூடாது என்பது எங்கள் கோட்பாடு. தர்மமும் அதுவே. சொகுசாய், சோம்பேறியாய்த் திரிந்து வாழ்வது உடலை வளர்க்கும். உள்ளத்தை அரித்துவிடும்... எங்களாலியன்ற சின்னச் சின்ன வேலைகளைச் செய்ய அனுமதி தாருங்கள். வேலைக்கேற்ற கூலியாக ஆகாரமும் நீரும் அளியுங்கள். அதுவே போதும்...''

கார்முகில் வண்ணனின் பேச்சில் கட்டுண்டு திகைத்து நின்றான் கப்பல் தலைவன்.

''பிக்ரு! இவர்கள் வெப்பத்தால் வாடாமலும், வேலைப் பளுவால் சோர்வடையாமலும் கவனித்துக் கொள்...'' என்று ஆக்ஞையிட்டான்.

பின்னர் தன் மெய்காப்பாளர்களை நோக்கி, புருவங்களை உயர்த்தினான்.

ஹுக்கு, ஹுல்லு என்று இரண்டு கறுத்த தடியன்கள் தளபதியின் முன் வந்து தலை சாய்த்து வணங்கினார்கள்.

''கொண்டு வா குற்றவாளியை'' கர்ச்சித்தான் பாஞ்சஜனன்.

ரட்டு என்ற தச்சுத் தொழிலாளியை தரதரவென்று இழுத்து வந்து தலைவனின் தாளடியில் தள்ளினான், ஹுக்கு. ரட்டுவிற்கு இருபது வயது. இளைஞன்.

குற்றம் என்ன செய்தான் என்ற விசாரணை கிடையாது... குற்றவாளி என முத்திரை குத்திவிட்டால், தண்டனை உண்டு.

''ஹுக்கு! ஆறு கசையடிகள்''

நீண்ட சவுக்கால் ஆறுமுறை ரட்டுவை, ஹுக்கு அடித்தான்... உடலின் கவசமான தோல் வார் வாராகக் கிழிந்து உதிரம் கொப்புளித்து வெளிவர, தளத்தின் மேல் விழுந்தான், ரட்டு. அந்த தச்சுத் தொழிலாளியை அலட்சியமாக இழுத்துக் கொண்டே போய் ஒரு மூளையில் போட்டான் ஹுல்லு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாஞ்சஜனன் தன் இருப்பிடம் போன பின் எல்லோரும் தங்கள் தங்கள் வேலையில் கவனம் செலுத்தினார்கள்.

அன்றிரவு...

கார்மேகங்கள் மதிவொளிக்குத் திரை போட்டன. கப்பல் தளத்தில் இருள்.

அன்றைய பகலில் நடந்த கோரமான காட்சி, கோகுலகிருஷ்ணனின் உள்ளத்தை துடிதுடிக்க வைத்தது. அடிபட்டு அனாதரவாய்க் கிடக்கும் ரட்டுவின் உருவம் மனதில் ஊசலாடியது.

பிக்ருவின் பேரனான குக்குராவின் உதவியுடன், ரணத்திற்கு மருந்தை பெற்று, தன் இரவு ஆகாரத்தையும் நீரையும் கையிலேந்திக் கொண்டு, முனகிக் கொண்டிருக்கும் ரட்டுவிடம் போனான் கிருஷ்ணன்.

ரட்டுவின் ரணங்களுக்குக் களிம்பைப் போட்டுத் தடவிக் கொடுத்தான். நீரருந்தச் சொல்லி உபசரித்தான். உணவை ஊட்டினான். தாயைப்போல், தனக்குப் பரிவு காட்டும் தயாளனின் தாள்களைப் பற்றிக் கொண்டான் தச்சுத் தொழிலாளி ரட்டு. பின் மெதுவாக உறங்கிப் போனான்... தூங்கிக் கொண்டிருப்பவனை மிருதுவாகத் தடவிக் கொண்டிருந்தான் கண்ணன்.

மேகங்கள் மோதி, மின்னல் சிதறியது...

மின்னலொளியில் கப்பலின் மூலையில் நடப்பதைக் கண்டுவிட்டான் ஹுக்கு என்ற மெய் காப்பாளன்.

சட்டெனப் பாய்ந்து, நீலநிறச் சிறுவனை தன் நீண்ட கைகளால் தூக்கி, மரக் கூண்டில் அடைத்து விட்டான். கப்பலின் சிறைக் கூண்டு அது. தச்சுத் தொழிலாளிக்கு களிம்பு தடவி ஆதரவளித்து, கப்பலின் சட்டத்தை மீறிய குற்றவாளியைத் தான் பிடித்துவிட்ட மனநிறைவுடன் மறைந்து போனான் ஹுக்கு.

நடந்ததை அறிந்த உத்தவன், பிக்ரு, குக்குரா மூவரும் செய்வதறியாது திகைத்தனர்.

சிறிது நேரம் ஓய்வெடுத்து உறங்கிய ரட்டுவும், உத்தவனும் மரக் கூண்டிலடைப்பட்டிருக்கும் கண்ணனின் முன் வந்தனர்.

கூண்டின் மரப் பட்டையை உடைத்து வெளிவந்தான் கண்ணன். உடைத்த பட்டையை மராமத்து செய்து சீராக்கினான் ரட்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மறுநாள் நடுப்பகல்.

பாஞ்சஜனனின் முன் வணங்கிய ஹுக்கு முந்தைய இரவில் நடந்ததை விவரித்தான்.

''கொண்டு வா அந்த துஷ்டச் சிறுவனை'' ஆணையிட்டான் அதிபதி.

மரக் கூண்டையே தள்ளிக் கொண்டு வந்தார்கள் ஹுக்குவும், ஹுல்லுவும்.

உள்ளே சிறுவன் இல்லை. கூண்டைச் சுற்றிவந்து சோதித்தான் ஹுக்கு. ஒரு இடத்திலும் சேதமில்லை. தாழ் போட்டு பூட்டியதும் அப்படியே இருந்தது.

''முரட்டுத் தடியனே! எங்கே அந்தச் சிறுவன்?'' உறுமினான் தளபதி.

ஹுக்குவுக்கு கைகால்கள் உதறலெடுக்க பயந்து நடுநடுங்கினான்.

எங்கிருந்தோ காற்று ஊளையிட்டது.

மாயமாய் மறைந்துவிட்ட சிறுவன் துஷ்ட தேவதையின் ஆளோ என்று பீதியடைந்தான் ஹுக்கு.

கப்பலின் முகப்பிலிருந்த ஒரு மரப் பெட்டியின் மேல் ஏறி நின்று கலகலவெனச் சிரித்தான் வடமதுரை இளவல்.

சிறுவனை இழுத்து வந்தான் ஹுல்லு.

தண்டனையாக மூன்று முறை கசையடி கொடுக்க ஆணையிட்டான்.

கண்ணனைப் பார்க்கவே பயந்து நடுங்கிக் கொண்டிருந்த ஹுக்கு, மயங்கி தரையில் வீழ்ந்தான். நடுங்கிக் கொண்டிருந்த கையிலிருந்து கசை நழுவியது.

தன் சகோதரனைக் கண்ட ஹுல்லுவும் நடுங்கிப் போய் மயங்கி வீழ்ந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சவுக்கைத் தன்கையில் எடுத்துக் கொண்டான் பாஞ்சஜனன்.

கசையால் அடிப்பதற்கு ஒரு தனித்திறன் வேண்டும். பயிற்சியற்ற பாஞ்சஜனன் சாட்டையை ஓங்கி கண்ணனின் மேல் வீசினான்.

சாட்டையின் நுனியை லாவகமாகப் பிடித்து சுண்டி இழுத்தான், மாடுகள் மேய்த்துப் பழக்கமான சிறுவன்.

தடாலென வீழ்ந்தான் பாஞ்சஜனன்... கசையை இழுத்துக் கொண்டான் கண்ணன்.

கசையின் கைப்பிடியை இறுக்கமாகப் பற்றிக் கொண்ட, வாசுதேவன் வானை நோக்கி கசையை நீள விட்டு சொடுக்கினான். தொடர்ந்து பாஞ்சஜனனை அடித்தான்... அலறித்துடித்தான் அதிபதி... சுண்டிச் சுண்டி பலமுறை அடித்தான் நீலவண்ணச் சிறுவன்.

கண் விழி பிதுங்கக் கதறினான் கப்பல் தளபதி...

பாய்ந்து வந்த கண்ணன், பாஞ்சஜனனின் மேல் கிடந்த சங்கை தோல்பட்டையுடன் உறுவி எடுத்துக் கொண்டான்... பின்னர், பாஞ்சஜனனின் பரந்த மார்பில் ஒரு காலை ஊன்றி, சங்கநாதம் செய்து தன் வெற்றியை, தர்மத்தின் வெற்றியை பறை சாற்றினான்.

சங்கொலி கேட்ட ஹூக்குவும், ஹூல்லுவும் சட்டென எழுந்தார்கள்.

இருகைகளையும் நீட்டி முழங்காலிட்டு கிருஷ்ணனை வணங்கினார்கள். பாஞ்ச ஜனனைத் தூக்கிக் கடலில் எறிந்தார்கள்.

''உத்தவா! நேற்று சங்கு ஒன்று கண்டேன்... இன்று அதைக் கொண்டேன்... பாஞ்சஜனனின் நினைவாக இதற்கு பாஞ்சசன்யம் என நாமகரணம் செய்கிறேன்'' என்று கூறிய நந்தகுமாரன் சங்கநாதம் எழுப்பினான்.

பாஞ்சஜன்யத்திலிருந்து எழும்பிய சங்கநாதம், கடலலைகளின் மேல் தவழ்ந்து விண்ணிலும், மண்ணிலும் எதிரொலித்தது... ஆம்... அதர்மங்களை அழித்து, தர்மத்தை நிலைநாட்ட சாக்ஷாத் பரந்தாமன் கிளம்பிவிட்டான் என பறைசாற்றியது பாஞ்சஜன்யம்.

□ □ □

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# குரு பக்தி

''கண்ணா!... உன்னிடம் நான் சில சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளலாம் என நினைக்கிறேன்...'' என்று பீடிகை போட்டான் சகாதேவன்.

''சகாதேவா! என்னைக் கேலி செய்ய வேண்டுமென்று எத்தனை நாளாகத் திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறாய்?... உனக்கும் சந்தேகமா?'' என்று எதிர்க் கேள்வி கேட்டான் யதுகுல மாதவன்.

''இல்லை, கண்ணா! உன்னைக் கேலி செய்ய நான் எண்ணுவேனா?... ம்... எல்லாம் தெரிந்தவன் என்று என்னை யாவரும் பாராட்டுவது உன் ஆசியால்தானே... நான் மிகவும் சாதாரணப்பட்ட மனிதன்தானே... எனக்கும் சந்தேகம் வரலாமில்லையா?'' என்று பணிவுடன் கூறிய சகாதேவன், கண்ணனின் கால்களில் வீழ்ந்து வணங்கினான்.

''மாத்ரி மைந்தா! முக்காலங்களையும் அறியும் ஆற்றல் படைத்த உனக்கு எதைப்பற்றிய சந்தேகம்...''

''வாசுதேவா! ஆச்சார்ய பக்தியில் மிகச்சிறந்தவன் யார்?''

''ஆச்சார்யனின் விருப்பத்தை அறிந்து அவர் மனம் கோணாமல் எவன் நடந்து கொள்கின்றானோ அவன்தான் சிறந்த சீடன்.''

''உண்மைதான்... இந்த கால கட்டத்தில் அப்படியான சீடன் யார்?''

''சகாதேவா! உன் வினா மிகவும் தர்மசங்கடமானது. நியாயமான பதிலைக் கூறினால் ஒரு சிலருக்குக் கோபம் வரும்... வேறுசிலர் மனக்கஷ்டமடைவார்கள்... எதையாவது நான் கூறப்போக...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனத்தாங்கல் ஏற்படும்...''

''தர்மத்தைக் காப்பாற்ற அவதாரம் செய்த புருஷோத்தமனுக்கா தர்ம சங்கடம்...'' கலகலவென்று சிரித்தான் சகாதேவன்.

''ஆமாம்! சகாதேவா! அவதாரம் செய்கின்ற ஆதிமூலத்திற்கும் அப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் ஏற்பட்டு வருகின்றன. முந்தைய என் அவதாரங்களில் எனக்கு அப்படியான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டதுண்டு... அதனால் நான் தர்ம சங்கடமான நிலையில் மாட்டிக் கொண்டு தத்தளித்திருக்கின்றேன்... அப்பொழுதெல்லாம் என் தீர்ப்புகளை மற்றவர்கள் விமர்சனம் செய்திருக்கிறார்கள்...''

''பாற்கடலில் பள்ளி கொண்ட பரம்பொருளே! உங்களுடைய நடவடிக்கைகள் யாவும் ஓர் அற்புதமான, அதீதமான தர்மத்திற்குள் அடங்கியவை. அவை சாதாரண மானிடர்களால் புரிந்து கொள்ள முடியாதவை. ஞான முதிர்ச்சி அற்றவர்கள் தங்கள் தங்கள் மனப் போக்கில் விமர்சனம் செய்யலாம்... ஆனால் அவை நியாயமற்றவை... பரமாத்மாவை பூரணமாக அறிந்த ஜீவாத்மா யார்?... கண்ணா! நான் கேட்ட கேள்வி...''

''பதிலுரைக்கத்தான் வேண்டுமா?''

''கட்டாயமாக பதில் தேவை.''

''யாரிடமிருந்தும் தப்பித்துக் கொள்ள என்னால் முடியும்... தெரியுமில்லையா?''

''நன்றாகத் தெரியும் நந்தகுமாரா!... ஆனால் இந்த சகாதேவனிடமிருந்து நீங்கள் தப்பவே முடியாது!''

''ஓ ஹோ! அப்படியான ஓர் அகந்தையா உனக்கு?''

''அகந்தையுமில்லை அகங்காரமுமில்லை, பிரபு!... நிழலை ஏமாற்ற நிஜத்தால் முடியுமா? மனசாட்சியிடமிருந்து தப்பித்துக் கொள்ள, மாதவனால் கூட முடியுமா என்ன?''

''சரி!... சரி!... உன் வினாவிற்கு விடை கூறுகிறேன்...''

''தன்யனானேன்.''

''சகாதேவா! குரு என்பவர் யார்?''

''வித்தைகளைச் சொல்லிக் கொடுப்பவர், சாஸ்திரங்களைப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
புரியவைத்து அதன்படி நடக்க வழிகாட்டுபவர்...''

''குருவின் ஸ்தானம் எது?''

''தெய்வத்திற்கு அடுத்த ஸ்தானம்... ஏன் தெய்வத்திற்குச் சமமான ஸ்தானம் என்று சொன்னாலும் தவறில்லை... அன்னையையும் பிதாவையும் விட மேலான ஸ்தானம்...''

''ஏன் அப்படி?''

''பெற்றெடுத்த தாய், தகப்பனாரைத்தான் காட்டுகிறாள். தந்தை ஆச்சார்யனைத்தான் காட்டுகிறார்... ஆச்சார்யனோ... அறிவை வளர்த்து, ஞானோபதேசம் செய்து, தர்மங்களைப் போதித்து, அதன் வழி நடத்தும் வாழ்விற்கு பாதை அமைத்து வழிகாட்டியாகவும் வழித்துணையாகவும் நின்று... ஆண்டவனைக் காட்டுகின்றார்... ஜீவன் முக்தி பெற குரு அவசியம். அதனால் தான் அவருக்கு உன்னத ஸ்தானம்.''

''அப்படியான குருவிடம் பூரணமான பக்தியுள்ளவன் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு சாதாரணப்பட்ட ஏழை வேடுவன்... அவன் தன் குரு பக்தியால் என் உள்ளத்தைத் தொட்டுவிட்டவன்...''

''யார் அவன்?''

''ஏகலைவன்.''

''கட்டை விரலை வெட்டி ஆச்சார்யர் துரோணருக்குக் குரு தட்சிணையாக அளித்தானே, அந்த வேடுவனா?''

''ஆமாம்! அவனேதான்... சகாதேவா! ஆச்சரியமாக இருக்கிறதா என் பதில்...''

''இல்லை, கண்ணா!... ஆனால்...''

''திகைப்பாக இருக்கிறதில்லையா?''

''ஆமாம்...''

''கிருஷ்ணா!...'' திடீரென்று உரத்த குரலில் அலறிக் கொண்டே ஓடி வந்தான் அருச்சுனன்.

அவன் வந்த வேகத்தையும், அவன் முகத்தில் பொங்கிய சினத்தையும், ஆங்காரமாக அவன் அலறியதையும் கண்ட கண்ணன்...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மந்தஹாசப் புன்னகையுடன், சகாதேவனைப் பார்த்தான்.

''சகாதேவா! சில நேரங்களில் சில உண்மைகள், சில மனிதர்களைத் துன்பமடையச் செய்து, சினங்கொள்ளவும் வைக்கிறது.''

''அதற்காக உண்மைகளைக் கூறாமலிருக்க முடியுமா என்ன?'' என்று சகாதேவன் கண்ணனை நோக்கிக் கூறினான்.

சகாதேவன் உரைத்த மொழியைக் கேட்ட பார்த்தன் சட்டெனச் சீறினான்.

''தம்பி! என்ன உண்மையைக் கண்டு விட்டாய்?... என்னை இழிவாகக் கூற உனக்கு என்ன தைரியம்?''

''அண்ணா! உலகளந்த உத்தமன் திருவாயிலிருந்து வெளிப்பட்ட உண்மையைக் கேட்டேன்... கண்டேன்...''

''போறும் நிறுத்து. கேவலம் ஓர் ஏழை வேடன்... அவன் என்னைவிட உயர்ந்தவன் என்று கிருஷ்ணன் சொல்லிவிட்டால்... அது நிஜமாகிவிடுமா... இல்லை நியாயமாகி விடுமா?'' கோபத்தில் உடல் பதறக் கேட்டான் சுபத்ரா மணாளன்.

''பார்த்தா! ஏன் பதறுகிறாய்?'' என்று கேட்டான் பார்த்தசாரதி.

''கிருஷ்ணா! உன் பேச்சைக் கேட்டு பதறாமல்... பணிந்து போகவா முடியும்?''

''பணிந்து போவது பண்பு... பதறுவது பண்பற்றது என்பர்.''

''கிருஷ்ணா! உன் உயிர்த் தோழனான என்னை விட, நீ கூறிய அந்த வேடுவன் எந்த விதத்தில் உயர்ந்தவன், சிறந்தவன்?''

''பல விதத்தில் ஏகலைவன் உன்னைக் காட்டிலும் சிறந்தவன். நீ என் உயிர்த்தோழன் என்பதால்... உண்மை மாறி விடுமா என்ன?''

''உதாரணத்திற்கு...''

''வீரத்தில், பொறுமையில், பண்பில், பவ்யத்தில், பக்தியில்... அடுக்கிக்கொண்டே போகலாம்... அசூயையில் உன் மனம் வேதனைப் படும்...''

''கிருஷ்ணா! வில்லுக்கு விஜயன் என்று நீயே சொல்லி இருக்கிறாய்... சூதாட்டத்தில் அரசுரிமையை இழந்தபின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொறுமையாக பதிமூன்று ஆண்டுகள் இருக்கவில்லையா? பெரியவர்களிடமும் தவயோகிகளிடமும் பவ்யமாகவும் பணிவாகவும் நான் நடந்து கொண்டிருக்கிறேன்... ஆச்சார்யர் துரோணரிடமும் மிகுந்த மரியாதையுடன்தான் நடந்து கொண்டிருக்கிறேன்.''

''பல்குனா! நீ பகர்வதைக் கேட்கும் பொழுது எனக்கு ஒன்று நிதர்சனமாகத் தெரிய வருகிறது... தன்னைப்பற்றி தானே பேசுவது எப்படி சரியான தீர்ப்பாகும்?... மற்றவர்கள் கூறுவதுதான் உத்தமமான விமர்சனம்... தம்பட்டம் அடித்துக் கொள்வது வெறும் அகங்காரம்... ஏதோ என் சிற்றறிவுக்குத் தோன்றியதைக் கூறிவிட்டேன்... தவறானால் நட்பின் காரணமாக...''

கிருஷ்ணன் பேசி முடிக்கும் முன், விஜயன் கண்ணனின் காலடிகளில் வீழ்ந்தான்.

''கண்ணா! அண்ணன் அருச்சுனன் ஆத்திரத்தில் நிலை தடுமாறி பேசியதை மன்னித்து மறந்து விட்டு, வேடுவ வீரனான ஏகலைவனின் குரு பக்தியைப் பற்றி கூறுமாறு விண்ணப்பித்துக் கொள்கிறேன்...'' என்று தாழ்மையுடன் கேட்டுக் கொண்டான் சகாதேவன்.

''ஆமாம்! கண்ணா! என் செயலுக்கும் சொல்லுக்கும் மன்னித்து அருள வேண்டும்.''

''அர்ஜ்ஜுனா! அடக்கம் அறிவாளிகளின் கேடயம்... ஏகலைவனின் குரு பக்திக்கு ஈடு இணையாகச் சொல்ல வேறு எவரும் இதுவரை பிறக்கவில்லை... இனிமேலும் ஜனிக்கப் போவதுமில்லை...''

''கண்ணா! நீயே கூறி விட்டால்... பின் எப்படி, எவன், எக்காலத்தில் எங்கே ஜனிக்கப் போகிறான்... ச்ரேஷ்டமான ஏகலைவனின் குரு பக்தியை திருவாய் மலர்ந்து மொழிய வேண்டும் கண்ணா!'' என்றான் சகாதேவன்.

''துரோணர், துருபதனால் அவமதிக்கப்பட்ட பின், அஸ்தினாபுரத்திற்குப் பிழைப்பைத் தேடி வந்தார். அவரை உங்களுக்கு ஆச்சார்யனாக நியமித்தார் பிதாமகர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''கௌரவ குல இளவரசர்களைத் தவிர வேறு எவரையும் சீடனாக ஏற்றுக்கொள்ளக் கூடாது என்ற வாக்குறுதியை துரோணரிடம் பெற்றுக் கொண்ட பின்னரே, அவரை உங்களுக்கும், துரியோதனாதியர்களுக்கும் ஆசானாக ஆக்கினார்...

''அந்த காலகட்டத்தில் வேடுவச் சிறுவன் ஒருவன் துரோணரை அண்டி வில்வித்தையைக் கற்பிக்குமாறு பிரார்த்தித்தான். அவனை மாணாக்கனாக ஏற்க மறுத்துவிட்டார் துரோணர்... ஆனால் அவன் அவரையே மானசீகமாக குருவாய் மனதில் பிரதிஷ்டை செய்து கொண்டும், அவரையே பிரதிமையாக மண்ணில் வடிவாக்கியும் ஆராதித்து, வில்வித்தையைக் கற்றான்.

''எதிர்பாராத ஒரு சமயத்தில், வில்வித்தையில் தனக்கு நிகர் யாருமில்லை என்ற மமதையுடன் காண்டீபன் ஒரு பட்சியை, பறக்கும் நிலையில் அம்பு எய்து வீழ்த்த முயன்றான்... பறந்து சென்ற பட்சியும் அம்பால் தாக்கப்பட்டு மாண்டு வீழ்ந்தது... வெற்றிக் களிப்பில், வீழ்ந்த பட்சியை நோக்கி ஓடிய விஜயன், அங்கே அந்த வேடுவனைக் கண்டு திகைத்தான்... அம்பால் மாண்ட பட்சியையும், அம்பையும் கைகளில் ஏந்திநின்ற ஏகலைவன், அர்ச்சுனனைக் கண்டு 'ஐயா! இந்தப் பட்சியை வீழ்த்தி மாய்த்தவன் நான். அதற்கு அத்தாட்சி அதன் உடம்பில் எய்யப்பட்ட அம்பு என் இலச்சினையைக் கொண்டது' என்று சாத்வீகமாகக் கூறிவிட்டுத் தன் வழியே போனான்.

''அவனை யாரென இனம் கண்டு, அவனுக்கு யார் குரு என அறிந்து கொண்ட அருச்சுனன் அசூயையால் துரோணரைத் தூண்டிவிட்டு, ஏகலைவனின் வலது கட்டை விரலை குரு தட்சிணையாகக் கேட்டு வாங்கிவர வேண்டினான்.

''துரோணரும் ஏகலைவனிடம் அவ்வாறே கேட்டார். குருவின் விருப்பப்படி அவர் கேட்ட பொருளை உடனே அவருக்கு அர்ப்பணித்தான் அந்த வேடன்... கட்டை விரல் இல்லாமல், தான் இத்தனை காலம் சிரத்தையுடன் கற்ற வித்தை பயனற்று வீணாகிவிடுமே என அவன் சிந்திக்கவில்லை... குருவிடம் கொண்ட பக்தி, அவன் சுயநலத்தை எண்ணவிடாமல்... பக்தியின் உன்னத நிலையில் ஆச்சார்யனின் மனதை திருப்தி செய்தான். அவன் பக்திதான் உண்மையான பக்தி'' என்று கூறி முடித்தான் கண்ணபிரான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சகாதேவனும், பார்த்தனும் அசையாமல் வியந்து போய் நின்றார்கள்.

''அருச்சுனா! ஏகலைவன் ஒரு கணநேரம், தன் வித்தையைப் பெரிதென எண்ணியிருந்தால்... அவன் உன்னைவிட தாழ்ந்தவனாகி இருப்பான்... வித்தையை விட குருவே பிரதானம் என்பது அவன் கோட்பாடாகியிருந்தது. குருவிற்குப் பின்தான், அவரால் கற்பிக்கப்படும் வித்தை என்ற பேரறிவு, அவன் உணர்வில் ஊறிப் போயிருந்திருக்க வேண்டும்... அதனால்தான் அவனால் உயிருக்கும் மேலான வலதுகைக் கட்டைவிரலைக் காணிக்கையாக சமர்ப்பணிக்க முடிந்தது...''

தனக்கு தேரோட்டிய கண்ணனின் மொழி கேட்ட தனஞ்செயன், தலைகுனிந்து நின்றான்...

''சகாதேவா! உனக்கு மற்றும் ஒரு செய்தியையும் சொல்கிறேன் கேள். கட்டை விரலை இழந்த ஏகலைவன் தன் நித்யப்படி வாழ்வுக்கு உணவின்றி வாடிப்போனான்... துயரத்தின் எல்லையிலும் துரோணரின் துரோகச் செயலை அவன் தனக்குக் கிடைத்த பெரும் பேறு என்று எண்ணி எண்ணி மகிழ்ந்தான்... ஆச்சார்ய பக்தியே ஆண்டவன் பக்தி என்ற நியதிக்கேற்றவாறு, நான் ஏகலைவனைச் சந்தித்து அவனுக்கு புதிய பாடம் ஒன்றினைக் கற்றுக் கொடுத்து, அவன் ஆகாரத்திற்கு வழி செய்தேன்.''

''அது என்ன?'' ஆச்சரியத்துடன் கேட்டான் குந்தி புத்திரன்.

''கட்டைவிரலின்றியே வில்லில் நாணேற்றி வேட்டையாட, ஏகலைவனுக்கு வில்வித்தையின் அபூர்வ முறையைக் கற்றுக் கொடுத்தேன்... அதுதான் அவனுடைய குருபக்தியால் அவனுக்குக் கிடைத்த பரிசு...'' என்றான் மதுசூதனன்.

''ஆண்டவனின் பிரசாதமல்லவா அது!'' என்றான் மாத்ரி மைந்தன்.

புன்னகை புரிந்தான் புருஷோத்தமன்.

□ □ □

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy